Registered as a News Paper in Sri lanka
விலை : ரூபா 10 .00
தினப்பதிப்பு
தினமுரசு
THINAMURASU
முரசு - 04 திருவள்ளுவர் ஆண்டு 2044 கார்த்திகை 06 வெள்ளிக்கிழமை (22.11.2013) பக்கங்கள் 20 ஓசை - 053


Tilko Jaffna City Hotel
❖ Banquet Hall
❖ Conference Hall
❖ Restaurant
❖ Luxurious rooms
❖ Swimming Pool
❖ Gymnasium/spa
70/6, K.K.S Road, Jaffna.
E-Mail - tilkojaffna@gmail.com
Web - www.Cityhoteljaffna.com
T.P - 0212225969
Hotline: 0212229497
(C/3175)



# புதிய வரவு செலவுத்திட்டம் சமர்ப்பித்தார் ஜனாதிபதி

- அரச ஊழியருக்கு 1200/= வாழ்க்கை செலவுப் படி
- பொருளாதார வளர்ச்சி 7.8 வீதம்
- துண்டு விழும் தொகை அதிகம்
- மீண்டும் விவசாய ஓய்வூதியம்

(கொழும்பு)

அடுத்த ஆண்டுக்கான வரவு செலவுத்திட்டத்தை ஜனாதிபதி மகிந்த ராஜபக்ஷ நேற்று நாடாளுமன்றத்தில் சமர்ப்பித்தார்.

நாட்டின் நிதி அமைச்சர் என்ற வகையில் இப்புதிய வரவு செலவுத்திட்டத்தை சமர்ப்பித்து ஜனாதிபதி அங்கு உரைநிகழ்த்தினார். பொதுஜன ஐக்கிய முன்னணியின் அரசின் எட்டாவது வரவு செலவுத் திட்டம் இதுவாகும்.

மானியங்கள் அடங்கலாக அடுத்த ஆண்டுக்கான மொத்த வருமானம் 1469.5 பில்லியன் ரூபாவாகும். மொத்த செலவு 1985.6 பில்லியன் ரூபாவாகும். இதன்படி பற்றாக்குறை 516.1 பில்லியன் ரூபாவாகும். கடந்த வரவு செலவுத்திட்டத்துடன் ஒப்பிடும்போது பற்றாக்குறை (துண்டு விழும் தொகை) இம்முறை அதிகரித்துள்ளது.

எனினும் நாட்டின் பொருளாதார வளர்ச்சி 7.8 வீதம் என்ற இலக்கை நாடு எட்டும் என்றும் எதிர்பார்க்கப்படுவதாகவும் ஜனாதிபதி தனது வரவு செலவுத் திட்ட உரையில் தெரிவித்தார்.

மேலும் நல்லிணக்க ஆணைக்குழுவின் பரிந்துரைகள் அமுலாக்கத்துக்கும் முன்னுரிமை அடிப்படையில் நிதி ஒதுக்கப்பட்டிருக்கிறது.

எனினும் கடந்த ஆண்டை விட பாதுகாப்புச் செலவுக்கு அதிக நிதி ஒதுக்கீடு செய்யப்பட்டிருக்கறது. விவசாயிகளுக்கான உரமானியத்தில் மாற்றம் எதுவும் இல்லை. விவசாய ஓய்வூதியம் மீண்டும் வழங்கப்படவுள்ளது. வயோதிபப்பெண்களின் வாழ்வாதாரத்துக்காக வட்டியின்றிய இலகு கடன்

19 ஆம் பக்கம் பார்க்க

## இணைத்தலைவராக விக்னேஸ்வரன்

(யாழ்ப்பாணம்)

யாழ். மாவட்ட ஒருங்கிணைப்புக்குழுவின் இணைத்தலைவராக வடமாகாண முதலமைச்சர் சி.வி.விக்னேஸ்வரன் நியமிக்கப்பட்டுள்ளார்.

இது தொடர்பான கடிதமொன்று ஜனாதிபதி செயலகத்

19 ஆம் பக்கம் பார்க்க

## வலி.வடக்கு விவகாரம் கூட்டமைப்புக்குள் மோதல்

(யாழ்ப்பாணம்)

தமிழ்த்தேசியக் கூட்டமைப்புக்குள்ளேயே ஏட்டிக்குப் போட்டியாக வலி.வடக்கு மீள்குடியேற்றத்தை வலியுறுத்தும் இரண்டு அமைப்புக்கள் செயற்படும் நிலை உருவாகியுள்ளது.

பிரித்தானியப் பிரதமர் யாழ்.மாவட்டத்திற்கு விஜயம் செய்து வலி.வடக்கு மக்களைச் சந்தித்துவிட்டு திரும்பிய நிலையில் தமிழ்த்தேசியக் கூட்டமைப்புக்குள்ளே ஏற்கனவே வலி. வடக்கு மீள்குடியேற்றத்தை வலியுறுத்திச் செயற்பட்டு வந்த பிரதேச சபைத் தலைவர் சுகிர்தன் தலைமையிலான வலிகாமம் வடக்கு மீள்குடியேற்ற மற்றும் புனர்வாழ்வு என்ற அமைப்புக்குள் கூட்டமைப்பு நாடாளுமன்ற உறுப்பினர்கள் சிலரினால் வலிகாமம் மீள்குடியேற்ற சங்கம் என்ற அமைப்பு புதிதாக உருவாக்கப்பட்டிருப்பதாக தெரிவிக்கப்படுகிறது.

இந்த விடயத்தை வலி. வடக்குப் பிரதேச சபைத் தலைவர் சுகிர்தன் யாழ்.ஊடக அமையத்தில் நேற்று நடாத்

19 ஆம் பக்கம் பார்க்க

## எதிர்க்கட்சிகள் பகிஷ்கரிப்பு


(கொழும்பு)

நாடாளுமன்றில் புதிய வரவு செலவுத்திட்டத்தை சமர்ப்பித்து ஜனாதிபதி நிகழ்த்திய உரையை ஐக்கியதேசியக் கட்சி மற்றும் ஜே.வி.பி. ஆகிய அரசியல் கட்சிகள் பகிஷ்கரிப்பு செய்தன.

இந்த வரவு செலவுத்திட்டத்தை ஐ.தே.கட்சியின் நாடாளுமன்ற உறுப்பினர்கள் வன்மையாக கண்டித்தனர்.

## கமரூனுக்கு எதிராக பிக்குகள் போர்க்கொடி

பிரித்தானியத் தூதரகம் முன்பாக



(கொழும்பு)

ராவண பலய அமைப்பைச் சேர்ந்த பௌத்த பிக்குகள் நேற்று கொழும்பிலுள்ள பிரித்தானியத் தூதரகத்துக்கு முன்பாக எதிர்ப்புப் போராட்டத்தை நடத்தியுள்ளனர்.

இலங்கைக்கு எதிராக அனைத்துலக போர்க்குற்ற விசாரணை எச்சரிக்கை விடுத்துள்ள பிரித்தானியப் பிரதமர் டேவிட் கமரூனுக்கு எதிர்ப்புத் தெரிவித்தே, இந்தப் போராட்டம் நடத்தப்பட்டுள்ளது.

இலங்கையில் உள்நாட்டு விவகாரங்களுக்குள் தலையிடுவதற்கோ, மனிதஉரிமை மீறல்கள் தொடர்பாக விசாரணை நடத்துவதற்கோ காலக்கெடு விதிப்பதற்கோ, பிரித்தானியப் பிரதமருக்கு எந்த உரிமையும் கிடையாது என்று ராவண பலய தெரிவித்துள்ளது.

பிரித்தானியாவின் உத்தரவு

19 ஆம் பக்கம் பார்க்க

## பாரபட்சம் அற்ற நிதி ஒதுக்கீடு

(கொழும்பு)

ஜனாதிபதி மகிந்த ராஜபக்ஷவினால் நேற்றைய தினம் சமர்ப்பிக்கப்பட்ட வரவுசெலவுத் திட்டத்தில் எவ்வித பாரபட்சமின்றி நிதி ஒதுக்கீடு இடம்பெற்றுள்ளதாக பாரம்பரிய கைத்தொழில்கள் மற்றும் சிறுதொழில் முயற்சி அபிவிருத்தி அமைச்சர் டக்ளஸ் தேவானந்தா தெரிவித்துள்ளார்.

19 ஆம் பக்கம் பார்க்க



## யுத்தகால உரிமை மீறல் பூரண விசாரணை தேவை

(புதுடில்லி)

வடக்கில் யுத்தகாலத்தில் இடம்பெற்றதாகக்கூறப்படும் மனித உரிமை மீறல்களுடன் சம்பந்தப்பட்டவர்களை இலங்கை அரசு தண்டிக்கவேண்டும் என்று இந்தியாவின் மத்திய நிதியமைச்சர் ப.சிதம்பரம் கேட்டுக்கொண்டுள்ளார்.

சிங்கப்பூரில் இரண்டாவது தெற்கு ஆசிய மாநாடு நேற்று தொடங்கியது. அதில் பேசிய மத்திய நிதியமைச்சர் ப.சிதம்பரம், மனித உரிமைகள் மீறப்பட்டது தொடர்பாக முழுமையாக விசாரணை நடத்தி, குற்றவாளி



19 ஆம் பக்கம் பார்க்க

## பனைமரம் வீழ்ந்து குடும்பப்பெண் உயிரிழப்பு

(கிளிநொச்சி)

கிளிநொச்சி விசுவமடு றெட்பானாவில் தறித்த பனைமரம் பெண்ணொருவர் மீது விழுந்ததில் அவர் பரிதாபகரமாக உயிரிழந்தார்.

விசுவமடு றெட்பானா வள்ளுவர்புரத்தைச் சேர்ந்த அந்தோனியம்மா (வயது - 56) என்பவரே உயிரிழந்தவராவார். நேற்றுக்காலை வேளை இடம்பெற்ற இச்சம்பவம் தொடர்பாக தெரியவருவ

19 ஆம் பக்கம் பார்க்க

## வடமாகாண கல்வி அமைச்சரின் வாகனம் மோதி படுகாயமடைந்த குடும்பஸ்தர் உயிரிழந்தார்

(கிளிநொச்சி)

வடமாகாண கல்வி அமைச்சர் பயணம் செய்த வாகனம் மோதி படுகாயமடைந்த நபர் சிகிச்சை

19 ஆம் பக்கம் பார்க்க

05



கரிசனை

18



உயர் விருது

# சட்டவிரோதமாக பனைமரம் தறிப்பு

வலி.மேற்கு பிரதேசத்தில் இரவு வேளைகளில் சட்டவிரோதமாக பனைமரம் தறிக்கப்டுவதாக சுட்டிக்காட்டப்பட்டுள்ளது.

தற்போது விடுவிக்கப்பட்ட பகுதிகளான பொன்னாலை தொடக்கம் திருவடிநிலை வரையான மக்கள் குடியிருப்பற்ற பகுதிகளில் இவ்வாறு சட்டவிரோதமான முறையில் தினமும் 20 வரையான பனைமரங்கள் தறிக்கப்படுவதாகவும், அண்மையில்கூட இவ்வாறான சட்டவிரோத மரம் கொண்டுசென்றவர்கள் அண்மையில் காரைநகர் பிரதேச செயலாளரினால் கைது செய்த சம்பவம் நிகழ்ந்துள்ளது.

ஆயினும் தொடர்ச்சியாக இவ்வாறான சம்பவங்கள் இடம்பெறுவதால் திருவடிநிலை பகுதியில் பொலிஸ் காவலரன்கள் ஒன்றை அமைக்குமாறும், பொலிஸ் ரோந்தை அதிகரிக்குமாறும் கோரப்பட்டுள்ளது. மாவட்ட ஒருங்கிணைப்புக்குழுக கூட்டத்தில் இக்கோரிக்கை விடுக்கப்பட்டதைத் தொடர்ந்து உடனடியாக இச்சட்ட விரோத செயற்பாட்டை தடுத்துநிறுத்த நடவடிக்கை எடுக்கமாறு அமைச்சர் டக்ளஸ் தேவானந்தா பொலிஸாருக்கு உத்தரவிட்டார். (இ)

# கசிப்பு வைத்திருந்தவருக்கு தண்டம்

முல்லைத்தீவு புதுக்குடியிருப்பு பகுதியில் 6 போத்தல் கசிப்பு வைத்திருந்ததாக குற்றம் சாட்டப்பட்ட நபர் ஒரு வருக்கு 50000 ரூபா தண்டப் பணம் விதித் ததுடன், கசிப்பு போத்தல்களை அழித்துவிடுமாறு முல்லைத்தீவு மாவட்ட நீதிபதி மாணிக்கவா சகர் கணேசராஜா உத்தரவிட்டுள்ளார்.

மேற்படி தண்டப்பணம் செலுத்தத்தவறின் 8 மாத கால சிறைத்தண்டனை விதித்து தீர்ப்பு அளிக்கப்பட்டுள்ளது. (170)

# யாழ்.போதனா வைத்தியசாலையில் எழுபது வைத்தியர்கள் பற்றாக்குறை

(யாழ்ப்பாணம்)

யாழ்.போதனா வைத்திய சாலைக்கு இன்னும் 70 வைத்தியர்கள் பற்றாக்குறை நிலவுவதாக வடமாகாண சுகாதார சேவைகள் பணிப்பாளர் எஸ்.கேதீஸ்வரன் தெரிவித்தார்.

யாழ்.செயலகத்தில் இடம்பெற்ற மாவட்ட அபிவிருத்திக் குழுக கூட்டத்திலேயே அவர் இவ்வாறு தெரிவித்தார்.

அவர் மேலும் தெரிவிக்கையில் சுகாதாரத் திணைக்களம் யாழ்.போதனா வைத்தியசாலைக்கு தற்போது வைத்தியர்களை வழங்கியுள்ள போதிலும் இன்னும் 70 வைத்தியர்களுக்கு பற்றாக்குறை நிலவுகின்றது.

அதுமட்டுமல்லாமல் பல்வேறு கிராமிய வைத்தியசாலைகளுக்கு விரைவில் நிரந்தர வைத்தியர்கள் நியமிக்கப்படுவர். அது மட்டுமல்லாமல் தீவகத்தில் குறிப்பாக நெடுந்தீவில் கடமையாற்ற ஒரு வைத்தியர் விரைவில் முன்வந்துள்ள நிலையில் விரைவில் அங்கு நிரந்தர வைத்தியர் நியமிக்கப் படுவதுடன் வேலணை வைத்தியசாலைக்கு புதிய அம்புலன்ஸ் ஒன்றும் வழங்க நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டுள்ளதாக அவர் மேலும் தெரிவித்தார். (இ)

# முன்பள்ளிச் சிறார்களின் கண்காட்சியும் கலைநிகழ்வும்

(யாழ்ப்பாணம்)

யாழ்.மாநாகர சபை முன்பள்ளி சிறார்களின் கண்காட்சியும கலைநிகழ்ச்சியும் எதிர்வரும் திங்கட்கிழமை காலை 9.30 மணிக்கு நல்லூரிலுள்ள முன்பள்ளி பண்டாரமாளிகை வளவில் இடம்பெறவுள்ளது.

யாழ்.மாநகர ஆணையாளர் செ.பிரண வநாதன் தலைமையில் நடை பெறவுள்ள இந்நிகழ்விற்கு பரதம விருந்தினராக யாழ்மாநகர முதல்வர் திருமதி யோகேஸ்வரி பற்குணராசா சிறப்பு விருந்தினர்களாக ஆரம்ப பிள்ளைப் பருவ அபிவிருத்திப் பிரிவு பணிப்பாளர் செல்வி ஜெயாதம் பையா, திருமதி சறோஜினி சிவச்சந்திரன், யாழ். வலய முன் பள்ளி உதவிக் கல்விப் பணிப் ப்ாளர் க.விமலநாதன் ஆகியோர கலந்து கொள்ளவுள்ளனர். (சி)

# கிராமிய அபிவிருத்தி திட்டங்களை செயற்படுத்துவது குறித்து ஆராய்வு



(முழங்காவில்)

பூநகரி பிரதேச சபையின் எல லைப்பரப்பில் 2014 ஆண்டுக்கான கிராமிய அபிவிருத்தித் திட்டங்களை இனம் கண்டு செயற்படுத்துதல் சம்பந்தமான ஆலோசனைக் கூட்டம் கடந்த 18 ஆம் திகதி காலை பூநகரிப் பிரதேச சபை மண்டபத்தில் பிரதேச சபை செயலாளர் திருமதி எம்.சிவகுமார் தலைமையில் இடம்பெற் றது.

இக் கூட்டத்தில் சனசமூக நிலையங்களின் தலைவர் செயலாளர்கள், கிராமிய அபிவிருத்திச் சங்க பிரதிநிதிகள், மாதர் கிராம அபிவிருத்திச் சங்க பிரதிநிதிகள் என ஐம்பதுக்கு மேற்பட்டோர் கலந்து கொண்டனர்.

தங்களது பகுதிகளில் அவசியமாக மேற்கொள்ளப்பட வேண்டிய பொதுக்கிணறுகள், மலசல கூடங்கள், வீதிகள், மதகுகள் போன்ற வேலைத்திட்டங்களை முன்வைத்தனர்.

இக் கூட்டத்தில் பிரதேச சபைத் தலைவர் பொ.ஸ்ரீஸ்கந்தராசா, சனசமூக நிலைய அபிவிருத்தி உத்தியோகத்தர், ம.மகேந்திரன் பிரதேச சபை உறுப்பினர் க.கணேசன் ஆகியோரும் கலந்துகொண்டு கருத்துக்களை முன்வைத்தனர். (112)

# கொடுப்பனவு வழங்கல்

தென்மராட்சிப் பகுதியில் உள்ள ஊனமுற்ற வலுவிழந்தோர்க்கான கார்த்திகை மாத மூவாயிரம் ரூபா காசோலை சாவகச்சேரி பிரதேச சமூக சேவை அலுவலகத்தில் கடந்த 13 ஆம் திகதி தொடக்கம் வழங்கப்படுகிறது. மேலும் மார்கழி மாதக் கொடுப்பனவு எதிர்வரும் மாதம் 11 ஆம் திகதி தொடக்கம் வழங்கப்படுமென சமூக சேவைப் பிரிவினர் தெரிவித்தனர்

# மஞ்சள் கோட்டை மதிக்காததால் அபராதம்

கிளிநொச்சி ஏ-9 வீதி மற்றும் மத்திய கல்லூரிக்கு முன்பாக மஞ்சள் கோட்டுக் கடவையை மதிக்காது வாகனத்தை செலுத்திச் சென்ற 2 நபர்களுக்கு கிளிநொச்சி நீதிமன்றத்தால் தலா ஆயிரத்து 500 ரூபா அபராதம் விதிக்கப்பட்டுள்ளது.



குறித்த நபர்களை கிளிநொச்சி பொலிஸார் கைது செய்து நேற்றுக் கிளிநொச்சி மாவட்ட நீதிமன்றில் ஆஜர்படுத்தினர்.

வழக்கு விசாரணை செய்த நீதிபதி குறித்த குற்றவாளிகளுக்கு தலா 1500 ரூபா அபராதமாக செலுத்துமாறு உத்தர விட்டார். (கே)

# மரங்கள் தறிக்கத்தடை

(முல்லைத்தீவு)

முல்லைத்தீவு மாவட்டத்தின் கரைத்துரைப்பற்று பிரதேச செயலகப் பகுதியில் தேக்கு மரம் தவிர்ந்த ஏனைய மரங்கள் சொந்தத் தேவைகளுக்காக அன்றி வியாபார நோக்கங்களுக்காக தறிப்பதற்கு தடை உத்தரவு பிறபிக்கப்பட்டுள்ளது.

இதுதொடர்பாக குறித்த பிரதேச செயலரால் மேற்படி தேக்குமரம் தவிர்ந்த ஏனைய மரங்களை தறிப்பதற்கு அனுமதி வழங்க வேண்டாம் என அனைத்து கிராம அலுவலர்களுக்கும் கடிதம் அனுப்பப்பட்டுள்ளது. (125)


சனிக்கிழமை அதிர்ஷ்டம்

உத்தியோகபூர்வ முடிவுகள்

சீட்டிழுப்பு இல. 2480 திகதி 20-11-2013

ஆங்கில எழுத்து: J

வெற்றி எண்கள் 05 35 51 52

போனஸ் இல: 50

ஜக்பொட் பரிசு ரூ.13,239,725/- வெல்லப்படவில்லை

| இணையும் இலக்கங்கள் | வெற்றியாளர் தொகை | பரிசுத் தொகை | மொத்த பரிசுத் தொகை |
|---|---|---|---|
| 1 இல | 246891 | 20/- | 4,937,820/- |
| 2 இல | 17578 | 100/- | 1,757,800/- |
| 3 இல | 352 | 1,000/- | 352,000/- |
| 4 இல | 01 | 1,000,000/- | 1,000,000/- |
| 1 இல + ஆங்கில எழுத்திற்கும் | 10190 | 40/- | 407,600/- |
| 2 இல + ஆங்கில எழுத்திற்கும் | 745 | 1,000/- | 745,000/- |
| 3 இல + ஆங்கில எழுத்திற்கும் | 19 | 10,000/- | 190,000/- |
| 4 இல + ஆங்கில எழுத்திற்கும் | - | 13,239,725/- | - |
| 1 இல + போனஸ் இல | 11860 | 100/- | 1,186,000/- |
| 2 இல + போனஸ் இல | 560 | 500/- | 280,000/- |
| 3 இல + போனஸ் இல | 05 | 100,000/- | 500,000/- |
| 1 இல + ஆங்கில எழுத்திற்கும் + போனஸ் இல | 429 | 200/- | 85,800/- |
| 2 இல + ஆங்கில எழுத்திற்கும் + போனஸ் இல | 31 | 1,500/- | 46,500/- |
| 3 இல + ஆங்கில எழுத்திற்கும் + போனஸ் இல | - | 150,000/- | - |
| வெல்லப்பட்ட மொத்த பரிசுத் தொகை | 268661 | | 11,488,520/- |

இந்த சனிக்கிழமை சுப்பர் ஜக்பொட் பரிசு

ரூ. 13,913,700/-

அபிவிருத்தி லொத்தர் சபை

(C/3176)




"தயத்த சேவன" மரநடுகை நிகழ்ச்சி திட்டத்தில் வேலணை வடக்கு இலந்தவன பிள்ளையார் ஆலயத்தில் நேற்றுக் காலை மரம் நாட்டப்பட்டது. இதில் வேலணை மாதர் சங்கத் தலைவி க.ரஞ்சிதமலர் மரம் நாட்டுவதையும் அருகில் வேலணை பிரதேச சபை தவிசாளர் சி.சிவராசா, வேலணை வடக்கு ஜே 12 கிராம சேவகர் மற்றும் வேலணை பிரதேச செயலக அதிகாரிகள் நிற்பதைக் காணலாம். (21)

# அபராதம் விதிப்பு

(கிளிநொச்சி)

கிளிநொச்சி கல்மடுநகர்ப் பகுதியில் சட்டவிரோத கசிப்பு வைத்திருந்த நபருக்கு கிளிநொச்சி மாவட்ட நீதிமன்றத்தால் அபராதம் விதிக்கப்பட்டுள்ளது.

கல்மடுநகர் 17 ஆம் கட்டைப் டகுதியில் கசிப்பு வைத்திருந்த குறித்த நபரை கிளிநொச்சி பொலிஸார் கைது செய்து கிளிநொச்சி மாவட்ட நீதிமன்றில் நேற்று ஆஜர்படுத்தினர்.

வழக்கு விசாரணைக்கு எடுத்துக் கொண்ட நீதிபதி குறித்த குற்றவாளிக்கு 45 ஆயிரம் ரூபா அபராதம் விதித்து தீர்ப்பளித்தார். (கே)

# எரிபொருள் மானியப் பெறுமதிக்கேற்ப கடற்றொழில் உபகரணங்களை வழங்க ஏற்பாடு

(யாழ்ப்பாணம்)

யாழ்.மாவட்டத்தில் கடற்றொழிலாளர்களுக்கான எரிபொருள் மானியப் பெறுமதிக்கு அடுத்த ஆண்டு ஜனவரி மாதம் முதல் வலைகளும் நவீன கடற்றொழில் உபகரணங்களும் வழங்கப்படவுள்ளதாக யாழ். மாவட்ட கடற்றொழில் நீரியல்வளத் திணைக்கள உதவிப் பணிப்பாளர் ந.கணேசமூர்த்தி தெரிவித்துள்ளார்.

கடந்த திங்கட்கிழமை யாழ். செயலகத்தில் அமைச்சர் டக்ளஸ் தேவானந்தா தலைமையில் நடைபெற்ற அபிவிருத்திக்குழுக் கூட்டத்தில் கலந்து கொண்டே அவர் இந்தத் தகவலைத் தெரிவித்தார்.

அவர் தொடர்ந்து தெரிவிக்கையில், ஒவ்வொரு வருடமும் இவ்வாறு எரிபொருளுக்கான மானியத்தின் பெறுமதிக்கேற்ப இந்தக் கடற்றொழில் உபகரணங்கள் வழங்கப்படவுள்ளது.

எரிபொருள் மானியத்தைப் பெற்றுககொண்ட கடற்றொழிலாளர்களுக்கே இவை வழங்கப்படவுள்ளதுடன், புதிதாக இந்த மானியத்தில் அதிகரிப்புச் செய்யப்படமாட்டாது.

அத்துடன் யாழ். மாவட்டத்தில் இழுவைப்படகுகளைப் பயன்படுத்தும் உள்ளூர் மீனவர்கள் தமது தொழிலை எதிர்வரும் 30 ஆம் திகதியுடன் நிறுத்திக் கொள்வதாக அறிவித்திருப்பதுடன் ஏற்கனவே நாச்சிக்குடாக் கடற்பரப்பில் இவ்வாறு இழுவைப் படகுத் தொழிலை மேற்கொண்ட ஆறு மீனவர்கள் பிடிக்கப்பட்டதாகவும், இதன் பின்னரே அவர்கள் இவ்வாறு அறிவித்திருப்பதாகவும் தெரிவித்துள்ளனர்.

மேலும் தீவுப்பகுதிக் கடற்பரப்பில் பல வருடங்களுக்கு முன்னர் அத்துமீறி இழுவைப் படகுத் தொழிலை மேற்கொண்ட இந்திய மீனவர்களது 40 படகுகள் கடற்படையினரால் கைப்பற்றப்பட்டு ஊர்காவற்றுறை துறைமுகப் பகுதியில் நிறுத்தி வைக்கப்பட்டிருந்தது. அவை தற்சமயம் துருப்பிடித்திருப்பதன் காரணமாக அவற்றை அப்புறப்படுத்த நடவடிக்கை எடுத்திருப்பதுடன் அவை கரைக்கு கொண்டுவரப்பட்டு இரும்பு விலைக்கு ஏலத்தில் விடப்படவுள்ளது.

யாழ். குடாநாட்டின் நண்டு வலை பயன்படுத்தப்பட்டு நண்டு பிடிக்கப்படுவதால் நண்டு இனம் அழிவடைந்து வருவதாகவும், அத்துடன் மீனினமும் பெருகுவது குறைந்திருப்பதாகவும் தெரிவித்துள்ளார். (பா)

# நெடுந்தீவு - குறிகாட்டுவான் படகுச் சேவை நேர அட்டவணை

(நெடுந்தீவு)

நெடுந்தீவு குறிகாட்டுவானுக்கான படகுச் சேவையின் புதிய நேர அட்டவணை நெடுந்தீவு பிரதேச செயலகத்தினால் வெளியிடப்பட்டுள்ளது.

அரச (குமுதினி) தனியார் படகுகள் இந்த நேர அட்டவணைப்படி சேவையில் ஈடுபடவுள்ளன. இதன்படி குமுதினி திங்கள, புதன், வெள்ளி, சனி, ஞாயிறு தினங்களில் காலை 6.30 இற்கும் பிற்பகல் 2.30 இற்கும் நெடுந்தீவில் இருந்து புறப்படும்.

இப்படகு காலை 9.00 மணிக்கும் பிற் பகல் 4.00 மணிக்கும் குறிகாட்டுவானில் இருந்து நெடுந்தீவு நோக்கிப் புறப்படும்.

சேவையிலீடுபடும் குமுதினிப் படகு செவ்வாய்க்கிழமை காலை 7.30 இற்கும் பிற்பகல் 2.30 மணிக்கும் நெடுந்தீவிலிருந்து புறப்படும்.

முற்பகல் 9.00 மணிக்கும் பிற்பகல் 4.00 மணிக்கும் குறிகாட்டுவானில் இருந்து புறப்படும். தனியார் படகு செவ்வாய்க்கிழமைகளில் சேவையில் ஈடுபடவுள்ளன காலை 6.30 இற்கு நெடுந்தீவிலிருந்து புறப்படும். பிற்பகல் 3.00 மணிக்கு குறிகாட்டுவானிலிருந்து புறப்படும்.

# ஆறுமுகநாவலர் குருபூசைதினம் போட்டி முடிவுகள் வெளியீடு

(மானிப்பாய்)

யாழ்ப்பாண சைவபரிபாலன சபையினரால் ஸ்ரீலஸ்ரீ ஆறுமுகநாவலர் குருபூசைத் தினத்தையொட்டி நடாத்தப்பட்ட பேச்சுப்போட்டி, கட்டுரைப்போட்டி முடிவுகள் வெளியாகியுள்ளன.

இம்முறை போட்டிகளில் யாழ்ப்பாணம், கிளிநொச்சி, முல்லைத்தீவு மாவட்டங்களைச் சேர்ந்த மாணவர்கள் பலர் பங்குபற்றியுள்ளதாக சைவபரிபாலன சபையினர் அறிவித்துள்ளனர்.

இப்போட்டிகளில் வெற்றி பெற்றவர்களுக்கான பரிசில்கள் ஞாயிற்றுக்கிழமை காலை நாவலர் ஆச்சிரம மண்டபத்தில் நடைபெறும் குருபூசைத் தினத்தில் வைத்து வழங்கப்படவுள்ளன.

வெற்றி பெற்றவர்களை அன்றைய தினம தவறாது சமூகமளித்து பரிசில்களைப் பெற்றுக் கொள்ளுமாறு ஏற்பாட்பாளர்கள அறிவித்துள்ளனர்.

இப்போட்டியில் முதல் 5 இடங்களைப் பெற்றவர்களின் விபரம் வருமாறு,

மேற்பிரிவு

ப.தர்சினி (வேம்படி மகளிர் உயர்தரப் பாடசாலை), சி.தர்ஷா (அருணோதயக் கல்லூரி), ஸ்ரீ.லக்ஷனா (வயாவிளான் மத்திய மகா வித்தியாலயம்), சி.அனோஜிதா (விக்டோரியாக் கல்லூரி), க.தபோதினி (முத்துத்தம்பி மகா வித்தியாலயம்).

கட்டுரைப் போட்டி
மேற்பிரிவு

தி.கலைச்செல்வி (மகாஜனக் கல்லூரி), யோ.யுசாந்தி (கிளி.மத்திய மகா வித்தியாலயம்), பி.பிறேமலதா (முல். வித்தியானந்தக் கல்லூரி), ப.அனுஷா (மீசாலை வீரசிங்கம் மத்திய கல்லூரி), நி.நிதர்சினி (கொக்குவில் இந்துக் கல்லூரி). (48) *(முற்றும்)*

# வீதிப் புனரமைப்பு வேலைகள் நிறைவு

(கொடிகாமம் )

சாவகச்சேரி பிரதேச சபைக்குட்பட்ட வரணி இயற்றாலை கிராம சேவையாளர் பிரிவிலுள்ள இரண்டு வீதிகள் திருத்தும பணி நிறைவு பெற்றுள்ளன.

2 கிலோமீற்றர் நீளமான காளி கோவில் வீதியும் ஒரு கிலோமீற்றர் நீளமான பிள்ளையார் கோவில் வீதியும் திருத்தப்பட்டுள்ளன.

பிரதேச சபையினால் ஒதுக்கப்பட்ட 150,000 ரூபா நிதியுடனும் பிரதேச மக்களின் பங்களிப்புடன் 3 கிலோமீற்றர் நீளமான இரு வீதிகளும் திருத்தப்பட்டுள்ளன.

இந்த வீதி திருத்தம் செய்ததனால் 200 இற்கும் மேற்பட்ட குடும்பங்கள் நன்மையடைந்துள்ளதாக பிரதேச மக்கள் தெரிவிக்கின்றனர். (130)

# வாழ்வாதாரத் திட்டத்தின் கீழ் கோழிக்குஞ்சுகள் வழங்கல்

(முழங்காவில்)

திவிநெகும வாழ்வாதாரத் திட்டத்தின் கீழ் பூநகரி பிரதேச செயலர் பிரிவில் 222 பயனாளிகளுக்கு ஒருமாதம் முதிர்ச்சி அடைந்த முட்டையிடும் பேட்டுக்கோழிக் குஞ்சுகள் இலவசமாக வழங்கப்பட்டுள்ளது.

பூநகரி கால்நடை வளர்ப்புக் கூட்டுறவுச் சங்கத்தின் அனுசரணையோடு ஒருமாதம் வளர்க்கப்பட்டு நோய்த் தடை ஊசி மருந்துகள் ஏற்றப்பட்டே பயனாளிகளுக்குச் சென்றவாரம் வழங்கப்பட்டதாகவும், ஒருவருக்கு 10 குஞ்சுகள் வீதம் விநியோகம் இடம்பெற்றது.

பூநகரிப் பகுதியில் கோழி வளர்ப்பில் மக்கள் ஆர்வம் காட்டுவதால் இதுவரை பல ஆயிரக் கணக்கான குஞ்சுகள் வழங்கப்பட்டதாக சம்பந்தப்பட்ட அலுவலரால் தெரிவிக்கப்பட்டது. (112)

# "சிறீதர பக்தி" VS குருகுலராஜா




'சிறீதர பக்தி'யைப் பற்றி உங்களுக்குக் கொஞ்சம் சொல்ல வேணும்.

சிலருக்கு இருந்தாற்போல சில குணங்கள் பிறக்கும்.

நல்லாத் தண்ணி அடிச்சுக்கொண்டு பம்பலடிச்சுத் திரிஞ்ச ஆட்கள் அதையெல்லாம் விட்டுப்போட்டு, நாள் கிழமை தவறாமல் கோயில் குளம், சமூகத்தொண்டு என்று புதுஜென்மம் எடுத்ததைப்போல மாறியிருப்பார்கள்.

வெள்ளி செவ்வாய் என்று பாராமல் மாமிச பட்சணியாக – அனைத்தும் உண்ணிகளாக இருந்தவர்கள் பரம்பரைச் சைவக்காரர்களாகியிருப்பார்கள்.

வாழ்க்கை முழுக்க பொய்யும் புரட்டும் சுத்துமாத்துமாக இருந்தவர்கள் தொண்டு நிறுவனத்தின் பிரதிநிதிகளாகவோ பொது அமைப்பின் முக்கியஸ்தராகவோ மாறி வெள்ளையும் சொள்ளையுமாக இருப்பார்கள்.

காலம் முழுக்க பெண்களின் பின்னால் அலைந்தவர்கள், ஏகபத்தினி விரதனாக காட்சியளிப்பார்கள்.

இப்படி மாற்றங்களும் மாறிய காட்சிகளும் மாறும் மனிதர்களும் என ஆயிரம் வகையுண்டு.

அரசியலிலும் அதிரடி மாற்றங்கள் ஆயிரம் நடப்பதுண்டு.

ஒரு காலம் அகிம்சை என்றால் பிறகொரு காலம் ஆயுதம்.

ஒரு காலம் ஆயுதம் என்றால் பிறகொரு காலம் அகிம்சை.

ஆயுதமும் அகிம்சையுமாக இருக்கும் காலமும் உண்டு.

அரசியலே வேண்டாம் என்றும் அது ஒரு காஞ்சுரங்காய் என்றும் இருந்தவர்கள் அரசியலில் குதித்து அதிரடி செய்வதும் உண்டு.

அதுதான் இப்போது நடந்து கொண்டிருப்பது.

முன்னர் பள்ளிக் கூட வாத்தியாராக இருந்து, பிறகு அதிபராகி, பிறகு உதவிக் கல்விப் பணிப்பாளராகி, ஓய்வை அண்மித்த காலத்தில் கல்விப் பணிப்பாளராகப் பதவி வகித்து ஓய்வைப்பெற்றவர் குருகுலராஜா.

ஓய்வுக்குப்பிறகு, சும்மா இருக்க அலுப்பாக இருக்குதென்று உள்ளூர்த் தொண்டு நிறுவனங்களில் சில பொறுப்புகளைப் பார்த்தார்.

அப்படிப் பார்த்தவரை மெல்ல மெல்ல அரசியலுக்கு இழுத்திருக்கிறார் சிறிதரன் எம்.பி.

கல்விப் பணிப்பாளர் காலத்தில் குருகுலராஜா சிறிதரனுக்கு அதிகாரி. சீனியர்.

அரசியலில் குருகுலராஜாவுக்கு சிறிதரன் வழிகாட்டி. சீனியர்.

இப்ப குருகுலராஜா கல்வி அதிகாரி அல்ல. அரசியல்வாதி. ஆகவே இங்கே சிறிதரன்தான் வழிகாட்டியும் சீனியரும் ஜீனியசும்.

அப்படியென்றால், சிறிதரனை விட குருகுலராஜா பத்தடி கூடுதலாகப் பாய வேணும்.

எனவேதான் அவர் இப்பொழுது எங்கே சென்றாலும் முன்வரிசைப் போராட்டக்காரராக (விரைவில் ஒரு அதிரடிப் போராளியாகினாலும் ஆச்சரியமில்லை) சம்மணமிடுகிறார்.

எந்தக் கூட்டத்துக்குப் போனாலும் அங்கே இன உரிமையைப் பற்றியும் அரசியல் விடுதலையைப் பற்றியும் எடுத்த எடுப்பிலேயே முழங்குகிறார்.

அண்மையில் ஒரு முன்பள்ளியில் நடந்த நிகழ்வில் கலந்து கொண்டவர் அங்குள்ள ஐந்து வயதுப் பிள்ளைகளுக்கே அரசியற் பாடம் நடத்தியிருக்கிறார்.

இதெல்லாம் சும்மா அல்ல. காரியத்தோடுதான்.

மிகக் குறுகிய கால (மூன்றுமாத காலத்தில்) அரசியற் பிரவேசத்தில் ஒரு மாகாண அமைச்சர் பதவி கிடைத்திருக்கிறது என்றால் அதற்காக எத்தனை தியாகங்களைச் செய்ய வேணும்!?

தியாகங்களைச் செய்து பழக்கமில்லாதவர் இப்படி 'சிறிதர பக்தி'யைப் பாடியோ அல்லது சிறிதரனைப்போல அதிரடியாக அரசியல் அறிக்கைகளையும் பிரகடனங்களையும் (மூளைக்கும் வாய்க்கும் சம்மந்தமில்லாத கதைகள்) விட்டோதான் அரசியல் செய்ய வேணும்.

ஆனால் குருகுலராஜாவிடம் மக்கள் எதிர்பார்ப்பது அரசியலை அல்ல. அவர் தேர்வு செய்யப்பட்டதும் அவருக்குக் கல்வி அமைச்சர் பதவி கிடைத்ததும் அவர் ஒரு கல்வியாளர் என்ற காரணத்தினால்தான்.

ஆகவே குருகுலராஜா வடமாகாணத்தின் பின்தங்கிய பிரதேசங்களின் கல்வியை முன்னேற்றிச் சாதனை படைக்க வேண்டும். அதுதான் அவருடைய பணி.

பாவம், அரைக்காற்சட்டை, நீளக்குடுமி, ஆங்கிலப்பத்திரிகை, தண்ணியடிக்கும் நாலு அதிபர்களும் ஆறேழு வாத்திமாரும் கிக்கேறினால் ஒரு பழைய கிற்றாரில் மன்னிக்கவும் இப்பொழுது அமெரிக்காவில் இருக்கும் மகன் வாங்கியனுப்பிய புதிய கிற்றாரில் இசை, சனி – ஞாயிற்றுக்கிழமை என்றால் ஒரு சின்னப்பார்ட்டியுமாக காலுக்கு மேல் கால் போட்டுக் கொண்டு பொழுதைக் கழித்தவரை தெருவிலே இறக்கி, வேட்டியைக் கட்டி ஆடுங்கள் நாடகத்தை என்று விட்டிருக்கிறார் சிறிதரன்.

என்னதான் உயர் அதிகாரியாக இருந்தாலும் அவரை வளைத்து மடக்கித் தனக்குப் பின்னே கொண்டு வந்து நிறுத்தியிருக்கும் சிறிதரன் குருகுலராஜாவை விடக் கெட்டிக்காரர்தான்.

முன்னேறும் சந்தர்ப்பங்கள் தாமாக வருவதில்லை அவை உருவாக்கப் படுகின்றன. - ஆரிஸன் ஸ்லவெட்மார்டன்.

தினப்பதிப்பு
தினமுரசு
THINAMURASU
இல:373, பிரதான வீதி, யாழ்ப்பாணம்.
தொலைபேசி : 0212223628, கைத்தொலைபேசி : 0777193264
தொலைநகல் : 0212221811, thinamurasu@live.com
Online : www.thinamurasu.net

## தொடர்நாடக அரசியல்!

ஓர் அறிஞர் சொன்னார்: "தொலைக்காட்சி என் அறிவு வளர்ச்சிக்கு உதவுகிறது என்பது உண்மைதான்; வீட்டிலுள்ளவர்கள் தொலைக்காட்சி பார்க்கவென்று அமர்ந்துவிட்டால், நான் ஏதாவது புத்தகத்தை எடுத்துக்கொண்டு எனது அறைக்குள் போய்விடுவேன்".

தொடர்நாடகங்களுக்கு அடிமையாகிவிட்டவர்களைப் பார்க்கும்போது பயம் வருவதென்னவோ உண்மைதான். மதுவுக்கு அடிமையானவர்களுக்கு அந்த நேரம் வந்தவுடன் கை, கால்கள் நடுங்கத் தொடங்குமே... அதுபோன்றதொரு போதையாகத்தான் இதுவும். நாடக சீரியல்கள் வீட்டிலுள்ளோரைக் கட்டிக் கதிரையில் இருத்தி வைத்திருக்கின்றன. வானொலியில், தொலைக்காட்சியில் செய்தி கேட்பது எல்லாம் அருகி விட்டது. பெண்களே சதி செய்து, பெண்களே கொலைகளும் செய்து, பெண்களே கஷ்டமெல்லாம் பட்டு, பெண்களே பிழியப் பிழிய அழுது, இப்படியெல்லாம் நடக்குமா என்பதைக் கூட யோசிக்க விடாமல் அடிமைப்படுத்தி நம்மை ஆள்கின்றன தொலைக்காட்சி நாடகங்கள்.

இதுபற்றி எத்தனை கிண்டல்களையும் எரிச்சல்களையும் பலரிடமிருந்தும் கேட்டுவிட்டோம்! கடவுள்தான் ஒரு தொலைக்காட்சித் தொடரை முடிவுக்குக் கொண்டுவருவார் – அவருடைய பொறுமை முழுவதுமாகச் சோதிக்கப்பட்ட பின்னர். என்று சொல்லப்படுவதைத்தான் நம்ப வேண்டியிருக்கிறது.

மனோதத்துவத்தில் தன்னை இழத்தல் என்பது பற்றி ஒரு பாடம் உண்டு. இந்த இழப்பு கூட்டத்தில் நடக்கலாம். தனிமையிலும் நடக்கலாம். வீட்டுக் கூடத்திலும் நடக்கலாம். தொலைக்காட்சித் தொடர்கள் இதைத்தான் செய்துகொண்டிருக்கின்றன.

எல்லாவற்றையும் எல்லை மீறிய அளவில் மிகைப்படுத்துவதாகவும், செயற்கைத் தன்மையான வசனங்களும், யதார்த்தத்துக்குச் சற்றேனும் ஒத்துவராத ஆர்ப்பாட்டங்களுமாக பேராதரவு பெற்றுத் தமிழ் மனங்களைப் பிரதிநிதித்துவப் படுத்திக் கொண்டிருப்பதில் சினிமாவைத் தொடர்ந்து இப்போது தொலைக்காட்சித் தொடர்களும்! திணற வைக்கும் மிகைத்தன்மையே இவற்றின் வாய்பாடு. வெறும் வாய்வீச்சுக்களோடு உணர்ச்சிவசப்படவும், யதார்த்தத்தை விட்டுப் போலி உணர்வுகளில் தேய்ந்து சிதைவதற்கும் நம்மைத் தயார்படுத்துகின்றன இவையும்.

காட்சிகளால் சொல்லுதல், சொல்லாமல் சொல்லுதல், நடக்கக் கூடியதைச் சொல்லுதல் என்பவை பற்றி எந்தப் பொருட்படுத்தலுமில்லாமல், ஆடம்பர ஒப்பனைகளும் அலங்கார வசனங்களுமாக நம்மை யதார்த்தத்திலிருந்து பிய்த்தெடுத்து சமூகத்தோடு சம்பந்தமில்லாத அந்தர உலகில் மிதக்க விடுகின்றன.

சொல்லாமல் சொல்வதுதான் அழகு. நாடகம், இசை, ஓவியம், சினிமா எல்லாவற்றிற்கும் இது பொருந்தும். இப்படி சொல்லாமல் சொல்லப்படும், பார்க்காமல் பார்க்கப்படும், கேட்காமல் கேட்கப்படும் விஷயங்களுக்கு எப்போதும் அழுத்தமும் தாக்கமும் அதிகம். நாங்களோ எல்லாவற்றையும் ஆர்ப்பாட்டமாக வாய் வலிக்க முழக்கித் தீர்ப்பதிலேயே மற்றவற்றைக் கோட்டைவிட்டுக் கொண்டிருக்கிறோம் – நிஜ வாழ்க்கையிலும் கூட.

நிஜத்தைக் காண மறுக்கும் பிடிவாதம், கற்பனையில் உள்ள பெருமிதத் திளைப்புகளுக்கே முக்கியத்துவம், ஆர்ப்பாட்டமான துன்ப அரற்றுகையில் திருப்தி, ஐந்து சதத்துக்கும் பிரயோசனமில்லாத வெற்று வீர முழக்கங்கள், உண்மைநிலையை ஆராய முன்வராது தங்களது நம்பிக்கைகள் கனவுகளுக்காக மக்களைப் பகடையாக்குதல் என்று ஒரே படுத்தாகப் படுத்திக் கொண்டிருக்கிறார்கள். தொலைக்காட்சித் தொடர்நாடகங்களும் சரி, இங்கு தொடரும் அரசியல் நாடகங்களும் சரி. உணர்ச்சிகளைச் சுரண்டி நடக்கும் வியாபாரமாகத்தான் தெரிகிறது. இன்றைய வாழ்வை மேம்படுத்திக்கொள்வதற்கான யதார்த்தத்தை எண்ணுவதை விட ரோசத்திற்காக நம் வாழ்வையே வதைத்துக்கொள்ளவே நாம் எப்போதும் தயார்.

- ஆசிரியர்.

# பல்வேறு கோரிக்கைகளை முன்வைத்து மன்னார் மீனவர்கள் பகிஷ்கரிப்பு

உலக மீனவர் தினமான நேற்று மன்னார் மாவட்ட மீனவர்கள் பல்வேறு கோரிக்கைகளை முன வைத்து மன்னாரில் தொழில் பகிஷ்கரிப்பில் ஈடுபட்டதோடு தமது கோரிக்கை அடங்கிய மகஜரை கடற்றொழில் நீரியல் வளத்துறை அமைச்சர் ராஜித சேனாரத்னவுக்கு வழங்கும் முகமாக மன்னார் மாவட்ட செயலகத்திற்குச் சென்று மேலதிக அரசாங்க அதிபரிடம் மகஜரைக் கையளித்துள்ளனர்.

மன்னார் மாவட்ட மீனவர் கூட்டுறவுச்சங்கங்களின் சமாசத்தில் அதன் தலைவர் என்.எம். ஆலம் தலைமையில் மன்னார் மாவட்டத்தில் உள்ள மீனவர் சங்கங்களின் பிரதிநிதிகள் காலை 9.45 மணியளவில் ஒன்று கூடினர். பின்னர் அங்கிருந்து ஊர்வலமாக மன்னார் மாவட்ட செயலகத்திற்குச் சென்று தமது கோரிக்கை அடங்கிய மகஜரை மன்னார் மாவட்ட மேலதிக அரசாங்க அதிபர் திருமதி ஸ்ரான்லி டிமெலிடம் கையளித்தனர்.

அந்த மகஜரில் தெரிவிக்கப்பட்டுள்ளதாவது,

உலக மீனவர் தினத்தில் மன்னார் மாவட்ட மீனவர்கள் எதிர்நோக்கும் பிரச்சினைகள் மற்றும் இந்திய சிறைகளில் வாடும் இலங்கை மீனவர்களை விடுதலை செய்தல் தொடர்பாகவும்.

மன்னார் மாவட்ட மீனவர்கள் எதிர் நோக்கும் பிரச்சினைகள், பாதிப்புக்கள், துயரங்கள் இதுவரை எவராலும் கண்டு கொள்ளப்படாமை, இதுவரை இப்பிரச்சினைகள் தீர்வு காணப்படாமை, இதனால் இயலாமையின் வெளிப்பாட்டையும் ஆதங்கத்தையும் இன்றைய உலக மீனவர் தினத்தை பகிஷ்கரிப்பதன் மூலம் உலகறியச் செய்யதீர்மானித்தோம்.

மன்னார் மாவட்டத்தில் நாற்பதாயிரம் உறவுகளை கொண்ட ஒனபதாயிரம் குடும்பங்கள் இக்கடலினூடாக மீன்பிடியின் மூலமான வாழ்வாதாரத்தை நம்பியவர்களாக உள்ளனர்.

தன் உயிரை பணயம் வைத்து உலகுக்கு உணவளிக்கும் அம் மீனவர்களின் நியாயமான கோரிக்கைகள் தீர்வுகான முடியாததுமல்ல இம் மீனவர்களுக்காக அனைவரும் சேர்ந்து தீர்வுகாண்பதுடன் துயர் துடைக்கவழிசமைப்போம்.

இந்திய இழுவைப்படகுகளின் தொழில் ஆக்கிரமிப்பு இந்திய அரசால் தடுத்து வைக்கப்பட்டுள்ள இலங்கை மீனவர்களை விரைந்து விடுதலைசெய்தல், தென்பகுதி மீனவர்களின் மிதமிஞ்சியவருகை

தடை செய்யப்பட்ட சிலிண்டர் தொழிலினால் தொழில் இழப்பு அனர்த்தத்தின் போது பாதிக்கப்படும் மீனவர்களுக்கான இழப்பீடு வழங்கப்படாமை, எரிபொருள் மானிய முத்திரை நிறுத்தத்தின் தாக்கம் என்பவற்றை முன்நிறுத்தி இப்பகிஷ்கரிப்பை மேற்கொள்கின்றோம்.

இவ்வாறான பிரச்சினைகள் தொடர்ந்து வருவதால் மீனவர்கள் கடன் சுமைக்கும் வறுமைக்கும் சிக்குண்டு தொழில்களை கைவிட்டு உயிர்களை மாய்க்கவும் அல்லது நாட்டை விட்டு அயல் நாட்டுக்கு இடம்பெயர்ந்துசெல்லவும் வழிவகுக்கின்றது.

எனவே இந் நியாயமான கோரிக்கைக்கு தீர்வினைவழங்குமாறு மன்னார் மாவட்ட மீனவ சமூகம் சார்பாக கேட்டுநிற்கின்றோம். என குறிப்பிடப்பட்டுள்ளது.

# அதிரடிப்படையினருக்கு எதிரான நடவடிக்கையின் பின்னணியில் யார்?

## ஜாதிக ஹெல உறுமய கண்டுபிடிப்பு

(கொழும்பு)

கிழக்கு மாகாணத்தில் அதிரடிப்படையினருக்கு எதிரான முஸ்லிம் மக்களின் நடவடிக்கைகளின் பின்னணியில் ஸ்ரீ லங்கா முஸ்லிம் காங்கிரஸ் இருப் பதாக ஜாதிக ஹெல உறுமயவின் ஊடகப் பேச்சாளர் நிஷாந்த ஸ்ரீ வர்ணசிங்க குற்றம் சுமத்தியுள்ளார்.

அவர் வெளியிட்டுள்ள அறிக்கையில் மேலும் தெரிவிக்கப்பட்டுள்ளதாவது,

அக்கரைப்பற்று நிந்தவூர் பிரதேசத்தில் மக்களுக்கும் அதிரடிப்படையினருக்கும் இடையில் ஏற்பட்ட மோதலை உருவாக்கியதன் பின்னணியில ஸ்ரீ லங்கா முஸ்லிம் காங்கிரஸ் கட்சி இருந்துள்ளது. 36 மணிநேரம் வீதிகளை மூடி ஆர்ப்பாட்டத்தில் ஈடுபட்டவர்களுக்கு தலைமை தாங்கியவர்கள் மூலம் இது உறுதிப்படுத்தப்பட்டுள்ளது.

கல்முனை, அக்கரைப்பற்று, நிந்தவூர், சம்மாந்துறை மட்டுமல்ல. முழு கிழக்கு மாகாணத்திலும் பொலிஸ் விசேட அதிரடிப்படையினரை பாதுகாப்பு பணிகளில் ஈடுப்டுத்தியுள்ளமைக்கு எதிராக முஸ்லிம் காங்கிரஸும் அதன் தலைமையும் கடந்த காலங்களில் செயற்பட்டு வந்துள்ளது.

கிழக்கு மாகாணத்தில் நடைபெறும் சட்டவிரோத நடவடிக்கைகள் மற்றும் வர்த்தகங்களுக்கு எதிராக அதிரடிப்படையினர் தொடர்ந்தும் சட்டத்தை செயற்படுத்திவருகின்றனர்.

இதனை பொறுத்து கொள்ள முடியாத சட்ட விரோத வியாபாரிகளும் பிரதேச அரசியல்வாதிகளும் பின்னணியில் இருந்தே நிந்தவூர் மோதலை ஏற்படுத்தியுள்ளனர். கிழக்கு மாகாண சபையின் ஸ்ரீ லங்கா முஸ்லிம் காங்கிரஸ் உறுப்பினர் ஒருவர் இதற்கு தலைமை தாங்கி நடத்தியுள்ளார்.

பிரதேசத்தில் இடம்பெறும் சட்டவிரோத செயற்பாடுகளை தங்கு தடையின்றி செய்வதில் அதிரடிப்படையினரின் தலையீடு அவர்களுக்கு தலையிடியாகியுள்ளது. இந்தப் பிரதேசங்களை அரசாங்கத்தின் கட்டுப்பாட்டில் இல்லாத பகுதிகள் போல் வைத்துக் கொண்டு சட்டவிரோத செயற்பாடுகளில் ஈடுபடும் தேவையே அங்குள்ளவர்களுக்கு இருக்கின்றது என அதில் தெரிவிக்கப்பட்டுள்ளது.

# நியமனம் வழங்குவதில் தாமதம் நெருக்கடியில் மிருகவைத்தியர்கள்

(கொழும்பு)

பல்கலைக்கழகங்களில் இருந்து வெளியேறும் கால்நடை வைத்தியர்களுக்கு நியமனம் வழங்குவதில் காணப்படும் தாமதத்தினால் பல்வேறு சிக்கல்கள் ஏற்படுவதாக மிருக வைத்தியர்கள் சங்கம் குறிப்பிடுகின்றது.

இதனால் சில கால்நடை வைத்தியர்கள் வெளிநாடுகளுக்குச் செல்வதாக சங்கத்தின் செயலாளர் டீ.எம்.எம் ஏக்கநாயக்க தெரிவித்துள்ளார்.

2007ஆம் ஆண்டு பல்கலைக் கழகங்களில் இருந்து வெளியேறிய கால்நடை வைத்தியர்களுக்கு இம்முறையே நியமனம் வழங்கப்பட்டுள்ளது.

எனவே, அதன்பின்னர் கடந்த 6 - 7 வருடங்களில் வெளியேறிய வைத்தியர்களுக்கு நியமனம் கிடைக்காத காரணத்தால் பல சிக்கல்கள் ஏற்பட்டுள்ளன.

அவர்கள் தனியார் துறைக்கு செல்வதுடன், பிரத்தியேக சேவைகளில் ஈடுபடுகின்றனர் எனத்தெரிவித்துள்ளார். இந்த விடயம் தொடர்பில் கால்நடை உற்பத்தி மற்றும் சுகாதார சேவைகள் திணைக்களத்தின் பணிப்பாளர் நாயகம் குமார டி சில்வா தெரிவிக்கையில், பல்வேறு கட்டங்களின் கீழ், கால் நடை வைத்தியர்களை இணைத்துக்கொள்ள நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது.

ஆயினும், பெரும்பாலான வைத்தியர்கள் கஷ்டப்பிரதேசங்களுக்கு வழங்கும் நியமனங்களை நிராகரிப்பதாக அவர் தெரிவித்துள்ளார்.

# ரணிலின் அலுவலகத்தில் நுழைந்த பாம்பால் பரபரப்பு

(கொழும்பு)

நாடாளுமன்றத்தில் உள்ள எதிர்க்கட்சித் தலைவர் ரணில் விக்ரமசிங்கவின் உத்தியோகபூர்வ அலுவலகத்தில் வீரியன் பாம்பு ஒன்று நுழைந்துள்ளதாக நாடாளுமன்றத் தகவல்கள் தெரிவித்துள்ளன.

எதிர்க்கட்சித் தலைவரின் அலுவலகத்தில் பணியாற்றும் தொழில்நுட்ப பணியாளர் அலுவலகத்தில் பாம்பு இருப்பதை கண்டுள்ளார்.

அந்த வீரியன் பாம்பு பூச்சாடி ஒன்றில் இருந்ததாக அவர் நாடாளுமன்ற அதிகாரிகளுக்கு தெரியப் படுத்தியுள்ளார்.

இதனையடுத்து நாடாளுமன்ற ஊழியர்கள் இணைந்து எதிர்க்கட்சித் தலைவரின் அலுவலகத்தில் இருந்த பாம்பை அங்கிருந்து அப்புறப்படுத்தியுள்ளனர்.

# வல்லரசு தலைவர்களின் இலங்கை மீதான கரிசனைகள்

சாலையூரான்

**கொழும்பில்** மூன்று நாள் பொது நலவாய மாநாட்டுக்குப் பிறகு, இலங்கைக்கு நெருக்கடி காத்திருக்கிறது என்பதாக சில ஊடகங்களில் செய்திகள் வெளியாகி இருக்கின்றன. இதில் பிரதானமானது இந்தப் போர்க்குற்ற விவகாரத்தால் சர்வதேசத்திடமிருந்து இலங்கை அரசுக்கு ஏதாவது பாதிப்பு ஏற்படுமா என்பதும் அப்பாதிப்பு எத்தகையதாக இருக்கும் என்ற எதிர்பார்ப்புமாகும்.

> கொழும்பு வந்த உலகத் தலைவர்கள் தமிழர் விவகாரத்தில் இலங்கை அரசுக்கு விடுத்த வலியுறுத்தல்கள் இப்போது தென்னிலங்கை தரப்புக்கள் மத்தியில் சிங்கள தேசத்தை மறுதலிப்பதாக வெளிப்பட்டிருக்கின்றன. அதன் விளைவு, இந்த நாட்டை காப்பாற்ற சிங்கள மக்கள் அனைவரும் ஒன்றுபட வேண்டும் என்ற கருத்து வலுப்பெற்று, நடப்பிலுள்ள அரசு மீது அனுதாப அலை வளர்வதற்கே வகை செய்திருப்பதாகத் தோன்றுகிறது.

ஏனெனில் தமிழ்த் தரப்பிலிருந்து இதுவரை முன்னெடுக்கப்பட்டிருக்கும் அரசியல் வழிமுறை இலங்கைத் தலைவர்களுக்கு சர்வதேசத்திடம் தண்டனை வாங்கிக் கொடுப்பதையே பிரதான குறிக்கோளாக கொண்டிருப்பது உறுதிப்படுத்தப்பட்டபின் தென்னிலங்கை தரப்பில் "தமது அரசு" என்றஉணர்வின் அதிகரிப்பும் தங்கள் அரசை எப்படியாவது காப்பாற்ற வேண்டும் என்கிற மனநிலைக்கு சிங்கள மக்களையும் தள்ளிவிட்டதில் இருந்தே இலங்கை விடயத்தில் உலகத்தலைவர்களின் கருத்துக்கள் இப்போது முக்கியத்துவம் பெற்றிருக்கின்றன.

இந்த நிலையில் இலங்கை நிலைவரம் குறித்த செய்திகள் இப்போது உள்நாட்டில் மட்டுமன்றி சர்வதேச ஊடகங்களிலும் பிரதான பேசுபொருளாக மாறியிருக்கின்றன.

இதில் பிரதானமானது இலங்கை -இந்திய உறவு பற்றிய பிரச்சினையாகும். இது விடயத்தில் தமிழகக்கட்சிகளும் கூடவே எமது தமிழ் தலைவர்களும் இணைந்து மேற்கொண்ட நகர்வுகள் இரு அரசுகளதும் தலைவர்கள் மட்டத்தில் மறைமுகமாக சுமுக உறவுக்கு வழி சமைத்திருக்கிறது என்றே கூறவேண்டும்.

இதுதான் நிலைமை எனில் இந்த விவகாரத்தை வைத்து இரு நாடுகளுக்குமிடையில் முரண்பாடுகள் முற்றிவிட்டதாக கூறி அதன் பெயரால் அரசியல் செய்ய முற்படுவது தமிழ் மக்களை தவறான வழிக்கு இட்டுச் செல்லும் ஒரு முயற்சியாகும்.

மற்றையது சர்வதேசத்தின் இலங்கையை மறுதலிக்கும் நிலைப்பாடு பற்றியது. இது விடயத்தில் சர்வதேச விசாரணை, இலங்கை தலைவர்கள் தண்டிக்கப்படுவார்கள், வல்லரசுப்படைகள் இலங்கை வரும் என்பது போன்ற எதிர்பார்ப்புகள் குறிப்பாக தேர்தல் காலங்களில் தமிழ் கூட்டமைப்பினரால் மிகைப்படுத்தப்பட்டிருக்கின்றன.

இருந்தபோதும் பொதுநலவாய மாநாட்டையொட்டி கொழும்பு வந்த வல்லரசுத் தலைவர்களால் இவர்கள் எதிர்பார்த்தது போன்று தமிழர் விவகாரத்தில் குறிப்பான முன்னேற்றங்கள் எதுவும்எட்டப்படவில்லை என்பதில்இருந்து இதன் அடுத்த நகர்வு எப்படியிருக்கும் என்பதை எம்மால் ஊகிக்க முடியும்.

இலங்கையை பொறுத்தவரை வெளிச் சக்திகளின் நேரடித் தலையீட்டுக்கான வாய்ப்புக்கள் மிக அரிதாகவே காணப்படுகின்றன. ஏனெனில் இதற்கு வசதியாக உள்நாட்டில் இலங்கையின்எதிர்க் கட்சிகள் பலவீனமாக இருப்பது ஒரு துரதிஷ்டமான நிலமையாகும்.

அவ்வாறு நடப்பிலுள்ள அரசை மறுதலிக்கும் ஒரு நிலைமை ஏற்பட்டாலும் தமிழர்களுக்கு வாய்ப்பான ஒரு அரசுத் தலைமை உருவாகும் என்பது அதைவிட கடினமானதாகும்.

இந்த நிலையில் உலக நாடுகளைப் பொறுத்தவரை இலங்கையின் விவகாரத்தில் தலையிடும் போது உள்நாட்டில் அரசின் ஸ்திரத்தன்மையில் நிலவும் பலவீனங்களைப் பொறுத்தே அவற்றின் தலையீடுகளது வலுவும் இருக்கும் என்பதை நாம் உணர்ந்து கொள்ள வேண்டும்.

உருவாகும் எந்தவொரு அரசியல் கட்சியும் தனித்தியங்க முடியாது இனத்துவ நிலைப்பட்டு ஆளும்தரப்புடன் பங்காளிக் கட்சியாக வேண்டிய ஒரு நிலையில் உள்நாட்டில் நடப்பிலுள்ள அரசை மறுதலிக்கும் வெளிச்சக்திகளின் முயற்சிகள் இதே அரசைவலுப்படுத்துவதிலேயே போய் முடியுமென்பதை நாம்உணர்ந்துகொள்ளவேண்டும்.

இந்த நிலையில் கொழும்பு வந்த உலகத் தலைவர்கள் தமிழர் விவகாரத்தில் இலங்கை அரசுக்கு விடுத்த வலியுறுத்தல்கள் இப்போது தென்னிலங்கை தரப்புக்கள் மத்தியில் சிங்கள தேசத்தை மறுதலிப்பதாக வெளிப்பட்டிருக்கின்றன.


அதன் விளைவு, இந்த நாட்டை காப்பாற்ற சிங்கள மக்கள் அனைவரும் ஒன்றுபடவேண்டும் என்ற கருத்துவலுப்பெற்றபின் உள்நாட்டில் பல்வேறுஅரசியல்சக்திகளிடையேயும் நிலவியமுரண்பாடுகள் மறைந்து நடப்பிலுள்ள அரசு மீது அனுதாப அலைவளர்வதற்கே வகை செய்திருப்பதாக தோன்றுகிறது.

போர்க்குற்ற விசாரணைக்கு ஒரு காலத்தை வரையறுக்க வேண்டும் என பிரித்தானிய பிரதமரால்முன்வைக்கப்பட்ட ஆலோசனை ஏறத்தாழ முற்றாகவே மறுதலிக்கப்பட்டிருக்கிறது.

கண்ணாடி வீட்டுக்குள் இருந்து கல்லெறிய வேண்டாம் என இது விடயத்தில் ஜனாதிபதி கூறியுள்ள கருத்து ஒரு பலமான பின்புலத்தில் இருந்து கொண்டு பதில் கூறும் தோற்றப்பாட்டை அவர் வெளிப்படுத்தியுள்ளதாகவே சிந்திக்க வேண்டியிருக்கிறது.

மொத்தத்தில் கொழும்பு வந்த உலகத்தலைவர்களாலும், கூட்டான ஒரு வலியுறுத்தலின் அடிப்படையில் இலங்கையில் இனப்பிரச்சினைக்கான தீர்வுக்கு ஒரு அடித்தளத்தை உருவாக்கிக்கொள்ள முடியவில்லை.

இதுவிடயத்தில் வெறுமனே மேடைப் பேச்சை தவிர்த்து உளப்பூர்வமாக இந்தப் பிரச்சினையை தீர்க்கும் விருப்பார்வம் உள்நாட்டில் முதலில் எமது தமிழ் சிங்கள தலைவர்களிடையே உருவாக வேண்டும். அதன் பிறகே வெளியுலகத் தலைவர்களை அழைக்கும் முயற்சிகள் பயனளிப்பவையாக அமையும்.



> வியாபாரிகள் தமக்கிடையேயான ஒப்பந்தங்களுக்காக மோதிக்கொள்வதையும் பின்னர் இணைந்து கொள்வதையும் மனிதாபிமானம் என்று தவறாகப் புரிந்துகொண்டால் அது முழு மக்களை அழிவிற்கு இட்டுச்செல்லும்.

சுதர்சன் கட்டுரையிலிருந்து

# டேவிட் கமரூனோடு இலங்கை சென்ற பெருநிறுவனங்கள்

"இந்த நாடு குறித்த உண்மை என்னவென்றால், வெற்றிக்கான வாய்ப்புக்கள் அதிகம் காணப்படுகிறது என்பதே. ஏனென்றால் போர் முடிந்துவிட்டது, பயங்கரவாதம் முறியடிக்கப்பட்டுள்ளது, சண்டை முடிந்துவிட்டது. இப்போது என்ன தேவைப்படுகிறது என்றால் நாட்டை ஒன்றுபடுத்துவதற்கு இலங்கை அரசிடமிருந்து பெருந்தன்மையும் சகிப்புத் தன்மையுமே" என்று யாழ்ப்பாணத்தில் கூறியது பிரித்தானியப் பிரதமர் டேவிட் கமரூன். உலகின் மிகப்பெரும் ஏகபோக நாடுகளில் ஒன்றும் உலகம் முழுவதும் காலனியாதிக்கத்தை நிறுவி இன்றைய அவலங்களுக்கான வித்தை விதைத்தவர்களுமான பிரித்தானியாவின் பிரதமர் யாழ்ப்பாணத்தின் அகதி முகாம் மற்றும் தெருக்களில் சாமான்யர்களோடு உரையாடியதை தமிழ் ஊடகங்கள் மட்டுமல்ல பிரித்தானிய ஊடகங்களும் தலைப்புச் செய்திகளாக வெளியிட்டன.

பிரித்தானியப் பிரதமர் தனது நாட்டைவிட்டுப் புறப்படும்போது ராஜபக்ச அரசின் போர்க்குற்றங்கள் மீதான சர்வதேச சுயாதீன விசாரணையைக் கோரப்போவதாக தமிழ் அமைப்புக்களுக்கு உறுதியளித்திருந்தார். ஆனால் யாழ்ப்பாணத்தில் போர்க்குற்றத்தை பயங்கரவாத ஒழிப்பாகப் பிரகடனப்படுத்தியிருக்கிறார்.

டேவிட் கமரூன் இலங்கை செல்லும் போது நுறு பிரித்தானிய பல்தேசிய நிறுவனங்களை அழைத்துச் சென்றுள்ளதாகவும் அவற்றில் பல அவரது கட்சிக்குப் பணம் வழங்கும் நிறுவனங்கள் என்பதும் பிரித்தானிய ஆங்கில ஊடகங்களில் வெளியான செய்தி. கமரூன் இலங்கையை விட்டு வெளியேறும் போது அத்தனை அழுத்தங்களையும் பிரயோகிக்க, ராஜபக்ச அரசு அடிபணிந்து ஒப்பந்தங்களை வழங்குவதைத் தவிர வேறு வழிகள் இல்லை.

கமரூனும் ஏகாதிபத்திய நாடுகளும் அதன் கூறுகளான ஐ.எம்.எப், உலக வங்கி போன்றன உயர்கல்வியைத் தனியார் மயமாக்க இலங்கை அரசைக் கோரிவந்தன. மாநாட்டிற்கு வந்த இளவரசர் சார்ள்ஸ் முதல் தனியார் பல்கலைக்கழகத்தை இலங்கையில் ஆரம்பித்து வைத்தார். பிரித்தானியாவில் கல்வி உரிமைக்காக நாளாந்தம் போராடும் மாணவர்களின் உணர்வுகளை மிதித்துக்கொண்டு சார்ள்ஸ் பிரித்தானியப் பல்கலைக் கழகத்தை 75 மில்லியன் பவுண்ஸ் முதலீட்டோடு அங்குரார்ப்பணம் செய்கிறார். படிப்படியாக நாட்டின் கல்வி அழிக்கப்பட்டு பணம்படைத்த உயர்குடிகளுக்கான விற்பனைப் பொருளாகக் கல்வி மாறிவிடும். ஆக. கல்வியை விற்பனை செய்வதற்கான கமரூனின் பேரம் பயங்கரவாதத்தின் மீதான இன்னொரு வெற்றி.

இவை குறித்தெல்லாம் இலங்கையின் எந்த மூலையிலிருந்தும் குரல்கள் எழவில்லை. தெருவெங்கும் அவலக் குரலோடு கமரூனின் பின்னால் அலைந்த மக்களின் நம்பிக்கை பிரித்தனிய கோப்ரேட் நிறுவனங்களுக்கு முதலீடாக்கப்படும். இனிமேல் போராடினால் அது பயங்கரவாதம் என்று மக்களை மிரட்டியதைக்கூட பொருட்படுத்தாத பிழைப்புவாத அரசியல் தலைவர்கள் சம்பந்தன் சுமந்திரன் விக்னேஸ்வரன் ஆகியோர் தமது ஏகாதிபத்திய எஜமானனோடு உலாவந்ததில் மகிழ்ச்சியடைந்துள்ளனர்.

இலங்கை பொதுநலவாய நாடுகளின் மாநாட்டிற்கு அங்கு தொடர்ச்சியாக முதலிடும் நோக்கோடு 26 பிரித்தானிய பெருநிறுவனங்கள் பண உதவி வழங்கின. வங்கிகள், நிதித் துறை, கல்வித் துறை, கட்டுமானத் துறை, கனிம நிறுவ்னங்கள், தொலைத் தொடர்பு நிறுவனங்கள் போன்றன மாநாட்டின் செலவிற்கு உதவிகளை வழங்கின.

பல நிறுவனங்கள் டேவிட் கமரூனோடு இலங்கை சென்று பேச்சாளர்களாக தமது முதலீடுகள் குறித்து பொது நலவாய வர்த்தக மன்றத்தில் பரப்புரை செய்தன.

ஒரு கொள்ளைக்கும்பலையே அழைத்துச்சென்ற டேவிட் கமரூன் சுயாதீன விசாரணை நடத்தப்போவதாகவும் சமாதானத்தை ஏற்படுத்தப்போவதாகவும் கூறுவது வேடிக்கையானது. இதனை நம்பக்கோரும் புலம் பெயர் கோமாளிகள் அன்னிய மூலதனத்திற்கு எதிரான தேசியத்தின் காவலர்களாகப் பிரகடனம் செய்வது அதைவிட வேடிக்கையானது.

இலங்கையில் ராஜபக்ச வழங்கும் முதலீட்டிற்கான வாய்ப்பிற்காக காத்திருந்தவர்களில் ஆறு நிறுவனங்கள் டேவிட் கமருனின் கட்சிக்கு நிதி வழங்குபவர்கள். பொதுவாக அனைத்து கோப்ரேட்டுகளுமே தன்னார்வ நிறுவனங்களுக்குப் பணம் வழங்குபவர்கள்.

டேவிட் கமரூன் தனது நாடாளுமன்ற உரையில் கூறியது போல-இலங்கையில் பயங்கரவாதம் அழிக்கப்பட்டு விட்டது, இனிமேல் புலிகள் போன்ற கோரமானதும் அவமானகரமானதுமான பயங்கரவாத அமைப்பு உருவாகக்கூடாது. அங்கு நல்லிணக்கமும் அபிவிருத்தியுமே தேவை, நான் "கொமன் வெல்த் மாநாட்டில் பல வியாபார ஒப்பந்தங்களை மேற்கொண்டுள்ளேன்." இலங்கையைக் கொள்ளையடிக்கவும் வடக்கிலும் கிழக்கிலும் நல்லிணக்கத்தின் பெயரால் நிலப்பறிப்புச் செய்யவும், சிங்கள அப்பாவி மக்களைச் சூறையாடவும் அங்கு உரிமைப் போராட்டம் நடக்கக்கூடாது.

வியாபாரிகள் தமக்கிடையேயான ஒப்பந்தங்களுக்காக மோதிக் கொள்வதையும் பின்னர் இணைந்து கொள்வதையும் மனிதாபிமானம் என்று தவறாகப் புரிந்துகொண்டால் அது முழு மக்களைது அழிவிற்கு இட்டுச்செல்லும்.

# ஐ.தே.க.- பௌத்தபிக்குகள் அரசியல் கருத்து முரண்பாடு

## ரணிலின் நடவடிக்கையால் சர்ச்சை

(கொழும்பு)

ஐக்கிய தேசியக் கட்சிக்கும் பௌத்த பிக்குகளுக்குமிடையே அரசியல் கருத்து முரண்பாடுகள் அதிகரித்துள்ளன. ஐக்கிய தேசியக் கட்சியின் தலைமையகமான சிறிகொத்தாவிற்கு முன்பாக தேரர்கள் மீது தாக்குதல் மேற்கொள்ளப்பட்ட சம்பவம் தொடர்பில் தேரர்களிடம் மன்னிப்புக் கோருவதற்கு உத்தியோக பூர்வ அனுமதி அவசியம் என ரணில் விக்ரமசிங்க கூறியுள்ள கருத்து தொடர்பில் தேரர்களும் பிரபல அரசியல்வாதிகளும் எதிர்ப்புத் தெரிவித்துள்ளனர்.

ஐக்கிய தேசியக் கட்சியின் தலைமை அலுவலகமான சிறிக்கொத்தாவிற்கு முன்பாக அண்மையில் இடம்பெற்ற சம்பவம் தொடர்பில் தாம் எந்தவொரு தேரரிடம் மன்னிப்புக் கோரவில்லையென ஐக்கிய தேசியக் கட்சியின் தலைவர் ரணில் விக்ரமசிங்க கூறியிருந்தார்.

அவ்வாறு மன்னிப்புக் கோருவதாக இருந்தால் தலைமைத்துவ சபையின் அனுமதி அவசியம் எனவும் அவர் சுட்டிக்காட்டியுள்ளார். கொழும்பு கெஸட் எனும் இணையத்தளத்தில் இந்த விடயம் குறிப்பிடப்பட்டுள்ளது.

இதேவேளை சிறிகொத்தாவிற்கு முன்பாக தேரர்கள் சத்தியாக்கிரக போராட்டத்தில் ஈடுபட்டதுடன், அன்றைய நாள் சம்பவம் தொடர்பில் ஐக்கிய தேசியக் கட்சியின் பிரதிநிகள் தேரர்களிடம் மன்னிப்புக் கோரியிருந்தனர்.

ஐக்கிய தேசியக் கட்சி முன்னாள் அமைச்சர் எம்.டீ.பிரேமரத்ன இது தொடர்பாக கருத்துத் தெரிவிக்கையில், அவ்விடத்திற்கு தலைமைத்தவ சபையில் உளள 2 உறுப்பினர்கள் வந்தனர். அதாவது ரவி கருணாநாயக்க மற்றும் ருவன் விஜேவர்தன ஆகியோர் அவ்விடததிற்கு வந்து தேரர்களிடம் மன்னிப்புக் கோரினார்.

உண்மையில் தவறுகள் இடம்பெறுவது மனித சுபாவம். அதற்கு மன்னிப்புக் கோரவும் மன்னிப்பு வழங்குவதும் கடவுளின் பண்புகளைப் போன்றது. அவ்வாறான பண்புகளிலேயே மக்களின் மேம்பாடு தங்கியுள்ளது.

எனினும் அவ்வாறு தாம் மன்னிப்புக் கோரவில்லையென ரணில் விக்ரமசிங்க கூறியுள்ளார். அதற்கு தலைமைத்துவ சபையின் அனுமதி அவசியம் என்றும் கூறியுள்ளார்.

எனவே இதன் மூலம் என்ன புலப்படுகின்றது. ரணில் விக்ரமசிங்க இந்த நாட்டின் பௌத்த தேரர்களை மதிப்பதில்லை என்பதே புலனாகின்றது. சிறிகொத்தாவிற்கு முன்பாக தாக்குதல் மேற்கொள்ளப்பட்டுள்ளமையினால் அது குறித்து முதலில் ரணில் விக்ரமசிங்கவே மன்னிப்புக் கோரியிருக்க வேண்டும்.

எனினும் தற்போது அதனை தலைமைத்துவ சபையின் மீது திணித்துள்ளார். மன்னிப்புக் கோருவதற்கு தலைமைத்துவ சபையின் அனுமதி அவசியம் என்று கூறுகின்றார்.

இதிலிருந்து ரணில் விக்ரமசிங்க தொடர்ந்தும் பழைய வீதியில் பயணிப்பதே புலப்படுகின்றது. அதன் காரணமாக ஐக்கிய தேசியக் கட்சி மயானத்திற்கு கொண்டு செல்லப்படுகின்றது எனத் தெரிவித்தார்.

ஐக்கிய பிக்குகள் முன்னணி தேசிய அமைப்பாளர் உலபனே சுமங்கல தேரர் இதுதொடர்பாக கருத்துத் தெரிவிக்கையில,

பொதுபலசேனா ஏற்பாடு செய்த ஆர்ப்பாட்டம் சிறிகொத்தாவிற்கு முன்பாக இடம்பெற்றுக்கொண்டிருந்த வேளையில் ரணில் விக்ரமசிங்க என்ன செய்தார். போலியான தலைமைத்துவ சபையினை நாம் ஏற்றுக் கொள்வதில்லை.


எனினும் அந்த தலைமைத்துவ சபையின் மூன்று பிரதிநிதிகள் ஒட்டு மொத்த கட்சிற்காகவும் பகிரங்கமாக மன்னிப்புக் கோரினர். தவறொன்று இடம பெற்றது, இந்தத் தாக்குல் தவறானது எனவும் ஏற்றுக்கொண்டு மன்னிப்புக் கோரினர்.

எனினும் அதன் பின்னர் ரணில் விக்ரமசிங்க நாட்டிற்கு என்ன கூறியுள்ளார். அவ்வாறு மன்னிப்புக் கோரவில்லை என்று கூறியுள்ளார். இங்கு நாம் ஒரு விடயத்தை சுட்டிக்காட்ட வேண்டும். மிகவும் மோசமான விதத்தில் தேரர்களுக்கு தனது அடியாட்களை வைத்து தாக்குதல் மேற்கொள்ளும்போது ரணில் விக்ரமசிங்க ஒரு வசனமாவது பேசவில்லை.

எனினும் அது தொடர்பில் தலைமைத்துவ சபையின் மூன்று உறுப்பினர்கள் பகிரங்கமாக நாட்டின் முன்பாகவும் ஊடகங்கள் மூலமாகவும் மன்னிப்பு கோருகின்ற போது அதற்கு எதிராக கருத்து வெளியிடும் அளவிற்கு அவர் மோசமான நிலமைக்கு மாறியுள்ளார்.

இது மிகவும் அபாயகரமான நிலமையாகும். தேரர்களிடம் மன்னிப்பு கோருவதற்கு வெட்கப்பட வேண்டிய அவசியமில்லை என்றார்.

## சிகிரிய படம் அடங்கிய முத்திரை பிரான்ஸில் வெளியீடு



பிரான்ஸின் தபால் அதிகார சபை இலங்கையின் சிகிரிய படத்தை பயன்படுத்தி முத்திரை ஒன்றை வெளியிடுள்ளது. யுனெஸ்கோ உரிமையுடைய இந்த சிகிரிய படம் அடங்கிய முத்திரை யுனெஸ்கோ தலைமையகத்திலேயே வெளியிடப்பட்டது.

பாரிஸ் நகரிலுள்ள யுனெஸ்கோவின் வதிவிடப் பிரதிநிதிகள் மூலம் இந்த வைபவம் ஏற்பாடு செய்யப்பட்டிருந்தது. பிரான்ஸின் தபால் அதிகார சபை இலங்கையின் படத்தை பயன்படுத்தி முத்திரை ஒன்றை வெளிட்யிட்டமை இது இரண்டாவது தடவையாகும்.

ஏற்கனவே அனுராதபுரம் புனித பூமியின் படத்தை பயன்படுத்தி முத்திரை வெளியிடப்பட்டமை குறிப்பிடத்தக்கது.

## கல்வி நடவடிக்கைகள் மீண்டும் ஆரம்பம்

(கொழும்பு)

காலவரையறையின்றி மூடப்பட்டிருந்த இலங்கை தென்கிழக்குப் பல்கலைக்கழக பிரயோக விஞ்ஞான பீடத்தின் 02 ஆம், 03 ஆம் வருட மாணவர்களுக்கான கல்வி நடவடிக்கைகள் நேற்று முன்தினம் ஆரம்பிக்கப்பட்டுள்ளன.

கடந்த ஒக்ரோபர் மாதம் பிரயோக விஞ்ஞான பீடத்தின் 02 ஆம், 03 ஆம் வருட மாணவ குழுக்களிடையே இடம்பெற்ற மோதல் சம்பவத்தை அடுத்து 53 மாணவர்கள் கைது செய்யப்பட்டு விசாரணைக்கு உட்படுத்தப்பட்டு வருவதுடன் பிரயோக விஞ்ஞான பீடத்தின் 02 ஆம், 03 ஆம் வருட மாணவர்களுக்கான வி நடவடிக்கைகளும் நிறுத்தப்பட்டிருந்தமை குறிப்பிடத்தக்கது.

தற்போது ஆரம்பிக்கபட்டுள்ள கல்வி நடவடிக்கையில் விசாரணைக்கு உட்படுத்தப்பட்டுள்ள மாணவர்களுக்கு தடை விதிக்கப்பட்டுள்ளது.

விசாரணை முடிவுறும் வரை இவர்களுக்கான தடை அமுலில் இருக்கும் எனவும் தெரிவிக்கப்பட்டுள்ளது.

## திறந்த வீட்டிற்குள் திருடர்கள் நுழையாத நிலை உருவாகவேண்டும் சிரேஷ்ட பொலிஸ்மா அதிபர்

(கொழும்பு)

மக்களுக்கு நம்பகத்தன்மையுடன் கூடிய சேவைகளை ஆற்றுவதே பொலிஸ் திணைக்களத்தின் நோக்கம் என சிரேஷ்ட பிரதிப் பொலிஸ் மாஅதிபர் காமினி நவரத்ன தெரிவித்துள்ளார்.

கொழும்பு டொரின்டன் பிளேசில் அமைந்துள்ள குற்றத் தடுப்புப் பிரிவின் கேட்போர் கூடத்தில் நேற்று முன்தினம் நடைபெற்ற நிகழ்வொன்றில் அவர் இதனைத் தெரிவித்துள்ளார். பொலிஸ் நிலையங்களில் பொதுமக்கள் திருப்தியடையக் கூடிய வகையில் நம்பிக்கையை கட்டியெழுப்ப வேண்டும். வீடொன்றை மூடியோ, அல்லது திறந்துவிட்டபடி சென்றால் வீட்டிற்குள் திருடர்கள் நுழைய மாட்டார்கள் என்ற நிலையை உருவாக்க வேண்டும் எனவும் அவர் மேலும் தெரவித்துள்ளார்.

## அநாதரவான குழந்தைகளை ௮000 பேர் தயார் தத்தெடுக்க

குழந்தைகளை தத்தெடுப்பதற்கு எண்ணாயிரத்திற்கும் அதிகமானவர்கள் விருப்பம் தெரிவித்துள்ளதாக நன்னடத்தை மற்றும் சிறுவர் பாதுகாப்புத் திணைக்களம் தெரிவித்துள்ளது.

மேல்மாகாணத்திற்கான பட்டியலில் மாத்திரம் 3000 பேர் இருப்பதாக திணைக்களத்தின் ஆணையாளர் நாயகம் யமுனா பெரேரா தெரிவிததுள்ளார்.

இதனைத்தவிர, 400 இற்கும் அதிகமான வெளிநாட்டவர்கள் குழந்தைகளை தத்தெடுப்பதற்கு பதிவுசெய்துள்ளனர்.

குழந்தைகளை தத்தெடுப்பதற்கு தகுதியானவர்களா என்பது தொடர்பில் மாகாண நன்னடத்தை திணைக்களத்தின் ஊடாக ஆராய்ந்ததன் பின்னர் பெற்றோரற்ற குழந்தைகளை அவர்களுக்கு தத்து கொடுக்கப்படவுள்ளது.

வெளிநாட்டவர்களுக்கு குழந்தைகளை தத்துக்கொடுத்ததன் பின்னர், அவர்கள் தொடர்பில் மேற்பார்வை செய்யவுள்ளதாகவும் அவர் மேலும் தெரிவிததுள்ளார்.

## மாலைதீவின் புதிய ஜனாதிபதிக்கு இலங்கை ஜனாதிபதி வாழ்த்து

(கொழும்பு)

மாலைதீவின் புதிய ஜனாதிபதி அப்துல்லா யாமின் அப்துல் கையூமுக்கு ஜனாதிபதி மகிந்த ராஜபக்ஷ தனது வாழ்த்துக்களை தெரிவித்துள்ளார்.

மாலைதீவில் நடைபெற்ற தேர்தலில் முன்னாள் மாலைதீவு ஜனாதிபதி மௌமூன் அப்துல் கையூமின் சகோதரர், அப்துல்லா யாமின் அப்துல் கையூம் வெற்றிபெற்று ஜனாதிபதியாக நியமிக்கப்பட்டுள்ளார்.

மாலைதீவின் புதிய ஜனாதிபதிக்கு தனது பாராட்டுக்களையும் வாழ்த்துக்களையும் தெரிவித்து செய்தியொன்றையும் ஜனாதிபதி அனுப்பி வைத்துள்ளார்.

ஜனாதிபதி மகிந்த ராஜபக்ஷ அனுப்பி வைத்துள்ள வாழ்த்துச் செய்தியில் குறிப்பிடப்பட்டுள்ளதாவது, மாலைதீவு மக்கள் உங்கள் கொள்கைகள் மீதும் உங்கள் தலைமைத்துவத்தின் மீதும் வைத்திருந்த நம்பிக்கையை இந்த வெற்றி எடுத்துக்காட்டுகிறது.

1960 ஆம் ஆண்டு காலப்பகுதியில் இருந்து இலங்கைக்கும் மாலைதீவுக்குமிடையிலான இராஜதந்திர தொடர்புகள் நிலவுகின்றன. அன்று முதல் இரு நாடுகளும் நெருங்கிய தொடர்புகளை பேணி வருகின்றன.

இலங்கைக்கும் மாலைதீவுக்குமிடையிலான உறவுகள் நட்புறவின் பாரம்பரியத்தையும் நெருங்கிய கூட்டுறவையும் பரஸபர கௌரவத்தையும் எடுத்துக்காட்டுகின்றன எனத் தெரிவித்த ஜனாதிபதி மகிந்த ராஜபக்ஷ, மாலைதீவு சர்வதேச அரங்கில் இலங்கைக்கு தனது ஒத்துழைப்பையும் கூட்டொருமைப்பாட்டையும் தெரிவித்துள்ளது.

இது இரு நாடுகளுக்குமிடையிலான நல்லுறவை மேலும் பலப்படுத்தியுள்ளது எனவும் குறிப்பிட்டுள்ளார்.

இலங்கையும் மாலைதீவும் வலுவான வர்த்தக உறவுகளை பகிர்ந்து கொண்டுள்ளன. இலங்கையுடனான குறிப்பிடத்தக்க ஏற்றுமதி இறக்குமதிகளில் குறிப்பாக மாசி ஏற்றுமதி செய்யப்படுவதும் அரிசி இறக்குமதி செய்யப்படுவதும் இடம்பெறுகின்றமை குறிப்பிடத்தக்கதாகும்.

## காலாவதியான உணவுகள் குறித்து நுகர்வோர் பாதுகாப்பு சபைக்கு முறையிடலாம்

(கொழும்பு)

வர்த்தக சந்தையில் காணப்படும் காலாவதியான உணவுப் பொருட்களை கண்டறிவதற்கான சுற்றிவளைப்புகள் ஆரம்பிக்கப்பட்டுள்ளதாக நுகர்வோர் பாதுகாப்பு அதிகார சபையின் தலைவர் ரூமி மர்சூக் தெரிவித்துள்ளார்.

கொழும்பு, கம்பகா உள்ளிட்ட சில மாவட்டங்களில் இவ்வாறான சுற்றிவளைப்புக்கள் தற்போது தொடர்ச்சியாக முன்னெடுக்கப்படுகின்றன.

நுகர்வோர் சட்டங்களுக்கு அமைய, காலாவதியான உணவுப் பொருட்களை விற்பனை செய்தல் தண்டனைக்குரிய குற்றமாகும். ஆயினும், தற்போது காலாவதித் திகதிக்கு மேல் மற்றுமொரு திகதியடங்கிய லேபல் ஒட்டப்பட்டு பொருட்கள் விற்பனை செய்யப்படுவது கண்டறியப்பட்டுள்ளது.

இவ்வாறான பொருட்களை நுகரும் பொதுமக்கள் நோய்வாய்ப்படுகின்றனர்.

எனவே அனைத்துப் பொருடகளின் கொள்வனவின் போது, காலாவதித் திகதி மற்றும் உற்பத்தித் திகதி தொடர்பில் அதிக கவனம் செலுத்தவேண்டும்.

வர்த்தக சந்தையில் காணப்படும் காலாவதியான உணவுப் பொருட்கள் தொடர்பில் தமது அதிகார சபைக்கு தெரியப்படுத்துமாறு நுகர்வோர் அதிகார சபை பொதுமக்களிடம் கேட்டுக்கொண்டுள்ளது.






உள்ளூராட்சி வாரத்தை முன்னிட்டு காரைநகர் பிரதேச சபையினால் பாடசாலை மாணவர்களுக்கிடையே போட்டிகள் நடாத்தப்படுவதைக் காணலாம். (50)

# முல்லைத்தீவு, மன்னாரிலும் சுயதொழில் ஓய்வூதியத்திட்டம்

(கிளிநொச்சி)

இலங்கை சமூக பாதுகாப்புச் சபையின் சுயதொழில் ஓய்வூதியத் திட்டம் 2014 ஆம் ஆண்டில் முல்லைத்தீவு, மன்னார் மாவட்டங்களுக்கும் அரசாங்கத்தினால் அறிமுகம் செய்யப்படவுள்ளதாக சபையின் தலைவர் சட்டத்தரணி சுகுணா ஆரியதாச தெரிவித்தார்.

அவர் இது தொடர்பில் தெரிவிக்கையில்,

1996ஆம் ஆண்டில் வறுமையை தணிக்கும் நோக்கில் அப்போதைய அரசாங்கத்தினால் இலங்கை சமுர்த்தி அதிகார சபை, இலங்கை சமூக பாதுகாப்புச் சபை என்பன உருவாக்கப்பட்டன.

2011ஆம் ஆண்டில் தான் சமுர்த்தித் திட்டம் கிளிநொச்சி முல்லைத்தீவு மாவட்டங்களில் நடைமுறைக்கு கொண்டுவரப்பட்டது.

2013ஆம் ஆண்டில் சமுர்த்தி அபிவிருத்தி உத்தியோகத்தர்கள் நியமிக்கப்பட்டதுடன், கிளிநொச்சி மாவட்டத்தில் இலங்கை சமூக பாதுகாப்புச் சபையின் சுயதொழில் ஓய்வூதியத் திட்டம் நடைமுறைப்படுத்தப்பட்டது. சபையின் சுரக்கும திட்டத்தில் இதுவரை 602 பயனாளிகள் இணைக்கப்பட்டுள்ளனர்.

முல்லைத்தீவு, மன்னார் மாவட்டங்களில் நாளாந்த தொழில் செய்வோர் 60 வயது முதல் ஓய்வூதிய நன்மைகளைப் பெறும் வகையில் இத்திட்டம் நடைமுறைக்கு வரவுள்ளதாக அவர் மேலும் தெரிவித்தார். (90)

# யோகா பயிற்சி அறிமுக நிகழ்வு

'யாழ்.யோகா அரங்கத்தினர்' நடாத்தும் யோகா பயிற்சியின் அறிமுக நிகழ்வு அறுபத்துமூன்று நாயன்மார் குருபூசை மடத்தில் (நல்லூர்த் தேரடி அருகே) நாளைமறுதினம் ஞாயிற்றுக்கிழமை மாலை 5 மணிக்கு யோகா அரங்க இயக்குநர் எஸ்.உமாசுதன் தலைமையில் ஆரம்பமாகவுள்ளது.

யோகா பயிற்சிநெறி இருபிரிவுகளாக இடம்பெறும் பயிற்சிநெறி -1 காலை 6 மணி தொடக்கம் 7மணி வரையும், பயிற்நெறி -2 மாலை 5 மணி தொடக்கம் 6 மணிவரையும் தொடர்ந்து 20 நாட்கள் நடைபெறும். இணைய விரும்புபவர்கள் ஏதாவது ஒரு பிரிவை மட்டும் தெரிவுசெய்துகொள்ளவேண்டும். உடல், உள ஆரோக்கியத்திற்கு மிகவும் அவசியமான ஆசனப்பயிற்சிகள், சூரியநமஸ்காரம், பிராணயாமம், சாந்தவழிமுறை மற்றும் தியானப்பயிற்சிகள் தெரிவு செய்யப்பட்டு அனுபவமுள்ள யோகா ஆசானால் நுட்பமாகப் பயிற்சி வழங்கப்பட்டுவருவதுடன் கையேடுகளும் வழங்கப்படும். ஆர்வமுள்ள அனைவரும் பயிற்சிநெறியில் இணைந்து பயன்பெற முடியும். அறிமுக நிகழ்வில் அவசியம் கலந்து கொள்ளவேண்டும் என யாழ்.யோகா அரங்கத்தினர் அறிவித்துள்ளனர்.

# ஈ.சிற்றி ஆங்கிலக் கல்லூரியின் பட்டமளிப்பு வைபவம் நாளை

(யாழ்ப்பாணம்)

யாழ்ப்பாணம் ஈ.சிற்றி ஆங்கிலக் கல்லூரியின் பட்டமளிப்பு விழா நாளை மறுதினம் ஞாயிற்றுக்கிழமை மு.ப. 11 மணிக்கு கல்லூரியின் தலைவர் லயன்.ஜெ.றஜீவன் தலைமையில் யாழ்ப்பாணம் கிறீன் கிறாஸ் விருந்தினர் விடுதியில் வெகுசிறப்பாக நடைபெறவுள்ளது.

இந்நிகழ்வில் பிரதம விருந்தினராக வடமாகாண கல்வி, பண்பாட்டலுவல்கள், விளையாட்டுத்துறை அமைச்சர் த.குருகுலராஜா கலந்து சிறப்பிக்கவுள்ளார். யாழ்ப்பாணப் பல்கலைக்கழகத்தின் வாழ்நாள் பேராசிரியர் பி.கோபாலகிருஷ்ண ஐயர் சிறப்பு விருந்தினராக கலந்து கொண்டு சான்றிதழ்களை வழங்கிக் கௌரவிப்பார். ஆசி உரைகளை உலக இந்துமத குருமார் ஒன்றியத்தின் தலைவர் சிவசிறி வாசுதேவக் குருக்கள், யாழ்ப்பாணம் ஒஸ்மானியாக் கல்லூரியின் அதிபர் மௌலவி எம்.முபாரக் ஆகியோர் வழங்குவார்.

கௌரவ விருந்தினர்களாக யாழ்ப்பாணம் கல்வி வலய பிரதிக் கல்விப்பணிப்பாளர் பொ.அருணகிரிநாதன், வடமாகாண சபை உறுப்பினர்கள் விந்தன் கனகரட்ணம், அஷ்ஷெய் அய்யூப் அஸ்மின் (நளிமி) மற்றும் வலி.மேற்கு பிரதேசசபை உறுப்பினர் த.நடனேந்திரன் ஆகியோரும் கலந்து சிறப்பிக்கவுள்ளனர்.

இந்நிகழ்வில் அனைவரையும் கலந்து சிறப்பிக்குமாறு கல்லூரியின் பணிப்பாளர் வைத்திய கலாநிதி க.ஜெயச்சந்திரமூர்த்தி கேட்டுக் கொண்டுள்ளார்.

# அதிஷ்டலாப சீட்டிழுப்பில் வெற்றிபெற்றோர் விபரம்

இலங்கை செஞ்சிலுவைச் சங்கம் மனிதாபிமான சேவைக்கான நிதி சேகரிப்பிறகாக அதிஷ்ட இலாபச்சீட்டு ஒன்றை ஆரம்பித்து கடந்த 9ஆம் திகதி அன்று குலுக்கல் முறையில் அதிஷ்டம் பார்க்கப்பட்டது. இதில் 1ஆம் பரிசினை ஏ.யோகேந்திரம் (தொல்புரம்) சொனி தொலைக்காட்சிப் பெட்டியையும், 2ஆம் பரிசினை என்.என். நஜாத் (புத்தளம்) துவிச்சக்கரவண்டியையும், 3ஆம் பரிசினை ஏ.செல்வேந்திரன் (யாழ்ப்பாணம்) கிறைண்டறினையும் பெற்றுள்ளனர்.

மேற்படி பரிசுகள் முறையே, 1ஆம் பரிசினை சக்திவேல் ஹாட்வெயர், (கே.கே.எஸ்.வீதி, கோண்டாவில்), (ஓல் சிலோன் டிஸ்ரிபியூட்டர்ஸ் புத்தகசாலை, கே.கே.எஸ்.வீதி,யாழ்ப்பாணம) 2ஆம் பரிசினை செல்வா ஹாட்வெயர் (ஸ்ரான்லி வீதி, யாழ்ப்பாணம்) 3ஆம் பரிசினை வி.கே. ராஜரட்ணம (ஸ்ரான்லி வீதி, யாழ்ப்பாணம்) ஆகியோரின் அன்பளிப்பால் மேற்குறிப்பிட்டவர்களுக்கு வழங்கப்பட்டன.

## புதிய நிர்வாகிகள் தெரிவு

(கொடிகாமம்)

தென்மராட்சி கலை மன்றத்திற்கு புதிய நிர்வாகிகள் தெரிவு தென்மராட்சி பிரதேச செயலர் தலைமையில் இடம்பெற்றது.

தலைவராக த.மோகனராஜலிங்கம், செயலாளராக பிரணவன், உபதலைவராக ஆ.தில்லைநாதன், உப செயலாளராக ர.சிறிபிரகாஸ், பொருளாளராக எஸ்.சற்குணதேவன் ஆகியோர் தெரிவு செய்யப்பட்டனர். மேலும் 11 நிர்வாக சபை உறுப்பினரும் தெரிவு செய்யப்பட்டனர். (130)

# சித்த மருத்துவ மாநாட்டிற்கு ஆய்வுக்கட்டுரைகள் கோரல்

2014ஆம் ஆண்டு நடைபெறவுள்ள சித்த மருத்துவ மாநாட்டுக்கான ஆய்வுக் கட்டுரைகள் சித்த, ஆயுர்வேத, யுனபனி மருத்துவர்கள், பாரம்பரிய மருத்துவர்கள் மற்றும் சுதேச மருத்துவம் சார் ஆர்வலர்களிடம் இருந்து சுதேச மருத்துவர்களிடமிருந்து வரவேற்கப்படுகின்றன.

சித்த மருத்துவ மாநாடு கண்காட்சியும் கடந்த வருடம் நவக்கிரி அரச மூலிகைத் தோட்டத்தில் சிறந்த முறையில் நடாத்தப்பட்டது.

இவ்வாறான மாநாடு வருடாந்தம் மாகாண சுதேச மருத்துவத் திணைக்களத்தினால் நடாத்தத் தீர்மானிக்கப்பட்டுள்ளது.

இதில் இவ் 2014ஆம் ஆண்டு மாநாட்டுக்கான ஆய்வுக்கட்டுரையை சமர்ப்பிப்பவர்கள் தங்களது ஆய்வுக்கட்டுரையை எதிர் வரும் பெப்ரவரி மாதம் 25ஆம் திகதிக்கு முன்னர் மாகாண ஆணையாளர், சுதேச மருத்துவத் திணைக்களம், வடமாகாணம், சுகாதாரக் கிராமம், பண்ணை, யாழ்ப்பாணம் எனும் முகவரிக்கு அனுப்பிவைக்குமாறு சுதேச மருத்துவத்திணைக்கள மாகாண ஆணையாளர் நாயகம் தெரிவித்துள்ளார்.

## தண்டனை

முல்லைத்தீவு புதுக்குடியிருப்பு பகுதியில் பெருமளவு கைத்தொலைபேசிகளை தொலைத தொடர்பு நிலையம் ஒன்றிலிருந்து களவெடுத்து விற்பனை செய்தார் என்று குற்றஞ்சாட்டப்பட்ட நபர் ஒருவருக்கு விசாரணையின் பின் ஒருவருட கடுழியச் சிறைத் தண்டனை விதித்து நீதிபதி மாணிக்கவாசகர் கணேசராஜா உத்தரவிட்டுள்ளார். சந்தேக நபர் மேலும் பல தொலைத்தொடர்பு நிலையங்களில் திருட்டுச் சம்பவங்களில் ஈடுபட்டிருந்ததாக பொலிஸார் மன்றில் தெரிவித்திருந்தனர்

*** *** ***

விலையுயர் டுபாய் சிகரெட்டுகளை தம் வசம் வைத்திருந்ததுடன் அதனைச் சிறுவர்களுக்கு விற்பனை செய்ததாக குற்றஞ்சாட்டப்பட்ட நபர் ஒருவருக்கு 5 ஆயிரம் ரூபா தண்டப்பணம் விதித்ததுடன் பெருந்தொகையான சிகரெட்டுகளை அழித்து விடுமாறு முல்லைத்தீவு மாவட்ட நீதிபதி மாணிக்கவாசகர் கணேசராஜா உத்தரவிட்டுள்ளார். (170)

# முரசின் இன்றைய பலன்



(22.11.2013 வெள்ளிக்கிழமை)

**விஜய வருஷம் கார்த்திகை மாதம் 06 ஆம் திகதி.**
**புனர்பூச நட்சத்திரம் மு.ப. 11.15 வரை.**
**பின் பூசம். பஞ்சமி/சித்தம்.**
**இராகுகாலம 10.40- 12.10 வரை. சுபநேரம 06.10 - 07.40 வரை.**

**ஜோதிர் வித்யா ரத்னா வி.ஏ.சிவராசா அவர்களால் கணிக்கப்பட்டது.**

**மேடம்** — விளம்பரம் செய்யப்பட்ட வேலைவாய்ப்பை நம்பி பணம் செலுத்தியும் பலனின்றிப் போதல், சனீஸ்வரன் 7இல் நிற்பதினால் பழகிய நட்பு பணப்பிரச்சினையால் முறிவுபடல்.

**ரிஷபம்** — புதிய எண்ணங்களை மனதிலே விதைத்ததால் வாழவேண்டுமென்ற பிடிப்பு ஏற்படல், ஒப்பந்தங்கள் வீழ்ச்சிப் பாதையை நோக்கிச் செல்வதால் புதியன ஏற்றுக் கொள்ள தயக்கம் காட்டுதல்.

**மிதுனம்** — சுமத்திய கெட்ட பெயரைப்போக்க உண்மை வெளிப்பட்டு குற்றமற்ற நிலை தக்க வைத்தல், காணி விற்க முயலுகையில் தடுத்து நிறுத்த நீதிமன்றத்திவ் வழக்குத் தாக்கல் செய்ய முஸ்தீபு.

**கடகம்** — பாடசாலைக்கு முழுக்குப் போட்டுவிட்டு நண்பர்களுடன் சுற்றித்திரியும் மகனைப்பற்றிய கவலை வாட்டல், காப்புறுதிப்பணம் செலுத்திய போதிலும் கடனைப் பெறுவதில் இழுபறி நிலைகண்டு துயரடைதல்.

**சிம்மம்** — தாழ்வான எண்ணத்தை தொலைத்து விட்டு எதிர் கொள்ளவேண்டிய தைரியத்தை ஏற்படுத்துங்கள், இராகுகேது நல்லநிலையில் இருப்பதினால் வரவு கூடி செலவுத்தானம் குறைவடையும்.

**கன்னி** — கெட்ட நண்பரின் சகவாசத்தால் பணமும் கரைந்து மானம் மரியாதை காற்றில் பறப்பதால் கவலை, 71/2ச் சனியும், 10இல் வியாழனும் நிற்பதால் ஈடுபடும் நிகழ்வுகளில் பின்னடைவுகள் தோன்றும்.

**துலாம்** — இரக்க சிந்தனை மேலோங்கி இருப்பதால் பண்பு நிறைந்த பாதையில் பயணிப்பதால் கெடுதல் நீங்குதல், பிதாவழி சொத்துக்கள் பகீரதப் பிரயத்தனத்தின் பின்னர் வந்து சேரல்.

**விருச்சிகம்** — வக்கிர உணர்வுகள் மனதை விட்டு அகலச் சாந்தியடைந்து மனதில் அமைதிதோன்றல், சுபகாரியங்களுக்கு பட்ட கடனைக் கொடுக்கமுடியாது திண்டாடுதல்.

**தனுசு** — ஒப்பந்தகாலம் மேலும் நீடிக்கச் செய்யும் செய்தி அறிந்து மனமகிழ்ச்சி, அரசின் சுவீகாரப்புத்திரராக கருதப்பட இன்றே அத்திவாரமிடப்படும்.

**மகரம்** — சிக்கலான, சவாலான செயல்களை கையிலெடுத்து தடுமாறுதல், உதவி செய்ய வெளிக்கிட்டு வீண் சிக்கலினின்றும் விடுபட முடியாது தவித்தல்.

**கும்பம்** — துன்பத்தால் துடித்துக் கொண்டிருப்பவருக்கு ஆதரவு காட்டி அணைத்து பெருமையுறல், இடைத் தங்கல் நாட்டிலிருந்து செல்ல வேண்டிய இடத்தை அடைந்த செய்தி கேட்டு மகிழ்வுறல்.

**மீனம்** — வீழ்ச்சிப் பாதைக்குச் சென்றவருக்கு உதவி செய்து கரையேற்றச் செய்ததால் நன்றி தெரிவித்தல், அஷ்டமத்துச்சனி இருப்பதினால் தொடுத்த செயல்கள் முடிவுறாது இழுபடல்.

# சரிவிலிருந்து மீண்டது ஆஸி.




(பிறிஸ்பேன்)

ஜோன்சன், ஹடின் ஆகியோரின் சிறப்பான இணைப்பாட்டத்தின் மூலம் அவுஸ்ரேலிய அணி நெடிக்கடியிலிருந்து மீண்டுள்ளது.

இங்கிலாந்து, அவுஸ்ரேலிய அணிகளுக்கிடையிலான ஐந்து போட்டிகளைக் கொண்ட ஆஷஸ் தொடரின் ஆட்டம் நேற்று அவுஸ்ரேலியாவின் பிறிஸ்பேனில் ஆரம்பமானது.

நாணயச் சுழற்சியில் வெற்றிபெற்று முதல் இனிங்ஸிற்காக களமிறங்கிய அவுஸ்ரேலிய அணி முதல் விக்கெட்டை விரைவாக இழந்தது. இருப்பினும் இரண்டாவது விக்கெட்டுக்காக இணைந்த வட்சன், வோனர் இணை பொறுமையாக ஆடியது. இருப்பினும் ஸ்ரூவெட் புட்டின் பந்து வீச்சுக்குத் தாக்குப்பிடிக்க முடியாது இந்த ஜோடியும் பிரிக்கப்பட்டதுடன் அவுஸ்ரேலிய அணியின் விக்கெட்டுக்களும் வேகமாக சரிக்கப்பட்டு வந்தது. ஒரு கட்டத்தில் ஐந்து விக்கெட்டுக்களை இழந்த அவுஸ்ரேலிய அணி 132 ஓட்டங்களைப் பெற்றிருந்தது. இந்நிலையில் ஆறாவது விக்கெட்டுக்காக இணைந்த ஜோன்சன் ஹடினுடன் இணைந்து பொறுமையாகச் செயற்பட்டார். அத்துடன் அணியை சரிவிலிருந்தும் இந்த ஜோடி மீட்டது. இருப்பினும் 114 ஓட்டங்களைப் பெற்றவேளை இந்த ஜோடி பிரிக்கப்பட்டது. இறுதியில் நேற்றைய முதல் நாள் ஆட்டம் நிறுத்தப்பட்டவேளை அவுஸ்ரேலிய அணி முதல் இனிங்ஸிற்காக எட்டு விக்கெட்டுக்களை இழந்து 278 ஓட்டங்களைப் பெற்றிருந்தது. இதில் ஹடின் 132 பந்துகளை எதிர்கொண்டு ஒரு சிக்ஸர், ஏழு பவுண்டரிகள் அடங்கலாக ஆட்டமிழக்காது 78 ஓட்டங்களைப் பெற்றுள்ளார். மற்றும் ஜோன்சன் 134 பந்துகளை எதிர்கொண்டு இரண்டு சிக்ஸர்கள், ஆறு பவுண்டரிகள் அடங்கலாக 64, டேவிட் வோனர் 49, வட்சன் 22, எம். ஸ்மித் 31 ஓட்டங்களைப் பெற்றனர். பந்து வீச்சில் ஸ்ரூவெட் புரொட் ஐந்து, அண்டர்சன் இரண்டு விக்கெட்டுக்களைக் கைப்பற்றினர். இன்று போட்டியின் இரண்டாம் நாளாகும்.

# வென்றது தென்னாபிரிக்கா



(ஜொகனஸ்பேர்க்)

பாகிஸ்தான் அணிக்கெதிரான முதல் ருவெண்ரி-20 போட்டியில் தென்னாபிரிக்க அணி வெற்றிபெற்றது.

தென்னாபிரிக்காவிற்கு கிரிக்கெட் சுற்றுப்பயணம் மேற்கொண்டுள்ளபாகிஸ்தான் அணிக்கும், தென்னாபிரிக்க அணிக்குமிடையிலான 2 போட்டிகள் கொண்ட ருவெண்ரி-20 தொடரின் முதலாவது போட்டி ஜொகனஸ்பேர்க்கில் நேற்று முன்தினம் நடைபெற்றது.

நாணயச்சுழற்சியில் வெற்றிபெற்ற பாகிஸ்தான் அணி முதலில் களத்தடுப்பைத் தீர்மானித்தது. இதற்கமைய முதலில் ஆடிய தென்னாபிரிக்க அணி 20 ஓவர்கள் நிறைவில் ஏழு விக்கெட்டுக்களை இழந்து 153 ஓட்டங்களைப் பெற்றது. இதில் குயிட்டன் டீ கொக் 43, அம்லா 31, டு பிளிசர்ஸ் 22, டேவிட் மில்லர் 19 ஓட்டங்களைப் பெற்றனர். பந்து வீச்சில் மொகமட் ஹபீஸ், யுனைட்கான் ஆகியோர் தலா இரு விக்கெட்டுக்களைக் கைப்பற்றினர்.

154 ஓட்டங்களைப் பெற்றால் வெற்றி என்ற நிலையில் களமிறங்கிய பாகிஸ்தான் அணி 9.1 ஓவர்கள் நிறைவில் இரண்டு விக்கெட்டுக்களை இழந்து 60 ஓட்டங்களைப் பெற்றவேளை மழை காரணமாக போட்டி நிறுத்தப்பட்டது. தொடர்ந்தும் பெய்த மழை காரணமாக போட்டி கைவிடப்பட்டதுடன் டக்வொர்த் லூயிஸ்முறையில் தென்னாபிரிக்கஅணி நான்கு ஓட்டங்களால் வெற்றிபெற்றதாக அறிவிக்கப்பட்டது. போட்டியின் ஆட்ட நாயகனாக குயின்டன் டீ கொக் தெரிவானார்.

# நுழைவுச் சீட்டு விலை அறிவிப்பு

உலக கோப்பை கிரிக்கெட் போட்டிக்கான நுழைவுச சீட்டு விலை மற்றும் பயணச்செலவுகள் குறித்த அறிவிப்பை சர்வதேச கிரிக்கெட் சபை வெளியிட்டுள்ளது. 2015ஆம் ஆண்டு பெப்ரவரி 14ஆம் திகதி முதல் மார்ச் 29 வரை அவுஸ்ரேலியாவும் நியூசிலாந்தும் இணைந்து இப்போட்டியை நடத்து கின்றன. 2015ஆம் ஆண்டு உலககோப்பை 14 நகரங்களில் 44 நாட்கள் 49 போட்டிகள் என இடம்பெறவுள்ளது. ஆரம்ப ஆட்டம் நியூசிலாந்து அணியின் கிரிஸ்ட் சேர்ச் மற்றும் இறுதி ஆட்டம் அவுஸ்ரேலியாவின் மெல்பேர்னிலும் இடம்பெறவுள்ளது.

இதற்கான நுழைவுச் சீட்டு 2014ஆம் ஆண்டு பெப்ரவரி மாதம் முதல் விற்பனைக்கு வரும் என ஐ.சி.சி தெரிவித்துள்ளது. மேலும் கிரிக்கெட் இரசிகர்கள் www.cricketworldcup.com என்ற இணையத் தளத்திலும் பதிவு செய்து கொள்ளலாம் என தெரிவிக்கப்பட்டுள்ளது.

# மூன்றாவது முறையாக "கோல்டன் பூட்" விருது



(பார்சிலோனா)

பார்சிலோனா அணியின் நட்சத்திர வீரர் லியோனல் மெஸ்சிக்கு, சிறந்த ஐரோப்பிய கால்பந்து வீரருக்கான கோல்டன் பூட் விருது வழங்கப்பட்டது.

கிளப் அணிகளுக்கிடையிலான ஐரோப்பிய கால்பந்து போட்டிகளில் சிறந்து விளங்கும் வீரர்களுக்கு ஆண்டு தோறும் விருது வழங்கப்படும். இதன்படி 2012-13ஆம் ஆண்டுக்கான ஸ்பானிஷ் லீக் தொடரில், மொத்தம் 46 கோல் அடித்து பார்சிலோன்ா கோப்பை வெல்ல முக்கிய காரணமாக விளங்கிய, ஆர்ஜென்ரீனாவின் லியோனல் மெஸ்சிக்கு, சிறந்த வீரருக்கான கோல்டன் பூட் விருது நேற்று முன்தினம் வழங்கப்பட்டது. இவர், இவ்விருதை மூன்றாவது முறையாக பெறுகிறார். முன்னதாக இவர், 2009-10 (34 கோல்), 2010-11இல் (50 கோல்) இவ்விருதை கைப்பற்றினார். இதன்மூலம் மூன்று முறை இவ்விருது வென்ற முதல் வீரர் என்ற பெருமையைப் பெற்றார்.

இதுகுறித்து மெஸ்சி கூறுகையில், மூன்றாவது முறையாக இவ்விருது வென்றது மகிழ்ச்சி அளிக்கிறது. இவ்விருதை எனது குடும்பத்தினருக்கும், சாதிக்க உதவிய சகவீரர்களுக்கும் அர்ப்பணம் செய்கிறேன். சகவீரர்கள் உதவி இல்லாமல் என்னால் அதிக கோல் அடித்திருக்க முடியாது என்றார்.



# உலக கிண்ண கால்பந்து அணிகள் தகுதி

அடுத்த வருடம் பிரேசிலில் நடைபெறவுள்ள உலகக் கிண்ணக் கால்பந்தாட்டத் தொடருக்கு பிரான்ஸ் மற்றும் போர்த்துக்கல் அணிகள் தகுதிபெற்றன.இதற்கமைய 2014 ஆம் ஆண்டு உலகக் கிண்ணக் கால்பந்தாட்டத் தொடரில் விளையாட 32 அணிகளும் தகுதிபெற்றுள்ளன.

2014 ஆம் ஆண்டு உலகக் கிண்ணக் கால்பந்தாட்டத் தொடருக்கான தகுதிகாண் போட்டி ஒன்றில் பிரான்ஸ் மற்றும் உக்ரேன் அணிகள் பலப்பரீட்சை நடாத்தின.

பிரான்ஸ் தலைநகர் பரிஸில் நடைபெற்ற இந்தப் போட்டியில் முதல் பாதியில் பிரான்ஸ் 2 கோல் கணக்கில் முன்னிலைப் பெற்றது.

இரண்டாம் பாதியில் பிரான்ஸ் மேலும் ஒரு கோலைப் போட்ட போதிலும் உக்ரேன் அணியால் ஒரு கோலையேனும் போட முடியவில்லை.

அதற்கமைய 3 -0 எனும் கோல் கணக்கில் வெற்றிபெற்ற பிரான்ஸ் 2014 ஆம் ஆண்டு உலகக் கிண்ணக் கால்பந்தாட்டத் தொடரில் விளையாடுவதனை உறுதிசெய்துகொண்டது. தொடர்ந்து நடைபெற்ற போட்டியில் போர்த்துக்கல் அணியும், சுவீடன் அணியும் மோதின. இதில் போர்த்துக்கல் 3-2 என்ற கோல் கணக்கில் வெற்றிபெற்றது. இதன் மூலம் போர்த்துக்கல் அணி உலகக் கிண்ணப் போட்டிக்குத் தகுதி பெற்றது. உலக கிண்ணக் கால்பந்து போட்டிக்குத் தகுதி பெற்ற 32 நாடுகள் வருமாறு:

ஐரோப்பா (13): ஸ்பெயின் (நடப்பு சம்பியன்), நெதர்லாந்து, இத்தாலி, ஜேர்மனி, பெல்ஜியம், இங்கிலாந்து, ரஷ்யா, சுவிட்சர்லாந்து, போர்த்துக்கல், பிரான்ஸ், குரோஷியா, கிரீஸ், போஸ்னியா, ஹெர்ச் கோவா.


ஆசியா (4): ஜப்பான், தென்கொரியா, ஈரான், அவுஸ்ரேலியா.

தென்னாபிரிக்கா (6): பிரேசில் (போட்டியை நடத்தும் நாடு), ஆர்ஜென்ரினா, கொலம்பியா, சிலி, ஈக்வடார், உருகுவே.

கான்காகாப் (4): அமெரிக்கா, கோஸ்டாரிகா, ஹோண்ட்ரஸ், மெக்சிக்கோ.

ஆபிரிக்கா (5): நைஜீரியா, ஐவேரி கோஸ்ட், கமரூன், கானா, அல்ஜீரியா.

# லாரா அதிர்ச்சி



டுவைன் பிராவோ, சுனில் நரைன் ஆகியோர் நீக்கம் மிகுந்த அதிர்ச்சியைத் தருவதாக மேற்கிந்தியத்தீவுகள் அணியின் முன்னாள் கப்டன் லாரா தெரிவித்துள்ளார்.

நியூசிலாந்து செல்லும் மேற்கிந்தியத் தீவுகள் அணி டெஸ்ட் தொடரில் பங்கு கொள்ளவுள்ளது. இதற்கான அணித் தேர்வில் டுவைன் பிராவோ மற்றும் சுனில் நரைன் ஆகியோர் புறக்கணிக்கப்பட்டுள்ளனர். இது குறித்து கருத் துத் தெரிவிக்கையிலேயே லாரா மேற்கண்டவாறு குறிப்பிட்டார். இது குறித்து அவர் மேலும் தெரிவிக்கையில்,

டெஸ்ட் தொடருக்கு தேர்வு செய்த அணி என்ன? டரன் சமியை கப்டனாக நியமிக்கும்போதே சகலதுறை வீரர் டுவைன் பிராவோவுக்கு அணியில் இடமில்லாமல் போய் விடுகிறது. டுவைன் பிராவோ சுமார் 3 ஆண்டுகளாக டெஸ்ட் கிரிக்கெட்டில் இல்லை. நிச்சயம் அது அவரது மனதை புண்படுத்தியிருக்கும்.

இதைவிட அதிர்ச்சிகரமான நீக்கம் சுனில் நரைன்! இந்திய ஆடுகளங்கள் எப்படி நடந்து கொள்ளும் என்பதை தன் விரல் நுனியில் வைத்திருக்கிறார் சுனில் நரைன். உலகின் சிறந்த கிரிக்கெட் வீரர் என்று உலகமே அங்கீகாரம் வழங்கிய பின்னர் எமது தேர்வாளர்கள் மட்டும் அவரைக் கவனிக்காமல் இருப்பது ஆச்சரியமே! எனவும் அவர் மேலும் தெரிவித்தார்.

# தேசிய ஒலிம்பிக் குழுவின் செயற்பாட்டில் விமர்சனம்

(கொழும்பு)

தேசிய ஒலிம்பிக் குழுவின் செயற்பாடுகளை விமர்சித்து விளையாட்டுத்துறை அமைச்சு ஊடக அறிக்கை ஒன்றை விடுத்துள்ளது. அரசியல் அழுத்தங்கள் விடுக்கப்படுவதாக மேற்கோள்காட்டி இலங்கை ஒலிம்பிக் குழுவினால் சர்வதேச ஒலிம்பிக் குழுவிற்கு அனுப்பப்பட்ட கடிதத்துக்கு நாடு என்ற ரீதியில் பதிலளிக்க அரசாங்கம் தயாராக உள்ளதென அந்த அறிக்கையில் தெரிவிக்கப்பட்டுள்ளது.

சர்வதேச ஒலிம்பிக் குழுவின் அறிவுறுத்தலின் பிரகாரம் விளையாட்டுத்துறை அமைச்சர் தலைமையிலான ஐந்து பேரடங்கிய குழுவினர் எதிர்வரும் 27ஆம் திகதி சுவிட்சர்லாந்தின் லொசேன் நகரில் ஒலிம்பிக் குழு அதிகாரிகளை சந்திக்கவுள்ளதாக இந்த ஊடக அறிக்கையில் குறிப்பிடப்பட்டுள்ளது.

அமைச்சின் செயலாளர் அனுர ஜயவிக்ரம, விளையாட்டுத்துறை அமைச்சின் சட்ட ஆலோசகர் பண்டுக கீர்த்திநந்த, தயான் கோமஸ், பிரதி சொலிசிட்டர் நாயகம் சுமதி தர்மவர்தன மற்றும் தேசிய விளையாட்டு சங்கத்தின் தலைவர் டாக்டர் மையா குணசேகர ஆகியோர் அந்தக் குழுவில் அடங்குகின்றனர்.

விளையாட்டுத்துறை அமைச்சுக்கும் தேசிய ஒலிம்பிக் குழுவுக்குமிடையில் ஏற்பட்டுள்ள முறுகல் நிலை தொடர்பாக குழுவின் செயலாளர் மெக்ஸ்வெல் டி சில்வா தெரிவிக்கையில், ஊடகவியலாளர் சந்திப்பொன்றை நடத்தி இது தொடர்பான விரிவான அறிக்கையை வெளியிடவுள்ளதாகத் தெரிவித்தார்.


சானு


திலக்ஷி


கஜானனன்

# தேசிய அணியில் மகாஜன வீரர்கள்

(தெல்லிப்பளை)


இலங்கை பாடசாலைகள் கால்பந்தாட்ட அணியில் தெல்லிப்பளை மகாஜனக் கல்லூரியைச் சேர்ந்த மூவர் இடம்பிடித்துள்ளனர்.

இலங்கை பாடசாலைகள் கால்பந்தாட்ட அணிக்கு வீர,வீராங்கனைகளைத் தெரிவு செய்வதற்கான பயிற்சிப் போட்டிகள் கடந்த 13,14ஆம் திகதிகளில் கொழும்பு ராஜகிரிய விளையாட்டு மைதானத்தில் நடைபெற்றது. இதில் நாளாவிய ரீதியில் பெருமளவிலான வீர,வீராங்கனைகள் பங்குகொண்டன. வடமாகாணம் சார்பாக தெல்லிப்பளை மகாஜனக் கல்லூரி வீரர்கள் மூவர் இப்பயிற்சி முகாமிற்கு அழைக்கப்பட்டிருந்தனர்.

ஆண்கள் பிரிவில் 65 வீரர்களும், பெண்கள் பிரிவில் 50 வீராங்கனைகளும் இப்பயிற்சி முகாமில் பங்குகொண்டனர். இதில் 18 வயதுப் பிரிவு ஆண்கள் அணிக்கும், 14 வயதுப் பிரிவு பெண்கள் அணிக்குமான அணித் தேர்வே இடம்பெற்றது.

இதில் தெல்லிப்பளை மகாஜனக் கல்லூரி வீராங்கனைகளான சானு, நி. திலஷ்சி மற்றும் நா. கஜானன் ஆகியோர் சிறப்பாகச் செயற்பட்டு, இலங்கை பாடசாலைகள் கால்பந்தாட்ட தெரிவுக் குழுவின் பார்வையை தங்கள் பக்கம் ஈர்த்தனர்.

இதன் காரணமாக இறுதியாகத் தெரிவு செய்யப்பட்ட 18 பேர் கொண்ட ஆண்கள் அணியில் நா. கஜானனும், 18 பேர் கொண்ட பெண்கள் அணியில் ப. சானு மற்றும் நி. திலஷ்சி ஆகியோர் தெரிவு செய்யப்பட்டுள்ளனர். சானு கடந்த வருடமும் இலங்கை பாடசாலைகள் கால்பந்தாட்ட அணியில் இடம்பிடித்து பல போட்டிகளில் பங்குபற்றியமை குறிப்பிடத்தக்கது. (93)



# கிளி. விவேகானந்தா வித்திக்கு விளையாட்டு சீருடைகள் வழங்கல்

(கிளிநொச்சி)

கிளிநொச்சி விவேகானந்தா வித்தியாலயத்தின் விளையாட்டு அணிகளுக்கான சீருடைகள் பாடசாலையின் ஸ்தாபகரும், நாடாளுமன்ற உறுப்பினருமான முருகேசு சந்திரகுமாரினால் வழங்கப்பட்டது.

கிளிநொச்சி விவேகானந்தா வித்தியாலய ஆண், பெண் கரப்பந்து மற்றும் கால்பந்து அணிகள் சீருடைகளின்றி போட்டிகளில் பங்குபற்றி வந்தன. இது தொடர்பாக நாடாளுமன்ற உறுப்பினர் சந்திரகுமாருக்கு பாடசாலைச் சமூகத்தினால் தெரியப்படுத்தப்பட்டது. இதனை அடுத்து இச்சீருடை கள் வழங்கப்பட்டன.

நேற்று முன்தினம் காலை வித்தியாலய அதிபர் திருமதி மாணிக்கவாசகன் தலைமையில் நடைபெற்ற இந்நிகழ்வில் நாடாளுமன்ற உறுப்பினர் சந்திரகுமார் சீருடைகளை வழங்கி வைத்தார்.

இந்நிகழ்வில் கரைச்சி பிரதேசசபை உறுப்பினர் கிருஸ்ணசாமி, கிளிநொச்சி கல்விவலய ஆரம்பப்பிரிவு உதவிக் கல்விப்பணிப்பாளர் கணேசலிங்கம், வித்தியாலயத்தின் அபிவிருத்திச்சங்க செயலாளர் கணேஸ் மற்றும் அதன் உறுப்பினர்கள், சந்தை வர்த்தக சங்கத்தின் முன்னாள் தலைவர் இரத்தினமணி, பாடசாலை ஆசிரியர்கள் மாணவர்கள் பெற்றோர்கள் எனப்பலரும் கலந்துகொண்டனர்.

# பற்றிக்ஸ், யாழ்.இந்து ஆட்டம் சமநிலையில் நிறைவு

(மானிப்பாய்)

சென். பற்றிக்ஸ், யாழ். இந்துக் கல்லூரி அணிகளுக்கிடையிலான ஒரு நாள் இனிங்ஸ் போட்டி வெற்றி தோல்வியின்றி நிறைவடைந்தது.

இலங்கை பாடசாலைகள் கிரிக்கெட் சங்கத்தினால் நடாத்தப்பட்டு வரும் பிரிவு மூன்றின் 13 வயதுப் பிரிவு அணிகளுக்கான போட்டிகள் இடம்பெற்று வருகின்றன.

இதில் யாழ். இந்துக் கல்லூரி அணிக்கும், சென். பற்றிக்ஸ் கல்லூரி அணிக்குமிடையிலான ஆட்டமொன்று அண்மையில் யாழ். இந்துக் கல்லூரி மைதானத்தில் நடைபெற்றது.

நாணயற் சுழற்சியில் வெற்றிபெற்று முதல் இனிங்ஸிற்காக ஆடிய சென்.பற்றிக்ஸ் கல்லூரி எட்டு விக்கெட்டுக்களை இழந்து 205 ஓட்டங்களைப் பெற்றவேளை ஆட்டத்தை நிறுத்திக் கொண்டது.

தொடர்ந்து முதல் இனிங்ஸிற்காக ஆடிய யாழ். இந்துக் கல்லூரி அணி ஏழு விக்கெட்டுக்களை இழந்து 111 ஓட்டங்களைப் பெற்றவேளை போட்டி வெளிச்சமின்மை காரணமாக நிறைவுக்கு வந்தது. இதன் காரணமாக இப்போட்டி வெற்றிதோல்வியின்றி நிறைவடைந்தது. (48)

# பயிற்சி பட்டறை

சீ.எஸ்.என். தொலைக்காட்சி நிறுவனம் கல்வி அமைச்சுடன் இணைந்து நாடளாவிய ரீதியில் சிறந்த வீர, வீராங்கனைகளைத் தெரிவு செய்து பயிற்சிப் பட்டறைகளை நடாத்தி வருகிறது.

கிரிக்கெட், கால்பந்து, கரப்பந்தாட்டம் வலைப்பந்து, கொக்கி, ரகர் ஆகிய போட்டிகளுக்கான தெரிவுகளையும் மேற்கொண்டுள்ளது. பாடசாலை மட்டத்திலிருந்தும் இதற்கென பயிற்சியாளர்கள் தெரிவு செய்யப்படவுள்ளனர். மேலதிக விபரங்களை மல்கம் பெரேரா திட்டப் பணிப்பாளர் அல்லது 0718513337 எனும் தொலைபேசி இலக்கத்துடன் தொடர்பு கொள்ளுமாறு கேட்கப்பட்டுள்ளனர்.




# ஆசிய கராத்தே போட்டி இலங்கைக்கு 20 பதக்கம்



(கொழும்பு)

19ஆவது ஆசிய கராத்தே போட்டியில் இலங்கை 10 தங்கம் 09 வெள்ளி, 1 வெண்கலம் உட்பட இருபது பதக்கங்களை வென்றுள்ளது.

இந்தியாவின் கேரளாவில் அண்மையில் இடம்பெற்ற இப்போட்டியில் இந்தியா, நேபாளம், பங்களாதேஷ், பூட்டா்ன், தென்னாபிரிக்கா ஆகிய நாடுகளைச் சேர்ந்த போட்டியாளர்கள் கலந்துகொண்டன.

இதில் இலங்கை மிகவும் சிறப்பான முறையில் செயற்பட்டு பதக்கங்களை வென்றுள்ளதாக விளையாட்டுத்துறை அமைச்சு பாராட்டியுள்ளது.

# கிண்ணம் வென்றது நவீல்ட்



(கைதடி)


வைரவிழா வெற்றிக் கிண்ண மென்பந்து கிரிக்கெட் தொடரின் வெற்றிக் கிண்ணத்தை கைதடி நவீல்ட் பாடசாலை அணி கைப்பற்றிக் கொண்டது.

கைதடி விக்னேஸ்வரா வித்தியாலயத்தின் வைரவிழாவினை முன்னிட்டு சாவகச்சேரி பிரதேசத்திற்குட்பட்ட பாடசாலை அணிகளுக்கிடையிலான மாபெரும் மென்பந்து கிரிக்கெட் தொடரை கைதடி விக்னேஸ்வரா நடாத்தியது.

12 ஓவர்களைக் கொண்ட இப்போட்டித் தொடரில் சாவகச்சேரி பிரதேசத்திற்குட்பட்ட பல அணிகள் பங்குகொண்டன. இருப்பினும் இப்போட்டித் தொடரின் இறுதிப் போட்டியில் கைதடி நவீல்ட் அணியும், நாவற்குழி வித்தியாலய அணியும் மோதின. இப்போட்டித் தொடரின் இறுதிப் போட்டி நாவற்குழி மகாவித்தியாலய மைதானத்தில் அண்மையில் நடைபெற்றது.நாணயச் சுழற்சியில் வெற்றி பெற்று முதலில் ஆடிய நாவற்குழி மகாவித்தியாலய அணி சகல விக்கெட்டுக்களையும் இழந்து 56 ஓட்டங்களைப் பெற்றது.

பதிலுக்கு 57 ஓட்டங்களைப் பெற்றால் வெற்றி என்ற நிலையில் களமிறங்கிய நவீல்ட் பாடசாலை அணி ஆறு விக்கெட்டுக்களை இழந்து வெற்றியிலக்கை அடைந்ததுடன் வெற்றிக் கிண்ணத்தையும் கைப்பற்றிக்கொண்டது. இப்போட்டியின் சிறப்பாட்டக்காரராக நவீல்ட் பாடசாலை அணி வீரர் திசான் தெரிவுசெய்யப்பட்டார். (51)





# வன்முறையற்ற பாதையின் பக்கம்

ஒரு பத்திரிகையாளர் காந்தியிடம் கேட்டார்: "முஸ்லிம்களாகிய நாங்கள், எங்கள் இறைத்தூதரின் வாழ்வு முற்றிலும் ஏக இறைவனால் வழி நடத்தப்பட்டது எனவும், அது ஒரு உண்மையான "அஹிம்சை"ப் பாதை எனவும் நம்புகிறோம். ஆனால் இந்த அஹிம்சை என்பது நீங்கள் சொல்லும் பொருளில் அல்ல. இறைத்தூதர் எந்நாளும் தன்னிச்சையான தாக்குதல் யுத்தத்தை நடத்தியதில்லை. மற்றவர்களின் உணர்வுகள் மீது அதிகபட்சக் கருணை உடையவர் அவர். ஆனால் ஒரு தற்காப்புப் போருக்குத் தள்ளப்பட்டாரேயானால், ஒரு புனிதப் போருக்காக அவர் வாளை ஏந்தத் தயங்க மாட்டார். அவர் விதித்துள்ள நிபந்தனைகளுக்குட்பட்டு வாளேந்த அனுமதி அளித்துள்ளார்.

ஆனால் நீங்கள் சொல்லும் அஹிம்சை என்பது வேறு. நீங்கள் எல்லாச் சந்தர்ப்பங்களிலும் அதைக் கடைப்பிடிக்க வேண்டும் என்கிறீர்கள். இறைத்தூதர் இதை அனுமதிப்பார் என நான் நினைக்கவில்லை. நாங்கள் யாரைப் பின்பற்றுவது? உங்களைப் பின்பற்றினால் நாங்கள் முஸ்லிம்களாக இருக்க இயலாது. இறைத் தூதரைப் பின்பற்றினால், உச்சபட்சமான அஹிம்சையைப் பின்பற்றும் உங்களின் பாதையில், உங்களின் காங்கிரஸ் இயக்கத்தில் இருக்க இயலாது? இந்தப் பிரச்சினைக்கு ஏதாவது தீர்வு சொல்லுங்கள்?"

காந்தி இப்படிப் பதிலுரைத்தார்:

"நான் இதற்கு இப்படித்தான் உங்களுக்கு ஒரு பதிலைச் சொல்ல இயலும். இப்படியான ஒரு வேறுபாட்டை உணர்வீர்களேயானால், நீங்கள் இறைத்தூதரின் வழியைத்தான் பின்பற்றவேண்டும். எனினும் ஒன்றைச் சொல்ல முடியும். மதங்களிலிருந்து(நடுநிலையாக) விலகி நிற்கிற ஒரு மாணவனாக இருந்து நான் திருக்குரானையும், இறைத்தூதரின் வாழ்வையும் பயின்றுள்ளேன். அந்த வகையில் நான் வந்தடைந்துள்ள முடிவு என்னவெனில் திருக்குர்ரான் வன்முறையற்ற பாதையின் பக்கமே நிற்கிறது என்பதுதான். வன்முறையைவிட வன்முறையற்ற பாதை சிறந்தது என்றுதான் திருக்குர்ரான் சொல்கிறது. வன்முறையற்ற வழியையே அது கடமையாக்குகிறது. தவிர்க்க இயலாத அவசியங்களில் மட்டுமே அது வன்முறையை அனுமதிக்கிறது.

இறைத்தூதரின் செயல்களின் மீது தீர்ப்புரைக்க நான் துணிய மாட்டேன். ஒரு மோட்டார் காரை நான் ஓட்ட முயன்றால் உறுதியாக அது விபத்தில்தான் முடியும். மரணமும் ஏற்படலாம். அப்படி இருக்கையில் நான் என்னை ஒரு இறைத்தூதராகப் பாவிப்பது எத்தனை ஆபத்து? இறைத்தூதரிடம் ஒருமுறை அவரது தோழர்கள், "நீங்கள் மட்டும் விதித்துள்ளதைக் காட்டிலும் அதிகம் நோன்பிருக்கிறீர்களே, நாங்களும் உங்களை ஏன் பின்பற்றக்கூடாது?" எனக் கேட்டனர். அதற்கு இறைத்தூதர், "அல்லாஹ் எனக்கு இறை உணவை அளிக்கிறான். அது என் உடற் தேவைகளையும் தீர்க்கிறது. உங்களுக்கு அவன் ரமலானை அருளியுள்ளான். எனவே நீங்கள் எல்லா அம்சங்களிலும் அப்படியே என்னைப் பின்பற்ற வேண்டியதில்லை" என்றார். இதை நான் என் நினைவிலிருந்து சொல்கிறேன்" என்றார் காந்தி.

\- அ.மார்க்ஸ் -


# சங்கீத் ச

இந்தியாவின் பாடகர்களில் முதன்மையானவராக தான்ஸேன் என்பவரை சரித்திரம் பதிவு செய்துள்ளது. அவரை மொகலாய சாம்ராஜ்யத்தின் அக்பர் சபையில் ஆஸ்தான பாடகராக திரைப்படங்கள் சித்தரிக்கின்றன. இதை மெய்யெனக் கருதி இசைச் சக்கரவர்த்தி தான்ஸேனின் குரல் எப்படி இருக்கும் எனக் கற்பனை செய்தால் நான் கேட்பது மன்னா டேயின் குரலைத்தான்.

சங்கீத ஸாம்ராட் தான்ஸேன் படத்தில் "சப்தஸ்வரன் தீன் கிரம" என்ற பாட்டைக் கேட்டால் நான் சொல்வதை முழுமையாக உணரலாம். (1962 - இசை: எஸ்.என்.த்ரிபாதி எழுதியவர்: சுவாமி ஹரிதாஸ்)

ர.்.பி, முகேஷ், கிஷோர்குமார் போன்ற சமகால பின்னணிப் பாடகர்களை விட மூத்தவர். 94 வயதுகள் நிறை வாழ்வு வாழ்ந்தவர். கடைசிவரை அவர் குரலில் தொய்வு வெளிப்பட்டதில்லை.

"பாம்பே சலோ". 1942இல் 23 வயதில் சி.ராமச்சந்த்ரா, எஸ்.டி. பர்மன் போன்ற முன்னணி இசையமைப்பாளர்களிடம் உதவியாளராக பணியாற்றினார். ராமராஜ்யா என்ற புராணப்படத்தில் தாடி வைத்த வயோதிகருக்காக தன் முதல் பாட்டைப் பாடினார். 1950இல், 31 வயதில் "ஊப்பர் ககன் விஷால்"




# பிழையின்றித் தமிழ்

## 57

**எப்படி நேர்கின்றன?**

பிழைகள் சில எப்படி நேர்கின்றன என்று புரியவில்லை. ஒரு செய்தியறிக்கையில், "மரப்பாலம் உடைந்து விபத்து ஏற்பட்ட விபத்தில் உயிரிழந்தவர்கள்" என்று நீண்டது அச்செய்தி. படிக்கும்போது நாக்குத் தடுமாறி, விபத்து என்னும் சொல் இடையில் புகுந்ததோ?

"ஒவ்வொரு பூக்களுமே" திரைப்பாடல் வெளிவந்தபோதே ஒவ்வொரு பூவும் என்றுதானே வரும்? பூக்கள் என்றது பிழை என்று பேசப்பட்டதைப் பலரும் அறிவர். "இதழில் வெளிவரும் ஒவ்வொரு துணுக்குகளும் அருமை" எனும் வாக்கியத்தைப் படித்தபோது மேற்சொன்ன பாடல் பற்றிய செய்தி நினைவில் எழுந்தது. ஒவ்வொரு துணுக்கும் என்றோ எல்லாத் துணுக்குகளும் என்றோ எழுதிட வேண்டும்.


இவ்வாறே "ஐந்து பேரின் மனுக்கள் விசாரணைக்கு ஏற்றுக் கொள்ளப்பட்டது". இந்த வாக்கியத்திலும் ஒருமை, பன்மை மயக்கம் உள்ளது. ஏற்றுக் கொள்ளப்பட்டன என்று முடித்தல் வேண்டும்.

"சட்டத்தைத் திரும்பப் பெறப்பட வேண்டும்" என்று ஒரு செய்தியாளர் படித்தார். சட்டம் திரும்பப் பெறப்பட வேண்டும். அல்லது சட்டத்தைத் திரும்பப் பெற வேண்டும் என்று இத்தொடர் அமைந்திட வேண்டும்.

**மகவுப்பேறா? மகப்பேறா?**

மகப்பேறு மருத்துவமனை என்று பலகை பார்க்கிறோம். நாமும் எழுதுகிறோம். "மகவு என்றால்தான் பிள்ளை; அதனால் மகவுப் பேறு மருத்துவமனை என்றுதானே இருக்க வேண்டும்" எனப் பெரியவர் ஒருவர் நம்பால் கேட்டார்.

உண்மைதான், தொல்காப்பியத்திலும் இளமைப் பெயர்கள் பற்றி நூற்பா (சூத்திரம்) 1500-இல் மகவு என்றுதான் குறிக்கப்பட்டுள்ளது. ஆனால் ஆண்மகன், பெண்மகள் என்று எழுதுகிறோம். மகன், மகள் எப்படி வந்தன? மகவு என்னும் சொல் மக - எனத் திரிந்து அன் விகுதி பெற்று ஆண்பாலாகவும், அள் விகுதி பெற்றுப் பெண்பாலாகவும் ஆயின என்று சொல்லலாம்.



குழந்தைப் பேறு என்பதில் மகனோ, மகளோ பிறக்கக்கூடும். இவ்விரண்டிலும் "மக"தான் உள்ளது "மகவு" இல்லை.

ஆதலின் மகப்பேறு என்று குறிப்பதில் தவறில்லை. மகன், மகள் என்னும் சொற்கள், தொல்காப்பியம், சங்க நூல்கள் எனப் பண்டுதொட்டு இருப்பனவேயாம். மக்கள் என்னும் சொல்லும் "மக" அடிப்படையில் உருவானதாக இருக்கக்கூடும்.

"கள்" விகுதி பயன்பாட்டில் மிகுதியாக இல்லாத காலத்திலேயே மக்கள் எனும் சொல் உண்டு. "உயர்திணை என்மனார் மக்கட்சுட்டே" (தொல்), "மக்கள், தேவர், நரகர் உயர்திணை" என்று நன்னூல் பிற்காலத்தில் நவின்றது.

"என்மகன் யாண்டுளன்
ஆயினும் அறியேன்"
புறநானூறு, பாரிமக-
ளிர் (மகள்+இர்) இர்
பலர்பால் விகுதி-
மகள்-மகளிர்
சங்கச் சொல்லே.

மகம்+ நாளில்
= மகநாளில்

இதிலுள்ள மகம் என்பது வேறு. இது மக மீனைக் குறிக்கும் (மக நட்சத்திரம்) மகவு-மக என்பது வேறு. மகவுப்பேறு என்பதனினும் மகப்பேறு எனச்சொல்லுதல் எளிது. அதனால் மகப்பேறு நிலைபெற்றுவிட்டது.

**எது வசந்த காலம்?**

சித்திரை, வைகாசி மாதங்கள் இளவேனிற் பருவம் இதனையே வசந்த காலம் என்பர். இப்போது (இதை எழுதும் நாளில்) ஐப்பசி மாதம் - இதில் ஒருநாள் தொலைக்காட்சிச் செய்தியில், -இது வசந்த காலமாதலால் சரணாலயத்தில் விலங்குகள் அதிகம் கூட்டம் கூட்டமாய்க் காணப்படுகின்றன" என்று படித்தார் ஒருவர். இந்தச் செய்தியை எழுதிய செய்தி ஆசிரியர்க்கோ, படித்தவர்க்கோ வசந்தகாலம் என்பது எது என்று தெரியவில்லை. ஐப்பசி, கார்த்திகை அடைமழைக் காலம் என்பார்கள். இந்தப் பருவத்தில் குளிர் மிகுதியாக இருக்கும். ஆதலின் இலக்கணத்தில் "கூதிர்காலம்" என்ற பெயர் உண்டு.

கூதிர் (குளிர்) காலத்தை வசந்த காலம் (இளவேனில்) என்றது தெரியாமல் செய்த பிழை. அவர்களுக்கு இந்தப் பருவங்களின் பாகுபாடு பற்றித் தெரியவில்லை. ஆயினும் பிழை, பிழைதானே?

பேச்சு வழக்கில் படித்தவர்கள் கூட வியபாரம் என்றும், இராமியாணம் என்றும் பேசக் கேட்டிருக்கிறேன். வியாபாரத்தை (வணிகம்), இராமாயணத்தை இப்படிப் பிழையாகச் சொல்லிச் சொல்லிப் பழக்கப்பட்டுவிட்டார்கள்.

கனவுப் பட்டறை என்று சரியாகச் சொல்லி கனவு பட்டறை என்று எழுத்தில் காட்டுகிறார்கள். மணிச் செய்திகள் என்று சொல்லி மணி செய்திகள் என்று எழுத்தில் காட்டுகிறார்கள். வேறுபாடு புரிவதில்லையா?

# சாம்ராட் மன்னா டே

– எஸ்.பார்த்தசாரதி –

என்ற பாட்டை "மாஷால்" படத்தில் பாடித் தன் திறமையை மக்களுக்கு அடையாளம் காட்டினார்.

அந்தக் காலத்தில் முன்னணியில் இருந்த முப்பெரும் நடிகர்களின் இசைக்குரல்கள்:

திலீப்குமார் - ர.்.பி, தலத் மெஹ்மூத்
ராஜ்கபூர் - முகேஷ்
தேவ் ஆனந்த் - கிஷோர், ர.்.பி, ஹேமந்த் குமார்.



தொடர்ந்து ஷம்மி கபூர், ஜாய் முகர்ஜி, பிஸ்வஜித், சஷி கபூர், ராஜேந்த்ர குமார், தர்மேந்த்ரா, ஜிதேந்த்ரா, சஞ்சீவ்குமார், சஞ்சய், ்.பிரோஸ்கான், முதலான அழகான ஆண்முகங்களை வாயசைக்க வைத்தது முஹம்மத் ர.்.பிதான். (இவர்கள் பலருக்கு மன்னா டே ஒரு பாட்டாவது பாடியிருக்கிறார்)

இந்தக் காலகட்டத்தில் முன்னணி இசையமைப்பாளர்கள் சங்கர்- ஜெய்கிஷன் "பஸந்த் பஹாரி"ல் வரும் சங்கீதப் போட்டியில் "பீம்சேன் ஜோஷியை வெல்லும் குரலாக" மன்னா டேயைத் தேர்ந்தெடுத்தனர். ர.்.பியும் இந்தத் தேர்வை முழுமனதுடன் பின்மொழிந்தார்.

ஈசனின் பாட்டைக்கேட்டு ஹேமநாத பாகவதர் ஊரைவிட்டு ஓடியது நாம் அறிந்த "திருவிளையாடல்". பீம்சேன் ஜோஷியோடு பாடி வெல்பவராக சினிமாவுக்காகக் காட்டுவதைக்கூட மன்னா டேயால் [illegible]றுக்கொள்ள முடியவில்லை. ஊரைவிட்டு ஓட முயற்சித்தவரைத் தடுத்து, பதிவு செய்யப்பட்ட பாடல் "கேடகி குலாப் ஜூஹி" (பஸந்த் பஹார் ராகம்).

இந்திய சினிமா 100 ஆண்டுகளைக் கொண்டாடி முடித்த இந்த சமயத்தில், இந்தியப் படங்களில், மிகச் சிறந்த இரண்டு பாடல்காட்சிகளின் மேன்மையைக் குறிப்பிட்டே ஆகவேண்டும். முகலே ஆஜம் படத்தில் அக்பர் சபையில் தான்சேன் பாடும் பின்னணியில் எடுக்கப்பட்ட அழகான காதல்காட்சி. பாடலை 20,000 ரூபா சன்மானம் பெற்றுப் பாடியவர் படேகுலாம் அலிகான். இசை நௌஷாத். காதலர்கள் சலீம்-அனார்கலி (திலீப்குமார்- மதுபாலா). இந்தப் பாடலைப் படமாக்கும்போது நிஜ வாழ்க்கையில் அவர்களிடையே பேச்சு வார்த்தை கிடையாது. ஆஸி.்.ப் இயக்கத்தில் எடுக்கப்பட்ட இந்தக் காட்சி, இதற்கு முன்போ இனியோ சினிமாவில் நடக்க முடியாத ஒரு [illegible]சயம். பாடல் களம் : மொஹல் கார்டன். பாடல் : "பிரேமு ஜோஹன்" (ராகம் : ஸோனா) பூத்துக் குலுங்கும் தோட்டத்தில் காதல் தகிக்கும்.

மிக மிக அருகில் முதல் இடத்தைத் தவறவிடும் காட்சி "ஆவாரா" ராஜுவின் மனக் குழப்பத்தைத் துல்லியமாக நிழலாட விட்ட "தேரெபினா ஆக் ஹை சாந்த்னி". கருத்துருவாக்கம், படமாக்கிய விதம் இரண்டும் இசை, சினிமாக்கலை இரண்டிலும் உன்னத வடிவம் பெற்றிருக்கும்.

ராஜ்கபூரும் அவரது குழுவினரும் இக்காட்சியின் பிரம்மாண்ட தன்மை கருதி அவரது குரலாக மன்னா டேயைத் தேர்ந்தெடுத்தது மன்னாடேயின் மீது அவர்கள் வைத்திருந்த மதிப்பின் வெளிப்பாடு.

"பூச்சோனோ கைய்ஸே மைய்னே" - படம் "மேரி சூரத் தேரி ஆங்கேன்" ஆஹீர் பைரவ் ராக சோகம். தெய்வ மகனின் இந்தி அசல். இதில் அப்பா மகன் தம்பி வேறு வேறு நடிகர்கள். தெய்வமகன் அசோக்குமார் தன் மனோநிலையை கதாநாயகி ஆஷா பரேக்கிற்கு வெளிப்படுத்தும் பாடல்தான் இது. வார்த்தைகளால் வர்ணிக்க முடியாத ஓர் உன்னதம். மொழி தெரியாதவர்களுக்கும் பாடல் செவிகளில் நுழைந்து நெஞ்சை நெகிழ்வித்து கண்களில் நீர்மல்க வைக்கும். கர்ணனில் "உள்ளத்தில் நல்ல உள்ளம்" இந்தப் பாட்டைத் தழுவியது.

மேற்கத்திய பாணியில் அமைந்த "முடு முடுகே ந தேக் முடு முடுகே" ஸ்ரீ 420 - ஆஷா போன்ஸ்லே - மன்னா டே பாடிய பாடல் திரை இசையில் புதிய பாணி. அதன் சாயலில் அமைந்த தமிழ் பாடல்கள் பல (கண்போன போக்கிலே, இதுவேறுலகம், கொடுத்து பார் உண்மை அன்பை)

மலையாள செம்மீனில் "மானஸ மைனு வரு" சலீல் சௌத்ரி இசையில் மன்னா டே அற்புதம்.

மன்னாடேயின் குரல் பனிப்பாறையாக உறையும், கங்கையாகப் பெருக்கெடுக்கும், நிலவாகிக் குளிர்விக்கும், கருணையாக ஊற்றெடுக்கும், காதலாகக் கொஞ்சும், கம்பீரமாக கர்ஜிக்கும். இவரது குரல்வீச்சை வேறெந்த திரைப்பாடகர்களும் நெருங்கியதில்லை.

# நவம்பர் 19
## தோழர் நாபாவின் பிறந்தநாள்



இந்திய - இலங்கை ஒப்பந்தத்தினடிப்படையில் அமைந்த அதிகாரப்பரவலாக்கல் திட்டத்தை அதனை தீண்டுவார் யாரும் இல்லாத காலத்தில் -1987 இல்- அதுபற்றிய குழப்பங்கள் தடுமாற்றங்கள், அகத்திலும்-புறத்திலும் நிலவிய காலத்தில் அதனை முன்னெடுத்து செயற்படுத்த வேண்டும் என்று சிந்தித்த யதார்த்தமான திட உறுதி கொண்ட புரட்சியாளன்.

சக போராட்ட இயக்கங்கள், முற்போக்கு சத்திகளுடன் சமூகங்களுடன் ஐக்கியம், சர்வதேச சகோதரத்துவம் எமது சமூகத்தில் நிலவும் சாதி, பால், பிரதேச, வர்க்க ரீதியான ஒடுக்குமுறைகள் பற்றிய ஆழமான பிரக்ஞையுடன் பிரச்சினைகளை அணுகிய மனிதநேயன்.

அவருடைய முயற்சிகள், கனவுகள் நனவாகியிருந்தால் அதற்கு சரியான ஒத்துழைப்பு எமது சமுதாயத்தில் கிடைத்திருந்தால் இத்தனை பேரழிவுகளை எமது மக்கள் சந்தித்திருக்கமாட்டார்கள்.

வரலாறு தியாகிகளை தற்காலிகமாக மறந்தாலும் அது தன்னைச் சரிசெய்யும் என்றே கருதுகிறேன்.

இந்திய சுதந்திர இயக்கம் -நவ இந்தியாவைக் கட்டியெழுப்புவதில் ஜவஹர்லால் நேரு போன்ற தலைவர்களின் பங்களிப்பை நிந்தனை செய்ய அல்லது இருட்டடிப்புச் செய்ய சில சத்திகள் இன்றளவில் முயல்கின்றன. அது முயன்றாலும் முடியாது. வரலாற்றை அழித்தல்- திருத்தல் செய்ய முடியாது.

அதே போலத்தான் எம்மளவில் தோழர் நாபா போன்றவர்களின் பங்களிப்பும்.

தற்காலிக பின்னடைவுகள் இருந்தாலும் எதிர்கால வரலாறு அதனைப் பேசும்.

சக சமூகங்களுடன் நட்புறவார்ந்த விரிந்த பார்வை கொண்ட தலைவர்கள் அருகி விட்டார்கள். இன்று பெரும்பாலும் அதிகார அகங்காரம் கொண்டவர்களும், திருடர்களும், மத-இனவாத ஆசாடபூதிகளும் தானே ஆதிக்கம் செலுத்துகிறார்கள. "பேயரசு செய்தால் பிணம் தின்னும் சாத்திரங்கள்" என்பார்கள்.

இந்த ஆசாட பூதிகளின் அரசியல் காலாவதியாகும் காலம் வெகு தூரத்தில் இல்லை. தோழர் நாபாவும் வாழ்வை அர்ப்பணித்த எமது சமூகத்தின் அனைத்து தியாகிகளையும் வரலாறு ஒரு நாள் விடுதலை செய்யும் .

தோழர் நாபாவின் மறைவிற்கு படுகொலை செய்யப்பட்ட முன்னாள் பாரதப்பிரதமர் ராஜிவ் காந்தி விடுத்த இரங்கல் செய்தியில் எனது தயாரும் நாபாவும் ஒரே இலட்சியங்களுக்காகவே போராடினார்கள். ஒரே மாதிரியான மரணத்தை எதிர் கொண்டார்கள் என்று தெரிவித்திருந்தார்.

நாபாவின் பாரம்பரியம் வெவ்வேறு வகையில் அரசியல், சமூக, இலக்கியத் தளங்களில் இலங்கையிலும் புலம்பெயர் தளத்திலும் இன்றளவில் எமது சமூகத்தில் நிலவுகிறது. நாம் நாபா வழியினர் என்ற பெருமித உணர்வு கொண்டவர்கள் இருக்கிறார்கள். அது இயக்க குறுகிய எல்லைகளைக் கடந்தது. அது உலகளாவியது. அதை யாரும் அழித்து விட முடியாது. அது தன்னை நிலை நிறுத்தும்.

– சுகு-ஸ்ரீதரன் –

# தீபாவளித் தொல்லை!

எத்தனையோ அவசரச் சட்டங்கள் போடுகிறார்கள். எத்தனையோ புது வரிகள் விதிக்கிறார்கள். இந்தத் தீபாவளியைத் தடுப்பதற்குச் சட்டமோ, தீபாவளி கொண்டாடுவதற்கு வரியோ போடுவதற்கு ஓர் ஏற்பாடும் செய்யாமலிருப்பதுதான் ஆச்சரியமாய் இருக்கிறது அல்லது தீபாவளியாவது மஹோதயம், அர்த்தோதயம் போல் பல வருடங்களுக்கு ஒருமுறை வரக்கூடாதா? வருஷம் தவறினாலும் இந்தத் தீபாவளி தவறுவதில்லை. புது அரசியல் திட்டத்திலாவது இதைப் பற்றிக் கொஞ்சம் தீவிரமாய்க் கவனிக்க வேண்டும். ரூபாயோடு சேர்த்து இதன் மதிப்பைக் குறைத்தாவது, தீபாவளி முதல் நாள் இரவில் ஆரம்பிப்பதை நிறுத்தி மாலை ஆரம்பித்து உடனே முடித்து விடும்படியாவது செய்ய வேண்டும்.



என்மேல் கோபப்பட்டுப் பயனில்லை. இந்தத் தீபாவளியால் ஏற்படும் தொல்லைகள் எனக்குத் தெரியும். ஏன்.. இந்தத் தீபாவளியில் தொல்லைப்படாதவர்கள் ஒருவருமே இல்லை என்று சொல்லலாம். பெற்றோர்கள் தொல்லை சொல்ல வேண்டியதில்லை. குழந்தைகளுக்குப் பட்டாசு, வாணம் தினுசுகள் வாங்கிக் கொடுப்பதற்குள் அவர்கள் படும்பாடு யுத்த காலத்தில் தளவாடசப்ளை மந்திரியின் வேலையை ஒரு வெறும் விளையாட்டாகச் செய்துவிடும்.

பத்திரிகையாசிரியரின் தொல்லைகளோ சொல்ல வேண்டியதில்லை. ஒரு தீபாவளி கழிந்ததுமே அடுத்த தீபாவளிக்கு மலர் தயாரிப்பதைப் பற்றி யோசிக்க வேண்டும்! நடுவில் எத்தனையோ மற்ற பண்டிகை மலர்கள், தலைவர்கள் ஜயந்தி மலர்கள், நினைவு மலர்களைப் போட வேண்டும். எழுத்தாளர்களைத் தேடிப் பிடித்து பலமுறை வேண்டிக்கொண்டு கட்டுரைகள் சேர்க்க வேண்டும். விளம்பரங்களுக்கும், கட்டுரைகளுக்கும் ஏற்படும் இடப் போட்டியைச் சமாளிக்க வேண்டும். தீபாவளியன்று மலரை வெளியிட்டவுடன் அடுத்த தீபாவளி மலரை இதைவிட அழகானதாக்குவது எப்படி என்று ஆராய வேண்டும்.

இப்படித் தினமே தீபாவளித் தொல்லையினால் கஷ்டப்படும் பத்திரிகையாசிரியர்கள் நமது அனுதாபத்துக்கு மிகவும் உடையவர் என்று பலர் நினைக்கலாம். அதுதான் இல்லை. இந்தத் தீபாவளி மலர்களுக்குக் கட்டுரை எழுதும் பொறுப்பு ஏற்படுகிறதே அந்த எழுத்தாளனைக் கேட்டால் தெரியும் கட்டுரை எழுதுவதைவிடக் கடன் வாங்கி மனைவிக்கு இரண்டு பட்டுப்புடவைகள் வாங்கிக் கொடுத்து விடலாம் என்றுதான் நினைப்பான்!

('இன்னும் சில வியங்கள்' நூலில் எழுத்தாளர் சிட்டி)


# யாழ்.கைதடி விக்னேஸ்வரா வித்தியாலயத்தின் சாதனை மாணவர்கள்





மாகாணமட்டத்தில் நான்கு தங்கப்பதக்கம் வென்ற பாடசாலை மாணவன செல்வன் மு.முரளிதரன்.


Match winners 2013





Vigeneswara maha Vidiyalayam Kaithadi

தேசிய மட்டபோட்டிகளுக்கு பயிற்றுவிக்கும் கராத்தே பயிற்சியாளர் சன்செய எஸ்.விஜியராஜ் பயிற்சி அளித்து வருகின்றார். பாடசாலைப் போட்டிகளில் இவ்வாண்டு மாகாண மட்டத்தில் இரண்டு தங்கம், வெண்கலம், வென்றபடியால் உடற்கல்வி ஆசிரியராக றீகன் அவர்கள் நியமிக்கப்பட்டு சிறப்பாக செயற்படுகிறார். மற்றும் அனைத்து ஆசிரியர்களும் பூரண ஒத்துழைப்பு நல்கி வருகின்றமையாலே இந்த வெற்றியை இலகுவாகப் பெறமுடிந்தது.

## அதிபர்
## திரு.சுந்தரமூர்த்தி சிவானந்தன்



இதுவரை ஆசிரியராக தீவக கல்வி வலயம், யாழ்ப்பாணக்கல்வி வலயம் தற்போது தென்மராட்சி கல்வி வலயத்தில் யாழ். நாவற்குழி மகாவித்தியாலயத்தில் ஆசிரியராக கடமையாற்றி இவ்வாண்டு 18.01.2013 அன்று அதிபர் போட்டிப் பரீட்சையின் மூலம் பதவி உயர்வு பெற்று முதலாவது பாடசாலையை பொறுப்பேற்று இப் பாடசாலையை நடத்தி வருகின்றமை குறிப்பிடத்தக்கது. இவர் ஆசிரியராக இருந்தபோது விளையாட்டு பயிற்சியாளராகவும், பொறுப்பாசிரியராகவும் கடமையாற்றினார்.



செல்வன் மு.மனாசே
கராத்தே (குமித்தி)
- வெள்ளிப்பதக்கம் (மாகாணம்)



செல்வன் மு.முரளிதரன்
நீளம் பாய்தல்
- தங்கப்பதக்கம் (மாகாணம்)
தத்திமிதித்து பாய்தல்
- தங்கப்பதக்கம் (மாகாணம்)
கராத்தே (குமித்தி)
- தங்கப்பதக்கம் (மாகாணம்)
அமைசோர் இளையோர் போட்டி
-யாழ். மாவட்டம் தங்கப்பதக்கம



செல்வன் பா.ரஜீதரன்
கராத்தே (குமித்தி)
- வெள்ளிப்பதக்கம் (மாகாணம்)



செல்வன் க.தருசாந்
- தங்கப்பதக்கம் (மாகாணம்)



ர.ஹரி
கராத்தே (குமித்தி)
- வெண்கலப்பதக்கம் (மாகாணம்)



செல்வி கி.இனுசியா
கராத்தே (குமித்தி)
- தங்கப்பதக்கம் (மாகாணம்)



செல்வி சி.சியானி
கராத்தே (குமித்தி)
- தங்கப்பதக்கம் (மாகாணம்)



செல்வன் ர.கரன்
கராத்தே (குமித்தி)
- தங்கப்பதக்கம் (மாகாணம்)



ச.ரதுசன்
கராத்தே (குமித்தி)
- வெண்கலப்பதக்கம் (மாகாணம்)



அ.கிஷான்
கராத்தே (குமித்தி)
- வெண்கலப்பதக்கம் (மாகாணம்)



செவ்வி ம. மதுரிக்கா
கராத்தே (குமித்தி)
- வெள்ளிப்பதக்கம் (மாகாணம்)
-வெண்கலப்பதக்கம் (மாகாணம்)

இவ்விளையாட்டு சாதனைக்கு பயிற்றுவிப்பாளராக யாழ். இந்துக்கல்லூரி உடற்பயிற்சி ஆசிரியர் எஸ். திருமாறனும், தென்மராட்சி கல்விவலய உடற்கல்வி ஆசிரிய ஆலோசகர் எஸ். ஸ்ரீகாந்தனும் பலவகையில் பக்கபலமாகநின்று தொழிற்பட்டார்கள் இவர்களைத்தவிர தென்மராட்சி உடற்கல்வி உதவிக்கல்விப்பணிப்பாளர் எஸ். சிவகுமார் மற்றும் கல்விப்பணிப்பாளர் மற்றும் யாழ். கல்வி வலய உடற்கல்வி உதவிக்கல்விப்பணிப்பாளர்கள் சண்தயாளன், போன்றோர் மற்றும் பழைய மாணவர்கள் தொடர் ஊக்கம் வழங்கினர் என்பதும் குறிப்பிடத்தக்கது.

(தொகுப்பு:- அஜியந்தன் - 51)

## இரத்ததானம்




இலங்கை செஞ்சிலுவைச் சங்கம் யாழ். கிளைக்குட்பட்ட நெடுந்தீவுப்பிரிவினால் கடந்த 19ஆம் திகதி யாழ். போதனாவைத்தியசாலை இரத்த வங்கியில் நெடுந்தீவுப் பிரிவு தொண்டர்கள் இரத்த தானம் வழங்கினர். இதில் இலங்கை செஞ்சிவைச்சங்க யாழ். கிளைத் தலைவர் கு.பாலகிருஸ்ணன், யாழ். கிளைப் பொருளாளரும், மற்றும் நெடுந்தீவுப் பிரிவின் செயலாளருமாகிய எ.அருந்தவசீலன் ஆகியோர் கலந்து கொண்டனர். (பா)

# கொடிகாமம் ஊரெல்லை வீதியை செப்பனிடுமாறு கோரிக்கை

(கொடிகாமம்)

சாவகச்சேரி பிரதேச சபைக்குட்பட்ட குடமியன், கொடிகாமம் வடக்கு ஊரெல்லை வீதியினை திருத்தித்தருமாறு பிரதேச மக்கள் கோரிக்கை விடுத்துள்ளனர். குடமியன், கொடிகாமம் வடக்கு பகுதியைச் சேர்ந்த 100 இற்கு மேற்பட்ட குடும்பங்கள் இந்த வீதியினைப் பயன்படுத்துவதாகவும் தெரிவிக்கின்றனர்.

சம்பந்தப்பட்ட அதிகாரிகளிடம் பலமுறை எடுத்துக்கூறியபோதிலும் இதுவரையில் நடவடிக்கை எடுக்கவில்லையெனவும் கடும் விசனம் தெரிவிக்கின்றனர்.

மேலும் இந்தப் பகுதியில் உற்பத்தி செய்யப்படும் விவசாய உற்பத்திப் பொருட்களை கொடிகாமம் சந்தைக்கு கொண்டு செல்ல இந்த வீதியே மிகவும் முக்கியமான பாதையாக விளங்குகின்றது.

எனவே சம்பந்தப்பட்ட அதிகாரிகள் உடன் கவனமெடுத்து குடமியன் கொடிகாமம் ஊரெல்லை வீதியினைத் திருத்த நடவடிக்கை எடுக்க வேண்டுமென சம்பந்தப்பட்ட பகுதி மக்கள் கோரிக்கை விடுத்துள்ளனர். (130)

# முதியோர் செயலக அலுவலர்கள் முதியோர்களை பார்வையிட்டனர்

(திருநெல்வேலி)

தேசிய முதியோர் செயலக உத்தியோகத்தர்களினால் யாழ். மாவட்டத்தில் உள்ள சில முதியோர் இல்லங்கள் பார்வையிடப்பட்டன.

கைதடி நவீல்ட் பாடசாலை, தொழிற்பூங்கா, இணுவில் மகிழ்ச்சி முதியோர் இல்லம், தொல்புரம் சிவபூமி முதியோர் இல்லம் போன்ற இடங்களை இவர்கள் பார்வையிட்டனர். மாற்றுத் திறனாளிகளுக்கு உதவும் பொருட்டும் இவர்களது விஜயம் அமைந்திருந்தது.

முதியோர்களுடன் கலந்துரையாடி அவர்களுடைய அடிப்படைத் தேவைகளைக் கண்டறிந்து அவர்களுக்கான வசதிகளைச் செய்யும் பொருட்டு அறிக்கை தயாரித்து வடமாகாண சமூக சேவைகள திணைக்களத்தினூடாக தேசிய முதியோர் செயலகத்துக்கு அனுப்பி வைக்குமாறு கேட்டுக்கொள்ளப்பட்டுள்ளது.

இதற்காக ஒதுக்கப்பட்ட நிதி இவவாண்டிலேயே செலவு செய்யப்பட்டு வேலைகளும் நிறைவேற்றப்படவுள்ளதாக தெரிவிக்கப்பட்டுள்ளது.(137)

வெள்ளி நற்சிந்தனை...



# வழிகாட்டும் திருமந்திரம்

இந்து சாஸ்திரங்கள் அனைத்தும் சரீரத்தின் நிலையாமையை வலியுறுத்திச் சொல்லாமல் இருப்பதில்லை. நம்முடைய உடல் அழியக்கூடியது. அதில் குடிபுகுந்திருக்கும் ஆத்மா மட்டும் தான் அழிவில்லாதது.

ஒருவன் மிக உயர்ந்த பதவியை வகிக்கின்றவனாக இருக்கலாம் அல்லது மிகப்பெரிய சொத்துக்கு சொந்தக்காரனாக இருக்கலாம். அவன் எவ்வளவு உயர்ந்தவனாக இருந்தாலும், எவ்வளவு செல்வாக்குப் பெற்றவனாக இருந்தாலும், ஒருநாள் இறந்து போக வேண்டியவனே!

இதைத் திரும்பத் திரும்பச் சொல்லுவதால் பெரிய பலன் ஒன்றும் விளைந்து விடாது. இதை அப்படியே ஒருவன் அர்த்தம் செய்து கொண்டு விடுவானே ஆனால், என்றைக்கோ ஒருநாள் இறக்கத்தானே போகிறோம் இருக்கின்ற வரையில் அனுபவித்துப் பார்த்து விடுவோமே என்று தவறான காரியங்களில் ஈடுபட்டு விடக்கூடும். இது மிகப் பெரிய சமூகக் கேட்டில் போய் முடிந்து விடும்.

ஆகவே திருமூலர் வாழ்க்கையைப் பற்றிச் சொல்லுகின்ற போது எதிர்மறை எண்ணங்களால் வாழ்க்கையை அமைத்துக் கொண்டு விடக்கூடாது என்று எச்சரிக்கை செய்கின்றார். நாம் இந்த உடலை எடுத்திருப்பது முத்தி அடைவதற்கு ஒரு நல்ல வாய்ப்பு. ஆகவே இந்த உடலை ஆரோக்கியமாக வைத்திருப்பதன் மூலம் அவ்வாய்ப்பை முழுமையாகப் பயன்படுத்திக் கொள்ள வேண்டுமே தவிர, தகாத காரியங்களுக்கு உடலைக் கருவியாக்கி அதைப் பாழ்படுத்தி விடக்கூடாது.

வாழ்க்கை நிலையில்லாதது. மரணம் எந்தச் சமயத்திலும் நேரலாம் என்பதால், விரைந்து ஆன்மீகப் பக்குவம் பெற்று தெய்வீகப் பேரானந்தத்தை அனுபவிக்க நம்மைத் தயார்ப்படுத்திக் கொள்ள வேண்டும். ஆகவே வாழ்க்கையை இறைவழிபாட்டுக்கான வாய்ப்பாகக் கருதி ஒரு நிமிடத்தைக் கூட வீணாக்காமல், அவனுடைய பணியில் ஈடுபடவேண்டும்.

திருமூலரின் திருமந்திரம் வெறும் யோக சாஸ்திரம் அல்ல. வாழ்க்கைக்கு வழிகாட்டிடும் அரிய பெரிய பேருண்மைகள் அதில் நிறைய அடங்கி இருக்கின்றன.

புராணக் கதைகளைச் சொல்லும் போது வெறும் கதைகளைச் சொல்லிப் பயன் இல்லை. கதைகளுக்குப் பின்னே உள்ள ஆன்மீக உண்மையை விளங்கிச் சொல்ல வேண்டும். உதாரணமாக, சிவபெருமான் முப்புரத்தை எரித்தார் என்று சொல்லுகின்ற போது, கடவுளின் அருள நம்முடைய ஆன்மாவைப் பற்றிக் கொண்டுள்ள முப்பெரும் தீமைகளை அழித்துவிடும் ஆற்றல் படைத்தது என்று தான் பொருள் கொள்ள வேண்டும்.

திருமந்திரம் வழிகாட்ட வாழ்க்கையைப் பயனுடையதாக ஆக்கிக் கொள்வோம்.

**சொல்லின் செல்வர்**
**இரா.செல்வவடிவேல்**

# பதிவிருக்கப் பெட்டகம்

மனித வரலாற்றில் கவிதை/பாடல் வடிவம் என்பது பல ஆயிரம் ஆண்டுகளுக்கு முன்பிருந்தே இருந்து வருகிறது என்றாலும் 1000 ஆண்டுகளுக்கு முன்புதான் உலகின் முதல் நாவல் எழுதப்பட்டது. எழுதியவர் Murasaki Shikibu என்ற ஜப்பானியப் பெண். அந்த நாவலின் பெயர் The Tale of Genji. அதிலிருந்து தான் 'நாவல்' என்ற ஒரு புதிய genre இலக்கியத்தில் வழக்கத்துக்கு வந்தது. [அதற்குப் பிறகு 600 ஆண்டுகள் கழித்து செர்வாந்தெஸ் எழுதிய தோன் கெஹோத்தே –வும் (Don Quixote) இன்று உலகப் பிரசித்தி பெற்ற நாவலாகத் திகழ்கிறது.]

பெருங்கதையாடல் (grand narratives) என்பது பன்முகத் தன்மையை மறுத்து எல்லா வித்தியாசங்களையும் உள்ளடக்கிய ஒரு முழு முற்றான உண்மையை (Absolute Truth) – எல்லோருக்கும் பொதுவான பிரபஞ்ச உண்மையை–முன் வைக்கிறது. ஆனால் எதார்த்த உலகில் அப்படி எதுவும் இல்லை. உலக வாழ்க்கை குழப்பத்தில் (chaos) இருக்கிறது; ஒழுங்கற்று இருக்கிறது. ஒவ்வொரு தனி மனிதனும் ஒவ்வொரு அனுபவத்தைக் கொண்டவனாக இருக்கிறான். அவர்களின் மொழி, கலாசாரம், உணவு, கடவுள், காமம் எல்லாமே வேறு வேறாக இருக்கிறது. இந்த வித்தியாசத்தைப் புரிந்து கொள்ளாமலும், அங்கீகரிக்காமலும் போவதால்தான் மனிதர்கள் ஒருவரை ஒருவர் வெறுக்கிறார்கள் கொலை செய்து கொள்கிறார்கள். மனித சிந்தனையின் வரலாற்றில் பின்நவீனத்துவம்தான் இதை மிகச் சரியாக சுட்டிக் காட்டி விளக்கியது. [பார்க்கவும்: Jean-Francois Lyotard எழுதிய The Postmodern Condition: A Report on Knowledge.] இந்த அர்த்தத்தில்தான் பின்நவீனத்துவம் என்பது ஒரு இலக்கிய வகை [genre] அல்ல; மனிதர்களுக்குள் நிலவும் அதிகார அமைப்பை விளக்கும் ஒரு சிந்தனை முறை என்று சொல்லப்படுகிறது. இதை உள்வாங்கிக் கொண்டு புனைகதைகளை எழுதியவர்களே நவீனத்துவ காலகட்டத்தைத் தாண்டியவர்களாகக் கருதப்படுகிறார்கள்.

ஆனால் இங்கே ஒரு பிரச்சினை இருக்கிறது. எண்பதுகளில் தமிழில் சிலர் பின்நவீனத்துவக் கோட்பாடுகளை மட்டும் படித்து விட்டு புனைகதைகளை எழுத முயன்ற போது அது வெறும் விபத்தாகவே முடிந்தது. பின்நவீனத்துவம் குறித்து எதுவுமே தெரியாத பத்தாம்பசலி எழுத்தாளர்களே எள்ளி நகையாடும் அளவுக்கு அந்தப் 'பின்நவீனத்துவப்' படிப்பாளிகளின் எழுத்து தோற்றுப் போனது.

இந்தா பிடி, கதை என்று கொடுப்பதல்ல பின்நவீனத்துவப் பிரதிகள். "நான் கொடுக்கிறேன் நீ பெற்றுக் கொள்" என்பதான அதிகார மையம் கொண்ட பிரதிகளுக்கு மாறாக, வாசகரின் சிருஷ்டிகரத்தன்மைக்கு இடம் கொடுத்து, பிரதியின் வாசல்களைத் திறந்து வைத்து எப்போதும் புதுப் புதுக கதைகளை உருவாக்கிக் கொண்டே இருக்கும் ஒரு மாஜிக் வெளியாகத் திகழ்பவை பின்நவீனத்துவப் பிரதிகள். இதைத் தான் லியோதார் petits récits [குட்டிக் கதைகள்] என்று சொல்கிறார். பின்நவீனத்துவப் பிரதியில் வாசகனும் அந்த வாசிப்பினூடேயே ஒரு எழுத்தாளனாக மாறுகிறான்.

பின்நவீனத்துவப் பிரதியின் இன்னொரு அம்சம், வாசிப்பின் இன்பம். Roland Barthes கூறிய Pleasure of the Text. சமகாலத் தமிழ் இலக்கியம் வாசகர்களிடம் சரியாகப் போய்ச் சேராததற்கான பல காரணங்களில் ஒன்று, அந்த எழுத்தை வாசிப்பது மிகவும் இம்சையாக இருக்கிறது என்பதாகும். வேண்டுமென்றே வரவழைக்கப்பட்ட திருகல் மொழியில் எழுதினால் அது இலக்கியம்; புரிகிறாற்போல் எழுதினால் இலக்கியம் அல்ல என்பதாக ஒரு கருத்து இலக்கியச் சூழலில் பல ஆண்டுகளாக நிலவி வருகிறது.

இப்போது நாம் பின்நவீனத்துவத்தையும் தாண்டிய காலகட்டத்தில் வாழ்கிறோம். கணினியின் பயன்பாடு உச்சத்தில் இருக்கும் காலம் இது. மொழியில் சொல்லவொண்ணாத மாற்றங்களை நிகழ்த்தியிருக்கும் ஃபேஸ்புக், டுவிட்டர் போன்றவை புனைகதை என்ற வடிவத்தை எப்படிப்பாதிக்கும்? இதைக் கோட்பாட்டு ரீதியாக Digimodernism என்று வகைப்படுத்துகிறார் Alan Kirby. Digimodernism என்றால் என்ன? கிர்பியின் வார்த்தைகளில் சொன்னால் புதிய தொழில்நுட்பங்களினால் ஏற்படும் கலாசார பாதிப்பு. கலை இலக்கியத்தில் கணனியின் பாதிப்பு. பின்நவீனத்துக்கும் பிறகான cultural paradigm.

– சாரு நிவேதிதா

# மக்கள் நலனை கவனிக்காத கிளி.கரைச்சி பிரதேச சபை



கரைச்சி பிரதேச சபைக்கு பாரியளவில் நிதிவருமானங்கள் கிடைத்து வரும் நிலையில் இப்பிரதேசசபை மக்கள் நலன் சார்ந்த பணிகளை முன்னெடுப்பதில்லையென ஈ.பி.டி.பி நாடாளுமன்ற உறுப்பினரும், நாடாளுமன்றக் குழுக்களின் பிரதித் தலைவருமான முருகேசு சந்திரகுமார் தெரிவித்துள்ளார்.

நேற்றுமுன்தினம் கிளிநொச்சி கூட்டுறவாளர் மண்டபத்தில் பாரம்பரிய கைத்தொழில்கள் மற்றும் சிறு தொழில் முயற்சி அபிவிருத்தி அமைச்சர் டக்ளஸ் தேவானந்தா தலைமையில் நடைபெற்ற கிளிநொச்சி மாவட்ட அபிவிருத்திக் குழுக் கூட்டத்தில் கலந்து கொண்டு உரையாற்றும் போதே அவர் இவ்வாறு தெரிவித்துள்ளார்.

அவர் மேலும் தெரிவிக்கையில்,

கிளிநொச்சியில் கரைச்சி பிரதேச சபைக்கே அதிக நிதிவருமானங்கள் கிடைக்கின்றன கட்டடங்கள் வரி, வருமானவரி, விற்பனை வரி, நில வாடகை, உரிமக்கட்டணம், இறைச்சிக்கடைகளின் ஏலத்தில்கிடைக்கும் வருமானம், இதனைத் தவிர நீதிமன்றம் மூலம் கிடைக்கும் நிதி வருமானம் என அதிக வருமானங்கள் கிடைக்கப் பெறுகிறது, கடந்தாண்டு நிதி அறிக்கையின்படி நான்கு கோடியே 85 இலட்சத்து 20 ஆயிரத்து 669 ரூபா நிலையான வைப்பில் உள்ளது. அத்தோடு கடந்தாண்டு நீதிமன்றம் மூலம் 48 இலட்சத்து 14ஆயிரத்து 733 ரூபா வருமானம் கிடைத்துள்ளது எனவே இந்த நிலையில் கிளிநொச்சி நகரை இருளில் வைத்திருப்பது நியாயமற்றது.

வீதி விளக்குகளை பராமரிப்பதாக இலங்கை மின்சார சபையுடன் கரைச்சி பிரதேச சபைத் தலைவரும், செயலாளரும் கையொப்பம் இட்டு ஒப்பந்தம் செய்து கொண்டுள்ள நிலையில் அப்படியேதும் தமக்குத் தெரியாது என அப்பிரதேச சபை பொதுமக்கள் மத்தியில். பொய் கூறி மக்களை இருட்டில் வைத்து ஏமாற்றி வருகின்றது.

மேற்படி பிரதேச சபையின் கீழ் பொருளாதார அபிவிருத்தி அமைச்சினால் கட்டிமுடிக்கப்பட்ட இரண்டு சந்தைகள் இதுவரை செயற்படுத்தப்படாமல் கட்டாக் காலிகள் தங்குமிடமாக இருக்கின்றது.

இவற்றை ஒழுங்கான முறையில் பயன்படுத்தினால் மேலும் வருமானம் பெற இயலும் மக்கள் நலன் சார்ந்த திட்டங்களை முன்னெடுக்க இவர்கள் தயாராக இல்லாததன் காரணமாகவே இப்படி நடந்து கொள்வதாக அவர் மேலும் தெரிவித்துள்ளார்.

இக்கூட்டத்தில் வடக்கு மாகாண பிரதம செயலாளர் விஜயலட்சுமி, கிளிநொச்சி அரச அதிபர் திருமதி ரூபவதிகேதீஸ்வரன் உள்ளிட்ட வடக்கு மாகாணத்தின் அனைத்து அமைச்சின் செயலாளர்கள் பிரதேச செய்லாளர்கள் பிரதேசசபை செயலாளர்கள் உள்ளிட்ட உயரதிகாரிகள் கலந்து கொண்டனர்.

## மதுபோதையில் சென்ற சாரதி கைது

கிளிநொச்சி நகர் பகுதியில் மதுபோதையில் வரி அனுமதி, காப்புறுதி, சாரதி அனுமதிப்பத்திரம் எதுவுமின்றி வாகனத்தைச் செலுத்திச் சென்ற சாரதியை கிளிநொச்சி பொலிஸார் கைது செய்துள்ளனர்.

நேற்று முன்தினம் புதன்கிழமை குறித்த சாரதியை பொலிஸார் கைதுசெய்து நேற்று கிளிநொச்சி மாவட்ட நீதிமன்றில் ஆஜர்ப்படுத்தினர். வழக்கை விசாரணை செய்த நீதிபதி குறித்த சாரதியை எதிர்வரும் 23ஆம் திகதிவரை விளக்கமறியலில் வைக்குமாறு உத்தரவிட்டார். (கே)

## வயல் நிலங்களில் அத்துமீறி கட்டடங்கள்

(யாழ்ப்பாணம்)

குடா நாட்டில் வயல் நிலங்களில் அத்து மீறி கட்டடங்கள் அமைக்கப்பட்டு வருவதாக சுட்டிக்காட்டப்பட்டுள்ளது.

கடந்த செவ்வாய்க்கிழமை யாழ்.செயலகத்தில் இடம்பெற்ற மாவட்ட அபிவிருத்திக் குழுக் கூட்டத்திலேயே இவ்வாறு தெரிவிக்கப்பட்டது. அரியாலைப் பகுதியில் தொண்டு நிறுவனம் ஒன்றின் கட்டடமும், நாவற்குழி பகுதியில் கைத்தொழில் நிறுவனம் ஒன்றின் கட்டடமும் அத்துமீறி வயல் நிலங்களில் கட்டப்பட்டு வருவதாக சுட்டிக் காட்டப்பட்டது.

இதனடிப்படையில் இவ்வாறான செயற்பாடுகளுக்கு விவசாயத் திணைக்களத்தின் அனுமதி பெறப்பட்டிருக்கவில்லை என இங்கு அதிகாரிகளினால் சுட்டிக்காட்டப்பட்ட நிலையில் இவற்றிற்கு எதிராக சட்ட நடவடிக்கை எடுக்கப்பட வேண்டும் என தெரிவிக்கப்பட்டது.

பொய்யான ஆவணங்கள் தயாரிக்கப்பட்டே இவ்வாறான அத்துமீறிய சம்பவங்கள் இடம்பெற்று வருவதாக விவசாய திணைக்கள அதிகாரிகளால் தெரிவிக்கப்பட்டது. (இ,பா)

## மாற்று ஆற்றலுடையோர் தின வலிகாம வலய போட்டி முடிவுகள்

மாற்று ஆற்றலுடையோர் தினத்தை முன்னிட்டு வலிகாம வலய மட்டப் பாடசாலைகளுக்கிடையே நடைபெற்ற போட்டிகளின் முடிவுகள் வெளியிடப்பட்டுள்ளன. போட்டிகளில் முதல் மூன்று இடங்களைப் பெற்றவர்களின் பெயர், விபரம் வருமாறு,

தனி நடனம், பிரிவு - 1,

அ.அன்பரசி, (யா/மாதகல் சென். தோமஸ்), செ.சானுஜா, (யா/ஆனை. றோ.க.த.க.பாடசாலை), பி.கனிஸ்ரா, (யா/இணுவில் மத்திய கல்லூரி).

பிரிவு - 2,

தி.வாசுகி, (யா/விக்டோறியாக் கல்லூரி), சி.நிருஜா, (யா/ஏழாலை ஸ்ரீ முருகன் வித்தியாலயம்), ப.தனுஷ்டிகா, (யா/இணுவில் இந்துக் கல்லூரி).

பிரிவு - 3,

வி.சுசந்திகா, (யா/மகாஜனக் கல்லூரி), பா.கவிர்ஜனா, (யா/ஏழாலை ஸ்ரீ முருகன் வித்தியாலயம்), கை.பவதாரணி, (யா/வட்டு இந்துக் கல்லூரி),

பிரிவு - 4,

கோ.ஷாயினி, (யா/வட்டு இந்துக் கல்லூரி), இ.தசானி, (யா/இணுவில் மத்திய கல்லூரி), பா.நிறோஜினி, (யா/பண்டத்தரிப்பு இந்துக் கல்லூரி),

குழுப் போட்டியில் வெற்றியீட்டிய பாடசாலைகளின், விபரம்

குழுஇசை பிரிவு - 1,

யா/அளவெட்டி தெற்கு அ.மி.த.க., யா/ஏழாலை ஸ்ரீ முருகன் வித்தியாலயம், யா/பெரிய விளான் றோ.க.த.க.பாடசாலை.

பிரிவு - 2,

யா/விக்டோறியாக் கல்லூரி, யா/ஸ்கந்தவரோதயா கல்லூரி இவ்விரு பாடசாலைகளும் முதலாம் இடத்தைப் பெற்றுள்ளன. யா/இராமநாதன் கல்லூரி, யா/சில்லாலை றோ.க.த.க.பாடசாலை.

பிரிவு - 3,

யா/வட்டு இந்துக் கல்லூரி, யா/இணுவில் மத்திய கல்லூரி, யா/சுதுமலை சிம்மிய பாரதி.

பிரிவு - 4,

யா/விக்டோறியாக் கல்லூரி, யா/இராமநாதன் கல்லூரி, யா/இணுவில் இந்துக் கல்லூரி.

குழுநடனம் பிரிவு - 1,

யா/இராமநாதன் கல்லூரி, யா/அளவெட்டி தெற்கு அ.மி.த.க., யா/தொல்புரம் விக்னேஸ்வரா,

பிரிவு - 2,

யா/விக்டோறியாக் கல்லூரி, யா/ஏழாலை ஸ்ரீ முருகன் வித்தியாலயம், யா/இராமநாதன் கல்லூரி.

பிரிவு - 3,

யா/அராலி சரஸ்வதி மகா வித்தியாலயம், யா/ஆனை றோ.க.த.க.பாடசாலை, யா/அளவெட்டி அருணாசலம் வித்தி[illegible]யம்.

பிரிவு - 4,

யா/இணுவில் மத்திய கல்லூரி, யா/வட்டு இந்துக் கல்லூரி.

நாடகம்,

யா/இணுவில் மத்திய கல்லூரி, யா/வட்டு இந்துக் கல்லூரி, யா/சண்டிலிப்பாய் வடக்கு த.க. பாடசாலை.

வில்லிசை,

யா/அராலி சரஸ்வதி மகா வித்தியாலயம், யா/குட்டியபுலம் அ.மி.த.க.பாடசாலை.

நகைச்சுவை,

யா/அளவெட்டி தெற்கு அ.மி த.க., யா/வட்டு இந்துக் கல்லூரி.

(முற்றும்)

## அடிப்படைவசதிகளற்ற நிலையில் புதுக்குடியிருப்பு பொதுச்சந்தை

யுத்தம் முடிவடைந்து புதுக்குடியிருப்பு மக்கள் தற்போது மீள்குடியேறியுள்ள நிலையில் அப்பகுதியில் பொதுச் சந்தைக் கட்டடம் இல்லாமல் சந்தையானது மரநிழலின் கீழ் இயங்குவதாக வடமாகாணசபை உறுப்பினர் வைத்திய கலாநிதி சி.சிவமோகன் குற்றம்சாட்டியுள்ளார்.

இது தொடர்பில் அவர் தெரிவித்ததாவது,

இன்று யுத்தம் முடிவடைந்து நான்கு ஆண்டுகள் கடந்த நிலையிலும் புதுக்குடியிருப்பு பிரதேச பொதுச்சந்தைக் கட்டடமானது அமைத்துக் கொடுக்கப்படவில்லை. இதனால் மரநிழலின் கீழே பொதுச் சந்தை இயங்கி வருகின்றது.

மழை காலம் ஆரம்பமாகியுள்ளமையால் சதுப்பு நிலத்தில் மரநிழலின் கீழ் இருந்து வியாபாரிகளும் மக்களும் சந்தையில் பெரும் சிரமங்களை எதிர் கொண்டு வருவதுடன் தமது பொருட்களை பாதுகாக்க முடியாது சிரமப்பட்டு வருகின்றனர்.

யுத்தம் இடம்பெற்றுக் கொண்டிருந்த காலகட்டத்தில் 1996 ஆம் ஆண்டு விமானத் தாக்குதல் காரணமாக முழுமையாக அழிவடைந்த இப் பொதுச் சந்தைக்கட்டடமானது இன்று வரை அமைக்கப்படவில்லை.

முல்லைத்தீவு மாவட்டத்திற்குரிய பிரதேச சபைகளுக்கு கிடைக்கும் வருமானத்தில் இப் பொது சந்தையூடாகவே அதிக வருமானம் கிடைக்கின்றது.

இதனால் தமது வாழ்வாதாரத்தையும் கவனத்தில் கொண்டு புதுக்குடியிருப்பு பொதுச்சந்தைக்கு நிரந்தர கட்டடம் ஒன்றினை அமைத்துத் தருமாறு அப்பகுதி மக்கள் கோரிக்கை விடுத்துள்ளனர்.

மக்களின் தேவையையும் அவர்கள் எதிர் நோக்கும் பிரச்சினையையும் கருத்தில் கொண்டும், வடமாகாணசபை 2014ஆம் ஆண்டுக்கான தனது வரவு செலவுத் திட்டத்திலும் இது தொடர்பாக கவனம் செலுத்த வேண்டும் எனவும், இது தொடர்பில் மாகாண சபையில் தெரியப்படுத்தவுள்ளது என அவர் மேலும் தெரிவித்தார்.

## யாழில் பீப்பிள்ஸ் லீசிங் கிளை திறப்பு



(யாழ்ப்பாணம்)

யாழ். மாவட்டத்தில் பீப்பிள்ஸ் லீசிங் நிறுவனத்தின் மூன்றாவது கிளை நேற்றுமுன்தினம் யாழ்.ஸ்ரான்லி வீதியில் திறந்துவைக்கப்பட்டது. 512ஆவது படைப் பிரிவின் பிரிகேடியர் அஜித் பல்லேவல மற்றும் பீப்பிள்ஸ் லீசிங் நிறுவனத்தின் பிரதம நிறைவேற்று அதிகாரி டி.பி.குமாரகே ஆகியோர் இணைந்து இந்தக் கிளையினைத் திறந்துவைத்தனர்.

## கரைச்சி பிரதேச செயலக சமூக பராமரிப்பு நிலையம் திருத்தம்

கரைச்சி பிரதேச செயலக வளாகத்தில் அமைக்கப்பட்ட சமூக பராமரிப்பு நிலையமானது 2 இலட்சம் ரூபா செலவில் திருத்த வேலைகள் செய்யப்பட்டுள்ளன.

வடமாகாண சமூக சேவைகள் திணைக்களம் இதற்கான நிதியை யுனிசெவ் நிறுவனத்திடமிருந்து பெற்று கரைச்சி பிரதேச செயலகத்திற்கு வழங்கியது.

சமூக பராமரிப்பு நிலையத்தின் மூலமாக வறுமைக் கோட்டிற்குட்பட்ட மக்களுக்கு சிறந்த சேவைகள் வழங்கப்பட்டு வருகின்றன.

சமூக சேவைகள் அதிகாரி, சிறுவர் உரிமைகள் மேம்பாட்டு உதவியாளர், உளவள உதவியாளர், முதியோர் உரிமைகள் மேம்பாட்டு உதவியாளர், சமூக அபிவிருத்தி உதவியாளர் போன்றோர் பிரதேச செயலகங்களில் சமூக பராமரிப்பு நிலையங்களில் கடமையாற்றி வருகின்றனர்.

நாட்டின் ஏனைய மாகாணங்களில் சமூக பராமரிப்பு நிலையங்கள் பிரதேச செய்லக வளாகத்தில் அமையாமல் வேறு இடத்தில் அமைக்கப்பட்டுள்ளது.

அதேவேளை வடமாகாணத்தில் சமூக பராமரிப்பு நிலையங்கள் பிரதேச செயலக வளாகத்தில் அமைக்கப்பட்டுள்ளமை குறிப்பிடத்தக்கது.

பிரதேச செயலக வளாகத்தில் சமூக பராமரிப்பு நிலையம் அமைக்கப்படும் போது பொது மககள் விரைவாக சேவைகளை ஒரே இடத்தில் பெறக்கூடியதாக உள்ளமை சிறந்ததென சமூக ஆர்வலர்கள் தெரிவிக்கின்றனர்.(90)

கணிதம்

க.பொ.த.(சாதாரணதர)

மாதிரிப் பரீட்சை வினாத்தாள்

# கல்வி முரசு

Grade - 09

ஆசிரியர்:
S.P.சசீகரன்

## பகுதிI

எல்லாவினாக்களுக்கும் விடைஎழுதுக.


1. ஒருபேனையின் விலைரூ 11.50 ஆயின் 7 பேனைகளின் விலையாது?

2. தீர்க்க $\frac{a}{2} = 5$


3. 0.00156 ஐ விஞ்ஞானமுறைக் குறிப்பீட்டில்தருக.

4. சுருக்குக $2\frac{2}{3} - \frac{3}{4}$ இன் $\frac{6}{23}$

5. 7 cm ஆரையுடையவட்டமொன்றின் மிகப்பெரியநாணின் நீளம் யாது?




6) தரப்பட்டுள்ளஉருவில் ABC ஒருநேர்கோடுஆகும். X° இன் பருமன் யாது?




7. தரப்பட்டுள்ளஉருவில் PQ=15cm, QR =17cm எனின்

i. PR இன் நீளத்தைக் காண்பதற்கானபைதகரசின் தொடர்பினைப்பெறுக?

ii.

அதனைத் தீர்த்து PR இன் நீளத்தைக் காண்க?

8. ஒழுங்கானபல்கோணிஒன்றின் அகக்கோணம் ஒன்றுக்கும் புறக்கோணம் ஒன்றுக்கும் இடையிலானவிகிதம் 3:1 ஆகும்.

i. புறக்கோணம் ஒன்றின் பருமன் யாது?

ii. பல்கோணியின் பக்கங்களின் எண்ணிக்கையாது?

9. கனவுருவடிவான நீர்த்தாங்கிஒன்றின்நீளம்,அகலம்,உயரம் முறையே 250cm, 200cm, 100cm ஆகும்.

i. இத் தாங்கியில் கொள்ளக்கூடியநீரின் கனவளவை$m^3$ இல் தருக.


ii. இத் தாங்கியில் கொள்ளக்கூடியநீரின் அளவைலீற்றரில் தருக?

10. வீமன் வங்கிஒன்றில் இருந்து10%எளியவட்டிக்குரூ 12000 ஐக் கடனாகப் பெற்றார்.

i. இரண்டுஆண்டுமுடிவில் செலுத்தவேண்டியவட்டியாது?

ரூ 18000 ஐ செலுத்திகடனில் இருந்துவிடுபடுவாராயின் எடுத்தகாலத்தைக் காண்க.

11.




PQRS என்பதுஒருசதுரம் ஆகும்.

i. Yஐக் காண்க.

ii. ΔPQT இன் சுற்றளவுயாது?


12. 1:50000 எனும் அளவிடையில் வரையப்பட்டதேசப்படத்தில் P, Qஎனும் இரு நகரங்களுக்கிடையிலான தூரம் 8cm ஆயின் அவ் இரு நகரங்களுக் கிடையிலான உண்மைத் தூரத்தை Km இல் தருக.

**13.** $V^2=u^2 + 2fs$எனும் சூத்திரத்தில் S ஐ எழுவாயாக்குக.

**14.** $60kmh^{-1}$எனும் கதியில் செல்லும் ஒருவான் 5 மணித்தியாலத்தில் சென்ற தூரம் யாது?

15. காரணிஅறிவைக் கொண்டுசுருக்குக. $39 \times \frac{22}{7} - 11 \times \frac{22}{7}$

16.




உருவில் தரப்பட்டுள்ளதரவுகளுக்கமையa,b இன் பருமன்களைக் காண்க.

17.

| | | | | | |
|---|---|---|---|---|---|
| ON | 4 + | 5 | x | 8 = | |

எனும் ஒழுங்கில் சாதாரணமுறைக் கணிகருவியின் சாவிகளை இயக்கும் போதுகாட்சித் திரையில் பெறப்படும் எண் யாது?

18. 5, 8, 11,..... எனும் தொடரின்

i. முதலாம் உறுப்புயாது?

ii. பொதுவித்தியாசம் யாது?

19. அருச்சுனனுக்கு அவனது தந்தை ஜேர்மனியில் இருந்து 150 யூரோக்களை அனுப்பினார். அதனை இலங்கையில் மாற்றியபோதுரூ 24300 கிடைத்ததுஎனின் ஒருயூரோவின் இலங்கைநாணயப் பெறுமதியாது

20. 50, 25, 75, 50, 100 இத் தரவுத் தொகுதியில்

i. ஆகாரம் யாது?

ii. இடையம் யாது?

## பகுதிII

முதலாம் வினாவுக்கும் ஏனையவற்றில் இருந்துநான்குவினாக்களைத் தெரிவுசெய்துமொத்தமாகஐந்துவினாக்களுக்குவிடைதருக.

01)

i. இராமன் தனது எதிர்காலத்திற்கான கல்வித் தேவை கருதி முதலாம் மாதம் ரூபா 50, இரண்டாம் மாதம் ரூபா 55, மூன்றாம் மாதம் ரூபா 60 என்றவாறு பணத்தை சேமித்தான். அவ் எண் கோலமானதுபின்வருமாறுஅமையும்.

50, 55, 60........

a. இத் தொடரின் பொதுவித்தியாசம் யாது.

b. ஐந்தாம் மாதம் உண்டியலில் இட்டபணம் யாது?

c. இத் தொடரின் பொது உறுப்புயாது?

d. அவர் ரூ 725 ஐ எத்தனையாம் மாதம் உண்டியலில் இடுவார்.

e. பணம் உண்டியலில் இடத் தொடங்கியநாளில் இருந்துஒருவருடத்தின் பின் அவனதுஉண்டியலில் உள்ளமொத்தபணம் யாதாக இருக்கும்.

ii. வியாபாரிஒருவர் 15% இலாபம் வைத்துகுறித்தஒருபொருளைரூ 575 இற்கு விலைகுறித்தார்.

a. விற்பனையின் போதுகு றித்தவிலையில் 10% கழிவுவழங்கப்பட்ட தெனின் அப் பொருளினை விற்றவிலையாது?

b. பொருளின் கொள்விலையாது?

c. விற்பனையால் கிடைத்த இலாபம் யாது?

d. இலாபசதவீதம் யாது?

02)

i. சுருக்குக $x + 2(x + 3)$

ii. காரணிப்படுத்துக. $a^2 - b^2$

iii. $x + y = 5$
$x - y = 3$

எனின் x, y இன் பெறுமானங்களைக் காண்க.

iv. $x = 5, y = -3$எனின்


$3x-2y$ இன் பெறுமானம் யாது?

v. $55^2 - 45^2$ இன் பெறுமானத்தைகாரணிபற்றியஅறிவைப் பயன்படுத்திகாண்க.

vi. சுருக்குக$2x + 6y + 4x - y$

vii. காரணிப்படுத்துக$x^2 + 7x + 12$

viii.




உருவில் y இன் பெறுமானம் யாது

03)

i. தரம் 09 இல் கல்விபயிலும் மாணவர்கள் 30 பேரின் நிறைகள் பின்வருமாறு மாணவர்களின் நிறை (kg)

| மாணவர்களின் நிறை(kg) | 35-40 | 40-45 | 45-50 | 50-55 | 55-60 |
|---|---|---|---|---|---|
| மாணவர்களின் எண்ணிக்கை | 5 | 7 | 9 | 4 | 5 |

a. இப் பரம்பலின் ஆகார வகுப்பாயிடையாது?

b. இப் பரம்பலின் இடைய வகுப்பாயிடையாது?

c. மாணவர் ஒருவரின் இடைநிறையைக் காண்க.

d. 50kg இலும் குறைந்த நிறையுடைய மாணவர்களின் மொத்த எண்ணிக்கை யாது?

e. 45kg அல்லது 45 kg இலும் கூடியநிறை உடையமாணவர்களின் எண்ணிக்கை மொத்த மாணவர்களில் எத்தனை சதவீதம்.

ii. 1,2,3,4,5,6 என எண்ணிடப்பட்ட கோடாத தாயக்கட்டை ஒன்றை உருட்டும் போது.

a. கிடைக்கத்தக்க பேறுகளின் மாதிரிவெளி S ஐ எழுதுக.


b. இரட்டைஎண் கிடைப்பதற்கான மாதிரிவெளி X ஐ தருக.

c. ஒற்றை எண் கிடைப்பதற்கான நிகழ்தகவுயாது?

04)

i.

பின்வரும் வென்வரிப்படத்தை உபயோகித்து கீழ்வரும் வினாக்களுக்கு விடைதருக.




a. அகிலத் தொடையை மூலகங்களாகஎழுதிக் காட்டுக.

b. $(A\cup B)$யாது

c. $n(A\cup B)$யாது

d. (AnB)யாது

e. n $(A\cap B)$யாது

f. $A^{l}$ ஐக் காண்க

g. $B^{l}$ ஐக் காண்க

h. $(A\cup B)^{l}$ ஐக் காண்க.

ii. பொது உறுப்பு $4n-3$ இனால் தரப்படும் எண் கோலத்தில்

a. முதல் மூன்று உறுப்புக்களையும் தருக.


b. அடுத்துவரும் உறுப்புக்களுக்கிடையிலான வித்தியாசம் யாது?

c. 12 ஆம் உறுப்புயாது

d. 109 என்பது இக் கோலத்தின் எத்தனையாம் உறுப்பு

2

i.




a. பெரியஅரைவட்டத்தின் ஆரையாது?

b. சிறியஅரைவட்டத்தின் ஆரையாது?

c. பெரியஅரைவட்டத்தின் பரப்பளவுயாது?

d. சிறியஅரைவட்டங்களின் பரப்பளவுயாது?

e. நிழற்றப்பட்டபகுதியின் சுற்றளவுயாது?

f. நிழற்றப்பட்டபகுதியின் பரப்பளவுயாது?

ii. கனவுரு வடிவான தாங்கியின் அடியின் பரப்பளவு $4000cm^2$ ஆகும். அதன் உயரம் 0.5m ஆகும். அதில் 0.25m உயரத்திற்கு நீர் காணப்படுகின்றது.

a. தாங்கியின் கனவளவுயாது?


b. தாங்கியில் உள்ளநீரின் கனவளவுயாது?

c. தாங்கியில் உள்ளநீரின் கனவளவைலீற்றலில் தருக.

d. 1நிமிடத்தில் 10 லீற்றர் நீர் வீதம் நிரப்பினால் தாங்கிமுற்றாகநிரம்பஎடுக்கும் நேரம் யாது?

06)

i.




உருவில் ஓர் ஓட்டப்பாதையின் பரும்படிப்படம் காட்டப்பட்டுள்ளது.

a. இவ் ஓட்டப்பாதையின் சுற்றளவுயாது

b. இவ் ஓட்டப்பாதையைசுற்றி 03 தடவைஓடும் வீரன் ஓட வேண்டியமொத்த தூரம் யாது?

. ஆடை விற்பனை நிலையம் ஒன்றில் கொள்வனவு செய்யப்படும் ஆடைகளுக்கு பின்வருமாறு கழிவு வழங்கப்படுகின்றது.

ரூபா 2000 வரையான கொள்வனவுகளுக்கு 5% கழிவு

ரூபா2000 இற்கு மேற்பட்ட கொள்வனவுகளுக்கு 10% கழிவு


a. ரூபா 2500 பெறுமதியான ஆடையைக் கொள்வனவு செய்யும் போது வழங்கப்படும் கழிவுயாது?

b. ரூபா 1800 பெறுமதியான ஆடையினை கொள்வனவு செய்யும் போது செலுத்த வேண்டிய பணம் யாது?

c. ரூபா 2300 பெறுமதியான ஆடையினை கொள்வனவு செய்வதற்கு ரூபா 2500 இனை கடைக்காரருக்கு கொடுத்தால் கிடைக்கும் மீதிப்பணம் யாது?

# சங்கீதம்

## தவில்




1. கொட்டு 2. வார்
3. வலந்தலை 4. கழி
5. வெண்டயம்

3) தவில் பலாமரத்தில் உருளை வடிவமாக உட்புறத்தில் குடைந்தெடுக்கப் பட்டு, இருபுறமும் தோலால் மூடப்படும். இவை வலந்தலை (தட்டு) இடந்தலை (தொப்பி) என அழைக்கப்படுகின்றன. வலந்தலையில் 2 தோல்களும், தொப்பியில் ஒரு தோலும் கொண்டு மூடப்பட்டுள்ளது. இந்தத் தோல்கள் ஆட்டுத்தோலால் ஆனவை.

தவில் வார்கள் எருமைமாட்டுத் தோலால் செய்யப்பட்டு இறுக்கிக் கட்டப்படுகின்றன. மூங்கில் வளைகள் தவிலின் இரு புறங்களிலும் பொருத்தப்படும். ஒலி எழுப்பும் தோற்பகுதிகள் வளைகளில் இணைத்துச் சுற்றப்படும். வலதுகை விரல்களால் வாசிக்கப்படும் அகன்ற தோற்பகுதிக்கு வலந்தலை என்று பெயர். இடது கையில் குச்சியால் அடித்து வாசிக்கப்படும் பகுதிக்கு இடந்தலை என்று பெயர். இது தொப்பி எனவும் அழைக்கப்படுகின்றது. இவ்விரு தோற்பகுதிகளிலும் வார்கள் நுழைவதற்கு ஏற்றவாறு 11 துவாரங்கள் காணப்படுகின்றன. இத்துளைகளை 'கண்கள்' என்று கூறுவார்கள். இவற்றின் இடையே வார்க்கற்றைகள் நுழைக்கப்பட்டு வளைகளுடன் இறுக்கிக் கட்டப்படுகின்றன. தற்காலத்தில் தோல்வாருக்குப் பதிலாக உலோகவார் பயன்படுத்தப்படுகின்றது.

தவில் வாத்தியத்தை கட்டியுள்ள நாடாவை இணைக்கும் வளையத்தின் பெயர் 'வெண்டயம்' ஆகும். இது பஞ்ச லோகங்களினால் ஆனது. தவில் பெரும்பாலும் தஞ்சை நாச்சிமார் கோவிலடியில் செய்யப்பட்டு வருகிறது. தவில் கழி திருவாச்சி மரக் கொம்பினால் செய்யப்படுகின்றது. இது 12 அங்குல நீளமுடையது. தவில் வாசிப்பதில் பிரபல்யம் அடைந்தவர்கள் (தேர்ச்சி பெற்றவர்கள்)

1. அம்மாசத்திரம் கண்ணுசாமிப்பிள்ளை
2. வாங்கைமான் சண்முகசுந்தரம்

## இராகலட்சணம்

### மத்தியமாவதி

இது ஜன்ய ராகம் தாய் ராகம் 22 ஆவது மேளமான கரஹரப்பிரியா வாகும்.

ஆ : ஸரிமபநிஸ்

அவ: ஸ்நிபமரிஸ

இவ் இராகத்தில் வரும் ஸ்வரங்களாவன: ஸட்ஜம், சதுஸ்ருதி ரிஷபம், சுத்த மத்யமம், பஞ்சமம், கைசிகி நிஷாதம்

வர்ஜ ராகம், காந்தாரம், தைவதம், வர்ஜ சுரங்கள், ஔடவ ராகம், உபாங்க இராகம், ரிஷபம், மத்திமம், நிஷாதம் ஜீவ சுரங்களும் ரி, ம, ப நியாச சுரங்களாகும். கம்பித சுரங்கள் கமக வரிக ரக்தி ராகம், த்ரிஸ்தாயி ராகம், ஒரு புராதன ராகம், தேவாரப் பண்களில் இதற்குச் செந்துருத்தி என்று பெயர். சுத்த கர்நாடக இராகம்.

இதனுடைய கானகாலம் நடுப்பகல் ஆயினும் மிகவும் சுபகரமான ராகமானதால், இதை எப்பொழுதும் பாடலாம். எல்லாச் சுரங்களிலும் உருப்படிகள் ஆரம்பிக்கின்றன. ரிமரிபமபநிபஸ, நிரிஸ்ரி நிஸ்பநிமப ஸரிமரிஸநிபநிஸரிஸா ஸ்நிபமரிமபநி ஸ்ரிநி, பாம - ரிஸ் ரீமபா போன்ற தாடு பிரயோகப்பிடிகள் மிகவும் ரஞ்சகமானவை. இசை நாடகங்களில் உபயோகப்படுத்தப்படும் இராகங்களில் ஒன்று.

ஸ்வர ஸ்வர மூர்ச்சனாகார ஜன்ய ராகம். மோகனத்தின் ரிஷப மூர்ச்சனையே இவ்விராகம் ரி, ம, ப, நி சுரங்கள் கிரகபேதம் செய்தால் முறையே இந்தோளம், சுத்தசாவேரி, உதய ரவிச்சந்திரிகா, மோகனம் ஆகிய இராகங்கள் தோன்றும்.

இந்த ராகத்தை கச்சேரி பஜனை காலசேஷம், நாடகம் முதலிய நிகழ்ச்சிகளின் இறுதியில் பாடி முடிக்கும் வழக்கம் தொன்று தொட்டு வருகின்றது. இசை நிகழ்ச்சிகளில் பல்வேறு ராகங்களைக் கேட்பதன் மூலமாக பல்வேறு இரச உணர்ச்சிகள் நமக்கு ஏற்படுகின்றன. மத்தியமாவதி ராகத்தைக் கடைசியில் கேட்பதால் ஒருவித சாந்த நிலைமை ஏற்படுகிறது.

அத்துடன் ராகங்களை அகாலங்களில் பாடுவதால் ஏற்படும் தோஷமும் இந்த ராகத்தைக் கடைசியில் பாடுவதால் நிவாரணமாகிறது என்றும் கூறப்படுகிறது. மத்தியமாவதியின் பழைய பெயர் மத்யமாதி ஆகும். மாலைவேளை புல்லாங்குழலில் வாசிக்க மிக்க ரஞ்சகமாக இருக்கும். புராணம் பாடுவதற்கு உகந்த இராகம்.

# யாழ்ப்பாணப் பல்கலைக்கழகம், இலங்கை

## 29 ஆவது பொதுப் பட்டமளிப்பு விழா - 10.01.2014

**கலாநிதி, முதுதத்துவமாணி, முதுமாணி, பட்டப்பின் டிப்ளோமா, இளமாணி டிப்ளோமா ஆகிய பட்டங்களை அளிப்பதற்காக 10.01.2014 ஆம் திகதி அன்று யாழ்ப்பாணப் பல்கலைக்கழகத்தின் 29 ஆவது பொதுப்பட்டமளிப்பு விழா நடைபெறவுள்ளது. பின்வரும் தேர்வுகளில் 01.03.2013 ஆம் திகதிக்கு பின்பு சித்தியடைந்து பட்டங்கள் பெற தகுதியுடையவர்கள் 15.12.2013 ஆம் திகதிக்கு முன்னர் தமது வேண்டுகோளை அறிவுறுத்தல்களுக்கமைய சமர்ப்பிக்குமாறு கோருகின்றேன்.**

**யாழ்ப்பாணப் பல்கலைக்கழகம்**

01. கலாநிதி
02. முதுதத்துவமாணி
03. பொது நிர்வாகத்தில் முதுமாணி
04. அபிவிருத்திக் கல்வியில் முதுமாணி
05. தமிழில் முதுமாணி
06. சைவசித்தாந்தத்தில் முதுமாணி
07. முதுகல்விமாணி
08. பட்டப்பின் கல்வி டிப்ளோமா (யாழ்ப்பாணம்/வவுனியா)
09. நூலக விஞ்ஞானத்தில் பட்டப்பின் டிப்ளோமா
10. வைத்தியமாணி, சத்திரசிகிச்சைமாணி
11. தாதியியல் விஞ்ஞானமாணி
12. மருந்தகவியல் மாணி
13. மருத்துவ ஆய்வுகூட விஞ்ஞானமாணி
14. சித்தவைத்திய சத்திரசிகிச்சைமாணி
15. சட்டமாணி
16. விவசாய விஞ்ஞானமாணி
17. தொழில் நிர்வாகமாணி
18. வணிகமாணி
19. விஞ்ஞானமாணி (பொது/சிறப்பு)
20. கணனி விஞ்ஞானத்தில் விஞ்ஞானமாணி

**வவுனியா வளாகம்**

21. வியாபார முகாமைத்துவமாணி (பொது சிறப்பு)
22. விஞ்ஞானமாணி பிரயோக கணிதமும் கணிப்பிடலும் (பொது)
23. விஞ்ஞானமாணி சிறப்பு கணனி விஞ்ஞானம்
24. விஞ்ஞானமாணி சூழல் விஞ்ஞானம் (பொது சிறப்பு)
25. தகவல் தொடர்பாடல் தொழில்நுட்ப இளமாணி (பொது)
26. தகவல் தொடர்பாடல் தொழில்நுட்ப விஞ்ஞானமாணி (சிறப்பு)
27. ஆங்கில டிப்ளோமா

**கீழ்வரும் தேர்வுகளுக்கு தோற்றியவர்கள் தேர்வு முடிவுகள் உறுதிப்படுத்தப்பட்ட பின்பு விண்ணப்பிக்கவும்.**

01. கலைமாணி (பொது/சிறப்பு)
02. நுண்கலைமாணி (இசை/நடனம்/சித்திரமும் வடிவமைப்பும்)

**2) அறிவுறுத்தல்கள்**

**1. வேண்டுகோள் படிவங்கள்**

விண்ணப்பதாரிகள் கீழே கொடுக்கப்பட்டுள்ள மாதிரி விண்ணப்பப் படிவத்தை A4 தாளில் தயாரித்தோ அல்லது www.Jfn.ac.lk என்ற யாழ்ப்பாணப் பல்கலைக்கழக இணையத் தளத்தில் இருந்து பதிவிறக்கம் மூலம் பிரதி செய்தோ விண்ணப்பிக்கும்படி கேட்டுக்கொள்ளப்படுகிறார்கள்.

**2. கட்டணங்கள்**

- வேண்டுகோள் கட்டணம் ரூபா. 200.00
- சான்றிதழ் கட்டணம் ரூபா. 350.00
- பட்டதாரி மேலங்கிக் கட்டணம் ரூபா. 50.00

குறிப்பு: பின்வருவோர் சான்றிதழ் கட்டணம் மட்டும் செலுத்தினால் போதுமானது.

- பட்டமளிப்பு விழாவிற்கு சமூகமளிக்காது பட்டச் சான்றிதழைப் பெற விரும்பும் பட்டதாரிகள்
- ஒன்று /இரண்டு வருட டிப்ளோமாதாரிகள்.

**3. கட்டணம் செலுத்தும் முறை**

யாழ்ப்பாணப் பல்கலைக்கழக மக்கள் வங்கிக்கிளையின் கணக்கு இல. 162100160000880 இற்கு சேரக்கூடியதாக ஏதாவதொரு மக்கள் வங்கிக்கிளையில் கட்டணத்தைச் செலுத்த வேண்டும். (வங்கிப் பற்றுச் சீட்டில் பெயரையும் மாணவர் பதிவு இலக்கத்தையும் குறிப்பிடுதல் வேண்டும்.)

**பணம் செலுத்திய வங்கிப் பற்றுச்சீட்டின் மூலப்பிரதி வேண்டுகோள் படிவத்துடன் இணைக்கப்பட்டிருத்தல் வேண்டும்** மேலதிகமான ஒரு போட்டோப்பிரதியை உங்கள் தேவைக்கு வைத்துக் கொள்ளவும்.

**4. பட்டதாரி மேலங்கிகளும் விருந்தினர் நுழைவுச்சீட்டும்**

நேரடியாக சமூகமளித்து பட்டம் பெறுபவர்களுக்கு ஒரு பட்டதாரி மேலங்கியும் ஒரு விருந்தினார் நுழைவுச்சீட்டும் யாழ்ப்பாணப் பல்கலைக்கழக கல்விக்கிளையில் வழங்கப்படும்.

**5. பல்கலைக்கழக நிலுவைகள்**

பல்கலைக்கழகத்திற்கு ஏதாவது நிலுவைகள் அல்லது கொடுப்பனவுகள் செலுத்தப்படாதிருந்தால் அவ் விண்ணப்பதாரிக்கு பட்டமளிப்புச் சான்றிதழ் வழங்கப்படமாட்டாது.

**6. வேண்டுகோள் படிவங்களை சமர்ப்பித்தல்**

பூரணப்படுத்தப்பட்ட வேண்டுகோள் படிவத்துடன் பணம் செலுத்திய வங்கிப் பற்றுச்சீட்டின் மூலப்பிரதியை இணைத்து நேரிலோ அல்லது பதிவுத்தபால் மூலமோ கீழ்காணும் முகவரிகளுக்கு 15.12.2013 இற்கு முன் சமர்ப்பித்தல் வேண்டும். (கடித உறையின் இடதுபக்க மூலையில் பட்டம் பெறும் கற்கை நெறியை குறிப்பிடவும்)

**அ) யாழ்ப்பாணப் பல்கலைக்கழகத்தில் கல்வி பயின்றவர்கள்**

உதவிப் பதிவாளர்/அனுமதிகள்,
யாழ்ப்பாணப் பல்கலைக்கழகம்,
யாழ்ப்பாணம்.

**ஆ) யாழ்ப்பாணப் பல்கலைக்கழக வவுனியா வளாகத்தில் கல்வி பயின்றவர்கள்**

சிரேஷ்ட உதவிப் பதிவாளர்/தேர்வுகள்,
வவுனியா வளாகம், வவுனியா.

**வேண்டுகோள் படிவங்கள் சமர்ப்பிக்கவேண்டிய கடைசித்திகதி 15.12.2013.**

முடிவு திகதிக்கு முன்னர் கிடைக்கப்பெறாத வேண்டுகோள்கள் ஏற்றுக்கொள்ளப்படமாட்டா. மேலதிக விபரங்களுக்கு உதவிப் பதிவாளர்/ அனுமதிகள். **(தொலைபேசி இல. 0212226714/ 0212222006) உடன் தொடர்பு கொள்ளவும்**

பதிவாளர்
20.11.2013.

# UNIVERSITY OF JAFFNA – SRI LANKA

## GENERAL CONVOCATION –10th January 2014

**SUPPLICATION FORM**

**Note:** In writing your name please ensure that spelling of the name confirms what appears in the Birth Certificate. If the Birth Certificate is in Tamil or Sinhala, please give the English spelling of your name as it appears in your Admission Form.

**Registration No:-** ............................ **Index No:-** ........................

(1) Name in Full :-
  **(a) In English:** ..............................................................
  **(b) In Tamil:** ..............................................................
  **(c) In Sinhala:** ..............................................................

(2) Name of the Post Graduate Degree/ Degree/ Diploma to be conferred:
..............................................................

(3) Year of passing the above examination and **the effective date of the degree** :
..............................................................

(4) Whether the Post Graduate Degree / Degree/ Diploma to be conferred **"In Person"** or **"In Absentia"** (Please tick as appropriate)

| | |
|---|---|
| In Person | |
| In Absentia | |

(5) Present Address:- ..............................................................
..............................................................

(6) Telephone No:- ........................E-mail........................................

(7) Postal Address:- ..............................................................
..............................................................

(8) **Particulars of Payment made:- (Payment Receipt Attached)**

| | | **Total Fee** | **Date of Payment** |
|---|---|---|---|
| (a) Supplication Fee | (Rs. 200.00) | | |
| (b) Certificate Fee | (Rs.350.00 ) | | |
| (c) Gown Fee | ( Rs. 50.00) | | |

I hereby certify that the above information are correct and true to the best of my knowledge.

Date: ..........................  ..............................
Signature of Applicant

(C/3202)

# செவ்வாய் கிரகத்தில் பாறைகள்



செவ்வாய்க்கிரகத்தில் மனிதன் உயிர் வாழ்வதற்கு உரிய சாத்தியக் கூறுகள் குறித்து உலகின் பல நாடுகளும் ஆராய்ச்சியில் ஈடுபட்டுள்ளன.

இதற்காக இந்நாடுகள் செவ்வாய்க்கிரகத்துக்கு விண்கலங்களை அனுப்பி ஆராய்ச்சி நடத்தி வருகின்றன.

அமெரிக்காவின் நாசா மையம், செவ்வாய்க்கிரகத்தில் தண்ணீர் இருப்பதற்கான தடயங்களை கண்டுபிடித்துள்ளது.தற்போது இக்கிரகத்தில் கிரானைட் இருப்பதை விஞ்ஞானிகள் கண்டுபிடித்துள்ளனர்.

இத்தகவலை நாசாவைச் சேர்ந்த பூமி மற்றும் விண்வெளி அறிவியல் தொழில்நுட்ப விஞ்ஞானி ஜேம்ஸ் விரே தெரிவித்துள்ளதுடன், ஆதாரங்களையும் வெளியிட்டுள்ளார். இந்த ஆய்வின் மூலம் செவ்வாய்க்கிரகத்தின் புவியியல் நிலை குறித்து மேலும் அறிய வாய்ப்பு ஏற்பட்டுள்ளதாக விஞ்ஞானிகள் கருதுகின்றனர்.

# உடல் அசைந்ததால் உயிர்தப்பிய குழந்தை



சீனாவில் இறந்த குழந்தை மீண்டும் உயிர் பெற்ற சம்பவம் இடம்பெற்றுள்ளது

கிழக்கு சீனாவின் அன்ஹுய் மாகாணத்தைச் சேர்ந்த ஒரு இளம்பெண்ணுக்கு கடந்த மாதம் அழகிய ஆண் குழந்தை பிறந்தது.

பிறக்கும் போதே சுவாசக் கோளாறுடன் இருந்ததால் டாக்டர்கள் தீவிர சிகிச்சைப்பிரிவில் வைத்து கண்காணித்து வந்தனர். கடந்த 12ஆம் திகதி குழந்தையின் நிலைமை மோசமடைந்ததால் அதைக்காப்பாற்ற வெகு நேரம் போராடிய டாக்டர்கள் அது இறந்துவிட்டதாக தெரிவித்து, இறப்பு சான்றிதழும் வழங்கி வீட்டுக்கு அனுப்பினர்.

சோகத்தில் மூழ்கிப்போன பெற்றோர் அதை புதைப்பதற்கான ஏற்பாடுகளை செய்தபோது உடலில் சிறு அசைவு ஏற்பட்டதை உறவினர் ஒருவர் கவனித்தார். இதனையடுத்து, அவசர அவசரமாக அன்ஹுய் மாகாண அரசு குழந்தைகள் வைத்தியசாலைக்கு கொண்டுசென்றனர்.

உடனடியாக, உயிர் காக்கும் கருவிகளின் துணையுடன் அந்தக்குழந்தை காப்பாற்றப்பட்டது. உயிருடன் உள்ள குழந்தை இறந்து விட்டதாக சான்றிதழ் வழங்கிய மருத்துவர் மற்றும் தாதி வேலை நீக்கம் செய்யப்பட்டுள்ளனர். புதைகுழிக்கு போகும் வழியில் உயிர் பிழைத்த குழந்தைக்கு தொடர்ந்து சிகிச்சை அளிக்கப்படுகிறது.

# ஈரான் மீது புதிய தடைகள் அவகாசம் கோரும் ஒபாமா

ஈரானுக்கு எதிராக புதிய தடைகள் விதிப்பதற்கு 6 மாத கால அவகாசம் வழங்குமாறு அமெரிக்க ஜனாதிபதி பராக் ஒபாமா கோரியுள்ளார்.

அமெரிக்க செனட் சபை உறுப்பினர்கள் ஈரானின் அணுத் திட்டத்திற்கு எதிராக தீர்மானம் மேற்கொண்டுள்ள நிலையிலேயே அமெரிக்க ஜனாதிபதி கால அவகாசத்தை கோரியுள்ளார். ஈரானின் அணுத்திட்டம் தொடர்பில் மேற்குலக நாடுகளின் தலைவர்கள் சந்தித்து கலந்துரையாடவுள்ள நிலையில் ஒபாமா இதனை குறிப்பிட்டுள்ளார்.



இணக்கப்பாடொன்று எட்டப்படாத பட்சத்தில் தெஹ்ரான், யுரேனியம் செறிவாக்கும் நடவடிக்கையினை தொடர்ந்தும் முன்னெடுக்கும் என அமெரிக்கா குறிப்பிட்டுள்ளது.

இதேவேளை ஈரானுடனான அணுத் திட்டம் தொடர்பில் பிரித்தானியப்பிரதமர் டேவிட் கமரூனுக்கும் ஈரான் ஜனாதிபதி ஹசன் ரொஉஹானிக்கும் இடையில் பேச்சுவாரத்தை இடம்பெற்றுள்ளது.

# ஐரோப்பிய யூனியனின் உயர்விருது மலாலாவுக்கு



ஐரோப்பிய யூனியனின் உயரிய விருதான சகோரோவ் மனித உரிமைப் பரிசு மலாலாவுக்கு வழங்கப்பட்டது.பாகிஸ்தானில் பெண்களின் கல்விக்காக போராடி வரும் சிறுமி மலாலா யூசுப்சாயை தலிபான்கள் சுட்டனர்.

மரணத்துடன் போராடி, தற்போது லண்டனில் தனது குடும்பத்தினருடன் வசித்து வருகிறார்.

தொடர்ந்து மலாலாவின் உயிருக்கு தலிபான்கள் குறிபார்த்து வரும் நிலையில், அவர்களுக்கு அஞ்சாமல் தனது போராட்டத்தை தொடர்ந்து கொண்டிருக்கிறார்.இந்நிலையில் இவரின் செயல்களை கௌரவிக்கும் வகையில் ஐரோப்பிய யூனியனின் உயரிய சகாரோவ் மனித உரிமை பரிசு வழங்க தீர்மானித்திருப்பதாக சமீபத்தில் அறிவிக்கப்பட்டது.

இதனையடுத்து நேற்று முன்தினம் கிழக்கு பிரான்சில் உள்ள ஸ்ட்ராஸ்போர்க் நகரில் விருது வழங்கும் விழா நடைபெற்றது.

விழாவில் கலந்து கொண்ட ஐரோப்பிய நாடாளுமன்ற தலைவர் மார்டின் ஸ்க்கல்ஸ், பரிசை வழங்கினார். 50 ஆயிரம் யூரோக்கள் ரொக்கத்துடன் கூடிய இந்தப் பரிசை உலகெங்கும் உள்ள மனித உரிமை பிரசாரகர்களுக்கு அர்பணிப்பதாக மலாலா தெரிவித்துள்ளார்.

# நதியில் மிதந்த 60ஆயிரம் பவுண்ஸ்



இங்கிலாந்து நதி ஒன்றில் மிதந்து வந்த 60ஆயிரம் பவுண்ஸ் பணத்தை பொலிஸார் கைப்பற்றியுள்ளனர்.

இங்கிலாந்தின் வடக்கு பகுதியில் ஸ்பால்டிங் நகரைச் சேர்ந்த ஒருவர் அப்பகுதியில் உள்ள நதி அருகே தனது நாயோடு சென்று கொண்டிருந்த போது, நதியில் பணம் மிதந்து வருவதைக் கண்டு திடுக்கிட்டார்.

இதுகுறித்து பொலிஸாருக்கு தகவல் தெரிவித்ததைத் தொடர்ந்து சம்பவ இடத்திற்கு விரைந்து வந்த பொலிஸார் நதியில் மிதந்து வந்த பணத்தைக் கைப்பற்றினர்.பின்னர் சேகரிக்கப்பட்ட பணத்தை எண்ணியதில் அவற்றின் மதிப்பு மொத்தம் 60 ஆயிரம் பவுண்டுகள் எனத் தெரியவந்துள்ளது.

இதுகுறித்து ஸ்பால்டிங் சிஐடி பிரிவு அதிகாரி கூறுகையில், நீரில் நனைந்ததால் பண நோட்டுகள் சேதமடைந்த போதிலும் மீதமுள்ள பணமே அதிக மதிப்பு உள்ளது என்றும் அரிதாக கண்டுபிடிக்கப்பட்ட இந்த வங்கிப் பணத்தை சட்டபூர்வ உரிமையாளர்களிடம் வழங்க நடவடிக்கை எடுத்து வருகிறோம் எனவும் கூறியுள்ளார். பணத்தின் உரிமையாளரிடம் ஒப்படைக்கும் வரை இப்பணம் பொலிஸாரின் வசம் இருக்கும் என அறிவிக்கப்பட்டுள்ளது.

மேலும் பணத்தை ஆற்றில் விட்டவர்கள் குறித்து தகவல் அறிந்தவர்கள் பொலிஸாரிடம் தெரிவிக்கலாம் என அறிவிக்கப்பட்டுள்ளது.

## உலகச் செய்திகள்

# வன்முறைக்கு காரணம் என்ன? சர்வதேச ஆய்வில் தகவல்

உலகம் முழுவதும் உள்ள குழந்தைகள் தங்கள் நாடுகளில் நடக்கும் வன்முறைக்கான முக்கிய காரணங்களை தெரிந்து வைத்திருக்கிறார்கள் என்று சர்வதேச ஆய்வு கூறியுள்ளது.

சைல்ட் ப்ண்ட் என்ற அமைப்பு சமீபத்தில் 47 நாடுகளில் உள்ள 10 முதல் 12 வயதுக்குட்பட்ட 6, 499 குழந்தைகளிடம் ஆய்வு ஒன்றை நடத்தியது.

இதில், 29%குழந்தைகள் தீய பழக்கங்களையும், 28% குழந்தைகள் போதை, குடி பழக்கங்களையும் உலகில் நடக்கும் வன்முறைக்கான காரணமாக குறிப்பிட்டிருக்கின்றனர்.




இந்தியாவில் நடக்கும் வன்முறைக்கு கல்வியின்மை, குடும்ப வன்முறை, சமூக மோதல்கள் ஆகியவையும் முக்கிய காரணங்களாக குழந்தைகள் கூறுகின்றனர்.

மேலும் இந்த ஆய்வின் ஒரு பகுதியாக, குழந்தைகளிடம் நீங்கள் ஒரு வேளை இந்தியாவின் குடியரசுத் தலைவராக இருந்தால், வன்முறையை தடுக்க என்ன செய்வீர்கள் என்று கேட்கப்பட்டது. அதற்கு 41% குழந்தைகள் கடுமையான சட்டங்களை அமுல்படுத்துவேன் என்று பதிலளித்துள்ளனர்.

நீங்கள் எங்கு பாதுகாப்பாகவும் மகிழ்ச்சிகரமாகவும் உணர்கிறீர்கள் என்ற கேள்விக்கு, 44% குழந்தைகள் பள்ளியையும், 38% குழந்தைகள் வீட்டையும் கூறியுள்ளனர்.

மேலும் அவர்களிடம் உங்களுக்கு எது மிகவும் முக்கியமாக விளங்குகிறது என்று கேட்கப்பட்டது. இதற்கு கல்வியே பிரதானமாக கூறும் குழந்தைகளில், 85 சதவீத பேர் அனைவருக்கும் தரமான கல்வி கிடைக்க வேண்டும் என்று விரும்புகின்றனர்.

# கழிவறையில் கிடந்த தங்கம்



இந்திய விமானத்தின் கழிவறையில் இருந்து 24 கிலோ தங்கக்கட்டிகள் மீட்கப்பட்டுள்ளன.

கொல்கத்தா விமான நிலையத்தில் நிறுத்தப்பட்டிருந்த சரக்கு விமானத்தில், துப்புரவு பணியாளர்கள் துப்புரவு செய்துகொண்டிருந்தனர். அப்போது, கழிவறையில் 2 பைகள் கிடந்தன.

அவற்றில் 24 தங்கக்கட்டிகள் இருந்தன. அவை விமான நிலைய அதிகாரிகளிடம் ஒப்படைக்கப்பட்டன.

தலா ஒரு கிலோ எடை கொண்ட இந்த தங்கக் கட்டிகளின் மதிப்பு ரூ.7 கோடி இந்திய ரூபாவென சுங்கத்துறை அதிகாரிகள் தெரிவித்தனர். இதற்கு யாரும் உரிமை கோரவில்லை.

ஜெட் ஏர்வேஸ் நிறுவனத்திற்கு சொந்தமான இந்த சரக்கு விமானம், பாட்னாவிற்கு சென்று வந்தபிறகு கொல்கத்தாவில் நிறுத்தப்பட்டிருந்தது. அதற்கு முன்பாக சர்வதேச வழித்தடங்களில் சென்றது.

எனவே, இந்த தங்கம் வெளிநாட்டில் இருந்து கடத்தி வரப்பட்டிருக்கலாம் என சந்தேகிக்கப்படுகிறது. இதுதொடர்பாக விசாரணை நடந்து வருகிறது. இதுவரை எவரும் கைது செய்யப் படவில்லை.

தங்கத்தின் மீதான மோகத்தை குறைக்கும் வகையில், இறக்குமதி வரி இந்தியாவில் இந்த ஆண்டு மட்டும் 3 முறை உயர்த்தப்பட்ட பிறகு இந்தக் கடத்தல் நடந்துள்ளமை குறிப்பிடத்தக்கது.

# புகையிரத கடவைகள் இல்லை; போக்குவரத்து செய்வதில் சிரமம்

(கிளிநொச்சி)

கிளிநொச்சி மாவட்டத்தில் புகையிரத வீதிகளை குறுக்க றுத்துச் செல்லும் கிராமிய வீதி களுக்கு புகையிரத கடவைகள் அமைக்கப்படாமல் இருப்பதால் இதனூடாக போக்குவரத்தை மேற்கொள்ளும் மக்கள் பல் வேறு சிரமங்களை எதிர்நோக் குவதாக தெரிவிக்கின்றனர். (கே)

## வாகனம் மோதி...

பலனின்றி உயிரிழந்துள் ளார்.

இச்சம்பவத்தில் தொட்டில டியைச் சேர்ந்த சந்தோசம் என்று அழைக்கப்படும் இ.ரத்தினம் (வயது - 51) என்பவரே உயிரி ழந்தவராவார்.

கடந்த செவ்வாய்க்கிழமை இரவு அமைச்சர் பயணம் செய்த வாகனம் பரந்தன் சந்தி ஏ-9 வீதி யில் எதிரே வந்த பாதசாரியான குறித்த நபரை மோதித் தள்ளி யதில் அந்நபர் கீழே விழுந்து படுகாயமடைந்த நிலையில் கிளிநொச்சி மாவட்ட அரச வைத்தியசாலையில் சிகிச்சைக் காக அனுமதிக்கப்பட்டார்.

எனினும் அதிதீவிர சிகிச்சை யளிக்கப்பட்ட போதிலும் சிகிச்சை பலனின்றி அவர் நேற்று காலை உயிரிழந்ததாகத் தெரிவிக்கப் பட்டுள்ளது. (29)

## பனை மரம் வீழ்ந்து...

தாவது, வீட்டிற்கு மின்சாரம் எடுக்கும் வகையில் இடைஞ்சலாக இருந்த குறித்த பனை மரத்தைகுடியிருப்பாளர் தறித்துள்ளார் இன்போது எதிர்பாராத விதமாக வீதியோரமாக வந்த குறித்த பெண் மீது பனைமரம் விழுந்துள்ளது.

இதில் படுகாயமடைந்த அவர் உடனடியாக தருமபுரம் வைத்திய சாலைக்கு கொண்டுசெல்லப்பட்டு அங்கிருந்து மேலதிக சிகிச்சைக் காக கிளிநொச்சி வைத்தியசாலை அவசர சிகிச்சைப்பிரிவில் அனு மதித்தபோதிலும் சிகிச்சை பலனளிக்காமல் உயிரிழந்தார். சம்ப வம் தொடர்பாக குறித்த குடும்பஸ்தரை கைது செய்த பொலி ஸார் மேலதிக விசாரணைகளை மேற்கொண்டு வருகின்றனர்.(29)

## யுத்தகால...

களைத்தண்டிக்க வேண்டிய பொறுப்பும் கடமையும் இல ங்கை அரசுக்கு உள்ளது என் றார்.

மேலும், விடுதலைப் புலிக ளுக்கு எதிரான போரின்போது ஏற்பட்டதாகக் கூறப்படும் மனித உரிமை மீறல்கள் குறி த்து முழுமையான விசாரணை தேவை என்றும் அவர் தெரிவித் தார். இலங்கையில் தமிழர்கள் பெரும் பாதிப்புக்குள்ளான நிலையில், அந்நாட்டின் முத லீட்டுக்கு ஏன் அனுமதிக்க வேண் டும்? என்று பிரதிநிதிகளில் ஒருவர் எழுப்பிய கேள்விக்குப் பதிலளித்த சிதம்பரம், இது ஒரு மனித உரிமை மீறல்கள் விவ காரம் என்றார்.

இலங்கை அரசுக்கு கொடுக் கப்படும் நெருக்கடிக்கு, அந்நாடு பொருளாதார ரீதியில் வளர்ச் சிய அடையக் கூடாது என்பது அர்த்தம் அல்ல என்ற அவர், 'யாருமே சேவைக்காக முதலீடு செய்வதில்லை. இலாபம் பெறும அளவுக்கு வாய்ப்பு இருந்தால் மட்டுமே வெளிநாட்டினர் ஒரு நாட்டில் முதலீடு செய்வர்" என் றார்.

போர்க்குற்றங்களை காரணம் காட்டி, இலங்கையில் வெளி நாட்டு முதலீட்டைத் தடுப்பது சரியானதல்ல என்றே தாம் கரு துவதாகவும் அவர் குறிப்பிட் டார்.

## பாரபட்சம் அற்ற...

இதுதொடர்பாக அவர் மேலும் தெரிவிக்கையில்,

வரவு செலவுத் திட்டத்தின் மூலம் யுத்தத்தால் பாதிக்கப்பட்ட பிவிருத்தியில் பின்னிற்கும் பிரதேசங்களுக்கும் கூடுதல் நிதி ஒதுக்கப்பட வேண்டுமென நேற்றைய தினம் இடம்பெற்ற அமைச் சரவைக் கூட்டத்தில் ஜனாதிபதியிடம் தெரிவித்திருந்தேன்.

அதற்கு அவர் இவ்விடயம் தொடர்பான சாதகமாக பரிசீலனை செய்தவாக உறுதியளித்தார். அதேபோன்று ஜனாதிபதியால் சமர்ப் பிக்கப்பட்ட வரவு செலவுத்திட்டத்தில் கல்வி, சுகாதாரம் போன்றவற் றுக்கு பெருமளவு நிதி ஒதுக்கப்பட்டுள்ளது. இவை இரண்டிற்கு மென நிதி தேசிய ரீதியாக எவ்விதபாகுபாடுமின்றி மக்கள் நலன் சார்ந்தே ஒதுக்கப்பட்டுள்ளது. அதேபோன்று எனது அமைச்சிலுள்ள பனை அபிவிருத்தி சபைக்கு 60 மில்லியன் ரூபா ஒதுக்கப்பட் டுள்ளது.

அத்துடன் சிறுகைத்தொழில், பெண்களின் தொழில்வாய்ப்பு என்பவற்றுக்கும் நிதி ஒதுக்கப்பட்டுள்ளது. ஒட்டுமொத்தத்தில் இந்த வரவு செலவுத்திட்டத்தில் நாடுதழுவிய ரீதியில் சமமான நிதி ஒதுக்கப்பட்டுள்ளது என அவர் மேலும் தெரிவித்தார்.

## கமரூனுக்கு எதிராக....

களை மதித்து நடப்பதற்கு. இலங்கை ஒன்றும் பிரித்தானியா வின் ஆட்சியின் கீழ் இல்லை என்று ராவண பலயவின் தலைவர் இத்தகண்டே சத்ததிஸ்ஸ தேரர் தெரிவித்துள்ளார்.

இந்தப் போராட்டத்தை நடத்திய பௌத்த பிக்குகள், பிரித்தா னிய ஆட்சிக்காலத்தில் இலங்கை இருந்தபோது இடம்பெற்ற மனிதஉரிமை மீறல்களுக்கு எதிராக விசாரணை நடத்தப்பட வேண் டும் என்று கோரும் மனுவொன்றை பிரித்தானியத் தூதரக அதிகாரி களிடம் கையளித்துள்ளனர்.

## இணைத்தலை.....

தினால் வட மாகாண முதலமைசருக்கு அனுப்பி வைக்கப்பட் டுள்ளது. குறித்த கடிதத்தில் மேலும் தெரிவிக்கப்பட்டுள்ள தாவது,

நாடு பூராகவும் ஏற்றுக்கொள்ளப்பட்ட மகிந்த சிந்தனையின் அபிவிருத்தி திட்டத்தின் கீழ் அபிவிருத்தி செயல்தல், அந்த அபிவிருத்தி தொடர்பான ஆய்வுகள் செய்தல், திட்டங்களை முன்னெடுத்தல் போன்ற பலவேறு விடயங்களை அமைச்சரவை அந்தஸ்துள்ள அமைச்சர் ஒருவருடன் இணைந்து முன்னெடுப் பதற்கு எனது வாழ்த்துக்களைத் தெரிவித்துக் கொள்கின்றேன்.

இந்த ஒருங்கிணைப்புக்குழு இணைத் தலைமைப்பதவி 2013ஆம் ஆண்டிலிருந்து 2016ஆம் ஆண்டு வரை நடை முறையிலிருக்கும் என தெரிவிக்கப்பட்டுள்ளது.

## வலி. வடக்கு விவகாரம்...

திய ஊடகவியலாளர் மாநாட்டில் உறுதிப்படுத்தியுள்ளார். இப் படியாக தமிழ்த்தேசியக் கூட்டமைப்பில் உள்ள ஒரு சிலரின் நட வடிக்கை தமது மீள்குடியேற்ற குழுவின் நடவடிக்கையைப் பாதிக் கும் விதத்தில் அமைந்துள்ளதாகவும் தெரிவித்த அவர் தமது அமைப்பு கடந்த 20 வருடகாலமாக அதாவது 2001 ஆம் ஆண்டு காலப்பகுதியில் ஆர்.சி.நடராசாவைத் தலைமையாகக்கொண்டு உருவாக்கப்பட்டு வலி.வடக்கில் பல இடங்களில் மீள்குடியேறிய நடவடிக்கைக்கு பணியாற்றியிருப்பதாகவும் தெரிவித்தார்.

எனவே இவ்வாறான நடவடிக்கைகள் தமது அமைப்பின் போராட்ட நடவடிக்கையை தாமதப்படுத்தவே மேற்கொள்ளப்பட்டுள்ளது. கூட்டமைப்பின் ஒரு சிலரினால் உருவாக்கப்பட்ட இந்த மீள்குடி யேற்ற அமைப்புக்கும் தமது அமைப்புக்கும் எதுவித தொடர்பும் இல்லை என்று தெரிவித்த சுகிர்தன் வலி.வடக்கு மக்கள் தமது சொந்த இடங்களிலேயே மீள்குடியமர்த்தப்படவேண்டும். அவ்வாறு இல்லாது காங்கேசன்துறை சிமெந்து ஆலைக்குரிய காணியில் இந்த மக்கள் மீள்குடியமர்த்தப்படுவதற்கு நடவடிக்கை எடுக்கப்ப டுகின்றது.

அவ்வாறு நிகழ்ந்தால் சிமெந்து ஆலை மீண்டும் இயங்கும் போது இந்த மக்கள் மீள்குடியமர்த்தப்பட்ட இடத்தில் சுண்ணக்கற்கள் அகழ்வு நடவடிக்கை ஆரம்பிக்கும். அப்போது மக்கள் மீண்டும் அங்கிருந்து விரட்டப்படலாம். அத்துடன் சுண்ணாம்புக்கற்கள் அகழ்ந்த இடத்தில் பாரிய குழிகள் இருப்பது பொது மக்களுக்கு பாதுகாப்பான பகுதியாக இருக்காது எனவே எமது வலி. வடக்கு மக்கள் தமது சொந்தக் காணிகளிலேயே அரசினால் மீளக்குடி யமர்த்தப்படவேண்டுமெனவும் தெரிவித்தார். (பா)

## புதிய வரவு செலவு....

திட்டம் அமுல் செய்யப்படவுள்ளது. வெளிநாட்டவர்களுக்கு காணி விற் பனை செய்தால் உயர்ந்தபட்ச வரி அறவி டப்படவுள்ளது. அதேவேளை ஏற்றுமதி மூலம் நாட்டுக்கு கிடைக்கும் வருமானம் கடந்த ஆண்டைவிட அடுத்த ஆண்டு அதிகரிக்கும் என்று எதிர்வு கூறப்பட்டி ருக்கிறது.

ஜனாதிபதி தொடர்ந்து உரையாற் றும்போது,

அரச நிறுவனங்கள் தனியார் மயப்ப டுத்தப்பட மாட்டாது. அரச நிறுவனங்கள் மற்றும் வங்கிகள் ஒருபோதும் தனியார் மயப்படுத்தப்பட மாட்டாது. நாட்டில் வெளிநாட்டவர்களுக்கு காணி விற்க முடியாது. அப்படி விற்றால் இவ்வருடம் தொடக்கம் வரி அறவீட்டின் கீழ் அது இடம்பெறும்.

அரசாங்கம் கையகப்படுத்திய தனி யார் நிறுவனங்கள் பல இன்று இலா பத்தில் இயங்குகின்றன. அரச வியாபா ரங்கள் தனியார் மயப்படுத்தப்பட மாட் டாது. அரசாங்க வியாபார நிறுவனங்கள் 54 இல் 48 இலாபத்தில் இங்குகின்றது.

கற்றுக் கொண்ட பாடங்கள் மற்றும் நல்லிணக்க ஆணைக்குழு பரிந்துரை களை செயற்படுத்த நிதி ஒதுக்கீடு செய் யப்படவுள்ளது. இரு மின்உற்பத்தி நிலைய பணிகள் நிறைவு பெற்றதும் மின்சாரம் தேசிய கட்டமைப்பில் இணைக் கப்படும்

உள்நாட்டு ஏற்றுமதி வருமானத்தை 10,000 மில்லியன் அமெரிக்க டொலராக அதிகரிக்க எதிர்பார்த்துள்ளோம். கடந்த வருடம் உலக சந்தையில் எரிபொருள் விலை அதிகரிப்பால் நாட்டின் பொருளா தார வளர்ச்சி 6.4 வீதம் இருந்தது. எனி னும் இவ்வருடத்தின் முதல் காலாண்டில் பொருளாதார வளர்ச்சி 7.8 வீதம் ஆகும். காலாண்டில் 7.8 வீதம் பொருளாதார வளர்ச்சி கண்டுள்ளோம். 2016 ஆம் ஆண டில் இலங்கையின் கடன் 65 வீதம் குறையும் என்றும்,

இந்த வருடம் ஒரு இலட்சம் பட்ட தாரிகளுக்கு நியமனம் வழங்கியுள்ளோம் என்றும் அவர் தெரிவித்தார். அதேவேளை தொலைத்தொடர்பு வரி 25 வீதம் ஆக இருக்கிறது. அதில் மாற்றம் ஏற்படுத்தப் படாது என்றும் வங்கிகள் மற்றும் நிதி நிறுவனங்களில் தேசத்தை கட்டியெழுப் பும் வரி 2வீதம் அதிகரிக்கப்பட்டுள்ளது

சிறு மற்றும் பெரும்போக காலத்தில் உர மானியம் ரூ 350 ஆக இருக்கும். இலங்கை போக்குவரத்துச் சபைக்கு 1000 மில்லியன் ரூபா செலவில் 2,000 பஸ்கள் வழங்கப்படும்.

விவசாய ஓய்வூதிய திட்டத்தை 2014 ஜனவரி தொடக்கம் செயற்படுத்துமாறு யோசனை முன்வைக்கிறேன். 63 வயது இற்கு மேற்பட்ட விவசாயிகளுக்கு 1250 ரூபா வீதம் விவசாய ஓய்வூதியம் வழங் கப்படும். அதற்கு 1000 மில்லியன் அரசா ங்கம் ஆரம்ப நிவாரண நிதியாக வழங் கும்.

வடக்கு மற்றும் தெற்கில் குடிநீர், மின்சாரத் திட்டங்களை செயற்படுத்த 1400 மில்லியன் ஒதுக்கீடு செய்யப்படும். சிறு தேயிலை செய்கை தொழிலை ஊக்கு விக்க வருடாந்தம் ஒரு ஏக்கருக்கு 5000 ரூபா நிவாரணம் வழங்கப்படும். தேசிய தெங்கு தொழிலை வலுப்படுத்த எண் ணெய் இறக்குமதி மட்டுப்படுத்தப்படும். தேயிலை, இறப்பர், தெங்கு, கறுவா, மிளகு ஏற்றுமதி வலுப்படுத்தப்படும்.

உள்நாட்டு பால் உற்பத்தியை ஊக்கு விக்க 20,000 பசு மாடுகள் இறக்குமதி செய்யப்படும். 40வீதம் முழு ஆடை பால் தேவையை பூர்த்தி செய்ய முடி யாத நிலையில் இலங்கை உள்ளது. கால நடை வைத்தியர்களுக்கு மாதாந்தம் 7500 ரூபா மேலதிக கொடுப்பனவு வழங் கப்படும். வெண்ணெய் மற்றும் தயிர் இறக்குமதிக்கு வரி விதிக்கப்படும்

கர்ப்பிணி மற்றும் தாய்மார்களின் போசனை அதிகரிக்கப்பட வேண்டும் தேசிய பால் மற்றும் முட்டை பாவனை யை அதிகரிக்க திவிநெகும மற்றும் சமுர்த்தித் திட்டம் பயன்படுத்தப்பட வேண்டும் என்றும் அவர் தெரிவித்தார்.

திவிநெகும திட்டத்தின் கீழ் 125,000 பண்ணைகள் அமைத்து ஒவ்வொரு பண்ணை உரிமையாளர்களுக்கும் மாதா ந்தம் 10,000 ரூபா ஊக்குவிப்பு கொடுப் பனவு வழங்கப்படும் தளபாடங்கள் போக்குவரத்து திட்டத்தை இரத்து செய்ய அனுமதி. முடிந்தளவு உள்நாட்டு உற்பத்தி மரத்தளபாடங்களை பயன் படுத்த விழிப்புணர்வு வழங்கப்படும்.

68 வயதிற்கு மேற்பட்ட பெண்களின் தொழில் முயற்சிக்கு வட்டி இல்லாத கடன் மற்றும் சலுகைகள் வழங்கப்படும். 250,000 ரூபாவிற்கு மேல் இவர்களுக்கு கடன் வழங்கப்படும் கொழும்பு உள் ளிட்ட ஏனைய பகுதிகளில் உள்ள பிர தான வைத்தியசாலைகளை அபிவி ருத்தி செய்வதன் மூலம் நெரிசலை குறைக்க முடியும்.

மஹரகம புற்றுநோய் வைத்திய சாலையில் புற்றுநோயாளி சிகிச்சை பெற 3 வருடங்கள் வரிசையில் நிற்க வேண்டும். அதனை 6 மாதங்களாக குறைக்க நடவடிக்கை எடுக்கப்படும். வைத்தியசாலை ஊழியர்களுக்கான சீருடை கொடுப்பனவு 500 ரூபாவில் இருந்து 1500 ரூபாவிற்கு அதிகரிக்கப் படும் இலங்கையின் இரண்டு பெரிய சிறுவர் வைத்தியசாலைகள் ஆய்வு மத் திய நிலையமாக விரைவில் மாற் றப்படும்.

கலைஞர்களுக்கு சுதந்திரமாக பணி யை தொடர ஐந்து ஓய்வு விடுதிகளை அமைக்க தீர்மானித்துள்ளோம். அதற் கான காணியும் ஒதுக்கப்படும். பிரி வெனா கல்வி நவீனமயப்படுத்தப்பட்டு அனைத்து பிரிவெனா ஆசிரியர்களும் ஏனைய ஆசிரியர்கள் பெறும் சலுகை களை பெறுவர்

பல்கலைக்கழக மாணவர்களின் விடுதி பிரச்சினைக்கு தீர்வு காணும் வகையில் 15000 பில்லியன் ஒதுக்கீட்டில் புதிய விடுதிகளை அமைக்க நடவடிக்கை எடுக் கப்பட்டு வருகிறது. இதன்மூலம் முதலாம் இரண்டாம் வருட மாணவர்களின் விடுதி பிரச்சினை தீர்க்கப்படும். பல்கலைக்கழக விரிவுரையாளர்களுக்கு கல்விக் கொடுப் பனவு 5வீதம் அதிகரித்து வழங்கப்படும் நாட்டின் தகவல் தொழிநுட்ப அறிவை வளர்த்துக் கொள்ள அம்பாந்தோட்டை தகவல் வலயம் அமைக்கப்படும். நென சல மத்திய நிலைய திட்டத்தை விரிவு படுத்தி இணைய வசதிக்கு 1000 பில்லி யன் ஒதுக்கப்பட்டும்.

கடற்படை மற்றும் கடல்சார்ந்த பல் கலைக்கழகம் நிறுவப்படும். நகர்புற தொழிலாளர்களின் வீட்டு வசதிக்கு சலு கைக்கடன் வழங்கப்படும். கொழும்புக்கு இணையாக கண்டி, காலி, அநுராதபுரம், யாழ்ப்பாணம், இரத்தினபுரி, திருகோண மலை நகரங்கள் அபிவிருத்தி செய்யப் படும். சட்டம் மற்றும் நீதித்துறை சேவை களை மேம்படுத்த ஐந்து ஆண்டு திட்டம் வகுக்கப்படும். இலங்கையில் சர்வதேச நடுவர் மையம் அமைத்து அபிவிருத்தி செய்யப்படும் அரச ஊழியர்களின் மாதா ந்த வாழ்வாதார கொடுப்பனவு 2014 ஜனவரி தொடக்கம் 1200 ரூபா அதிகரிக் கப்படும்

தனியார் துறை ஊழியர்களுக்கும் இவ்வாறு அதிகரிக்கப்பட வேண்டும். அதற்காக தேசிய சம்பள திட்டமும் தயா ரிக்கப்படும் என்றும் நீதிபதிகளுக்கான தனிப்பட்ட கொடுப்பனவு 8 வீதம் அதிக ரிக்கப்பட உள்ளது என்றும் சிறுவர் மற் றும் பெண்கள் பாதுகாப்பு பணியகத் திற்கு 300 மில்லியன் ரூபா ஒதுக்கப் பட்டிருப்பதாகவும், ஜனாதிபதி தனது வரவு செலவுத் திட்ட உரையில் குறிப் பிட்டார்.

# இந்திய மீனவர்கள் 20 பேர் அனலைதீவுக் கடலில் கைது



அணலைதீவிற்கு வடக்காக நேற்று அதிகாலை அத்துமீறி மீன்பிடியில் ஈடுபட்டி ருந்த இந்திய புதுக்கடை மாவட்டத்தைச் சேர்ந்த 20 மீனவர்கள் அவர்களது ஐந்து படகுகளுடன் இலங்கை கடற்படையினரினால் பிடிக்கப்பட்டு நேற்று முற்பகல் யாழ்.மாவட்ட கடற்றொழில் நீரியல் வழத்திணைக்கள அதிகாரியிடம் கையளிக்கப்பட்டனர்.

நேற்று அதிகாலை சுமார் ஐந்து இழுவைபடகுகளில் அத்துமீறி கடற்றொழிலில் ஈடுபட்டிருந்த இவர்களையும் இவர்கள் பயணித்த இழுவைப்படகுகளையும் காங்கேசன்துறை கடற்படையினரும் கடலோரக் காவல் படையினரும இணைத்து பிடித்திருப்பதாக தெரிவிக்கப்படுகின்றது.

இவர்களது படகுகள் கடற்படையினரால் காங்கேசன் துறை முகத்தில் தடுத்து வைக்கப்பட்டுள்ளது. இவ் இந்திய மீனவர்கள் நேற்று நண்பகல் யாழ். கடற்றொழில் நீரியல்வழத் திணைக்களத்திற்கு அழைத்து வரப்பட்டு அவர்களுக்கு தேவையான உணவு உள்ளிட்ட வசதிகள் செய்து கொடுக்கப்பட்டதன் பின்னர் அவர்கள் அனைவரையும் பிற்பகல் மல்லாகம் நீதிமன்றத்தில் முற்படுத்த நடவடிக்கை எடுக்கப்பட்டதாக யாழ் கடற்றொழில் நீரியல்வளத் திணைக்களத்தின் உதவிப் பணிப்பாளர் ந.கணேசமூர்த்தி தெரிவித்தார்.

இவ்விடயம் குறித்து அவர் மேலும் தெரிவிக்கையில் இந்த வருடம் இவ்வாறு 36 இந்திய மீன்பிடி இழுவைப்படகுகளும் 129 மீனவர்களும் யாழ்.குடா கடற்பரப்பில் அத்துமீறி மீன்பிடியில் ஈடுபட்டபோது பிடிக்கப்பட்டி ருப்பதாகவும் இவற்றில் 27 படகுகள் தடுத்து வைக்கப்பட்டிருப்பதுடன் 65 மீனவர்கள் தடுத்து வைக்கப்பட்டு இருப்பதாவும் 17 படகுகளுக்கான விசாரணைகள் நடைபெற்று வருவதாகவும் தெரிவித்தார்.

மேலும் இந்த வருடம் ஏழாவது தடவையாக இந்திய மீனவர்கள் இழுவைப் படகுகளுடன் பிடிக்கப்பட்டிருப்பதாகவும் தெரிவித்தார்.

இதேவேளை கைதான இந்திய மீனவர்களை எதிர்வரும் 4 ஆம் திகதி வரை விளக்கமறியலில் வைக்குமாறு மல்லாகம நீதிமன்ற நீதவான் ஜே.கஜநிதிபாலன் நேற்றைய தினம் உத்தரவிட்டார். (பா)

# எல்லைதாண்டும் மீனவர் விவகாரம் தீர்வுகாண ஐரோ.ஒன்றியம் உதவி

இலங்கைக் கடலில் எல்லை மீறிவந்து மீன் பிடிப்பவர்களை தடுக்க இந்தியா தவறியுள்ளமைக்கு எதிராக சர்வதேச நடவடிக்கை எடுக்க வேண்டுமென கடற்றொழில் பிரதியமைச்சர் வலியுறுத்தும் நிலைமையில், இலங்கையும் இந்தியாவும் இருபக்கத்துக்கும் திருப்தியான முறையில் இப்பிரச்சினைக்கு தீர்வுகாண்பதை தாம் ஊக்குவிப்பதாக ஐரோப்பிய ஒன்றியம்

தவறான மீன்பிடி முறைகள் பற்றி இலங்கையை எச்சரித்த ஐரோப்பிய ஒன்றியம் சட்டத்தை மீறி இந்தியா மீன்பிடித்தல் பற்றி மௌனம் காப்பது ஏன் என பிரதியமைச்சர் சரத் குமார குணரத்ன நாடாளுமன்றில் கேள்வி எழுப்பியிருந்தார்.

இதுபற்றி ஐரோப்பிய ஒன்றியத்தின் உயர்ஸ்தானிகர் டேவிட் டேலி கருத்து வெளியிடுகையில், இந்த பிரச்சினை இருதரப்பு பிரச்சினையாக இருப்பதால் அந்த மட்டத்திலேயே அது தீர்க்கப்பட வேண்டுமென கூறியுள்ளார்.

## மின்தடை பற்றிய அறிவித்தல்

மின்பரிமாற்றல் வலையமைப்பில் இணைப்புகளை சீர்செய்வதற்காககவும், பராமரிப்பு மற்றும் கட்டமைப்பு வேலைகளுக்காகவும் 23.11.2013 சனிக்கிழமை காலை 08.30 மணியிலிருந்து மாலை 5.30 மணி வரை உரும்பிராய், கோண்டாவில், மருத்துவபீடப் பிரதேசம், திருநெல்வேலிப்பிரதேசம், கந்தர்மடம், ஆரியகுளம், ஸ்ரான்லி வீதி, வேம்படிப் பிரதேசம், கொன்வெண்ட் பிரதேசம், பிரதான வீதி பட்டணப்பகுதி நீங்கலாக யாழ்.மாநகரசபைப்பகுதி, ஸ்ரான்லி வீதி, கலட்டி, தட்டார்தெரு, மனோகரா, கஸ்தூரியார் வீதி, குருநகர், ஆடியபாதம் வீதிப் பிரதேசம், மாதகல், அளவெட்டி, இளவாலை, மெய்கண்டான், மாரிசன்கூடல், வித்தகபுரம் ஒரு பகுதி, கீரிமலை ஒரு பகுதி, பெரியவிளான், நுணாவில், வேம்பராய், சரசாலை, மட்டுவில், சுன்னாகம், கரந்தன், நீர்வேலி, சிறுப்பிட்டி, கோப்பாய், இருபாலை, கட்டைப்பிராய், கல்வியங்காடு, கந்தரோடை, மாகியப்பிட்டி, பண்டத்தரிப்பு, இளவாலை, சங்கானை, மாதகல், வட்டுக்கோட்டை, சுழிபுரம், அராலி, மூளாய், காரைநகர் பிரதேசம், தீவகப் பிரதேசம் ஆகிய இடங்களிலும் தடைப்படும் என மின்சார சபை அறிவித்துள்ளது.

# 6 விக்கெட்டுக்களால் வெற்றிபெற்றது இந்தியா



(கொச்சி)

மேற்கிந்தியத்தீவுகள் அணிக்கெதிரான முதலாவது ஒரு நாள்போட்டியில் இந்திய அணி ஆறு விக்கெட்டுக்களால் வெற்றி பெற்றது.

இந்திய, மேற்கிந்தியத்தீவுகள் அணிகளுக்கிடையிலான மூன்று போட்டிகளைக் கொண்ட ஒரு நாள் தொடரின் முதல் போட்டி நேற்று கொச்சியில் நடைபெற்றது. நாணயச் சுழற்சியில் வெற்றி பெற்று முதலில் ஆடிய மேற்கிந்தியத்தீவுகள் அணி 48.5 ஓவர்கள் நிறைவில் சகல விக்கெட்டுக்களையும் இழந்து 211 ஓட்டங்களைப் பெற்றது. இதில் சார்ள்ஸ் 42, சாமுவேல்ஸ் 24, டரன் பிராவோ 59, சிமன்ஸ் 29 ஓட்டங்களைப் பெற்றனர். பந்துவீச்சில் சுரேஷ் ரெய்னா, ஜடேஜா தலா மூன்று விக்கெட்டுக்களைக் கைப்பற்றினர்.

பதிலுக்கு 212 ஓட்டங்களைப் பெற்றால் வெற்றி என்ற நிலையில் களமிறங்கிய இந்திய அணி முதல் விக்கெட்டை 17 ஓட்டங்களைப்பெற்ற வேளை இழந்து தடுமாறியது.

இந்நிலை யில் இரண்டாவது விக்கெட்டுக்காக இழந்த ஹோலி ரோகித் சர்மா இணை சிறப்பாக ஓட்டங்களை வாரிக் குவித்தது. இந்த ஜோடி 133 ஓட்டங்களைப் பெற்றவேளை பிரிக்கப்பட்டது. இறுதியில் இந்திய அணி 35.2 ஓவர்கள் நிறைவில் நான்கு விக்கெட்டுக்களை இழந்து வெற்றியிலக்கை அடைந்தது. இதில் ஹோலி 86 ஓட்டங்களைப் பெற்றார்.

இதன் மூலம் குறைந்த போட்டிகளில் 5000ஆயிரம் ஓட்டங்களைப் பெற்ற வீரர் என்ற சாதனையை சமன் செய்தார். அதாவது 114 இனிங்ஸ்களில் ஆடியுள்ள ஹோலி நேற்றைய தினம் 81 ஓட்டங்களைப் பெற்ற வேளை 5000 ஓட்டங்களைக் கடந்தார்.

மேற்கிந்தியத்தீவுகள் அணியின் அதிரடி வீரர் றிச்சர்ட் 114 இனிங்ஸ்களில் 5000ஆயிரம் ஓட்டங்களைக் கடந்திருந்தார். ஒரு நாள் அரங்கில் மேற்படி இருவரும் விரைவாக 5000 ஆயிரம் ஓட்டங்களைக் கடந்த வீரர்கள் என்ற சிறப்பை பகிர்ந்துள்ளனர். மற்றும் ரோகித் சர்மா 72 ஓட்டங்களைப் பெற்றார்.

பந்து வீச்சில் கோல்டர் இரண்டு விக்கெட்டுக்களைக் கைப்பற்றினார். போட்டியின் ஆட்டநாயகனாக ஹோலி தெரிவு செய்யப்பட்டார்.

# கொழும்பு பிரகடனத்தில் அழுத்தத்துக்கு இடமில்லை



பொதுநலவாய மாநாட்டில் இறுதியில் ஜனாதிபதி மகிந்த ராஜபக்ஷவினால் கைச்சாத்திடப்பட்ட கொழும்பு பிரகடனத்தில் எந்தவொரு பகுதியிலும் மனித உரிமைகள் விவகாரம் தொடர்பில் இலங்கைக்கெதிராக அழுத்தம் கொடுக்கக் கூடிய எந்தவொரு கருத்துக்களும் இடம்பெற்றிருக்கவில்லையென அமைச்சர் தினேஷ் குணவர்தன தெரிவித்தார்.

இலங்கை வந்த பிரிட்டிஷ் பிரதமர் கமரூன் தனிப்பட்ட ரீதியாகவே இலங்கையின் மனித உரிமைகள் விவகாரம் குறித்து தனது கருத்துக்களை முன்வைத்துச் சென்றாரேயொழிய, அவரது கருத்துக்களுக் கும் கைச்சாத்திடப்பட்டுள்ள கொழும்பு பிரகடனத்துக்கும் எவ்வித தொடர்புமில்லை.

ஜனாதிபதி கொழும்பு பிரகடனத்தில் கைச்சாத்திட்டதன் மூலம், பிரிட்டிஷ் பிரதமர் மனித உரிமைகள் விசாரணை மற்றும் சர்வதேச விசாரணை தொடர்பில் இலங்கைக்கெதிராக விடுத்த அழுத்தத்திற்கு, இலங்கை அரசாங்கம் இணங்கியிருப்பதாக ஐக்கிய தேசியக் கட்சியினர் பொய்ப் பிரசாரங்களை முன்னெடுத்து வருகின்றனர். இன்னுமொரு நாட்டிற்குள் வந்த பிரிட்டிஷ் பிரதமர் கமரூன் உள்ளிட்ட அவரது பிரதிநிதிகள் பிரிட்டிஷ் கலாசாரத்துக்கு முரணான வகையில் நடந்து கொண்டுள்ளார்கள் என்றால் அதற்குக் காரணம் வெளிநாடுகளில் வசிக்கும் புலம்பெயர் வாழ் தமிழர்களின் தவறான வழி காட்டலேயென்பது இச்சந்தர்ப்பத்தின் மூலம் எமக்கு தெட்டத் தெளிவாகியுள்ளது.

எது எவ்வாறாயினும் பிரிட்டிஷ பிரதமர் கமரூனின் கருத்துக்களை நாம் கடுமையாக ஆட்சேபிக்கிறோம். அவர் இலங்கையில் தெரிவித்துச் சென்ற கருத்துக்கள் பொதுநலவாய அரச தலைவர்கள் மாநாட்டிற்குரியதல்ல.

டயஸ்போராக்கள் கூறுவதனையும், சித்திரிப்பதனையும் தம் மனக்கண்முன் காட்சிப்படுத்திப் பார்த்த பிரதமர் கமரூன் தனது தனிப்பட்ட அபிப்பிராயமாகவே கருத்துக்களை முன்வைத்துச் சென்றுள்ளார்.

ஆனால் இந்தக் கருத்துக்களுக்கும் கைச்சாத்திடப்பட்டுள்ள கொழும்பு பிரகடனத்துக்கும் எவ்வித தொடர்புகளும் இல்லை. பிரகடனத்தின் எந்தவொரு பகுதியிலும் கமரூன் மட்டுமின்றி இலங்கைக்கெதிராக அழுத்தம் கொடுக்கும் எந்தவொரு நாட்டின் அபிப்பிராயங்களும் அதில் பொதுநலவாயத்தின் அனைத்து நாடுகளுக்கும் பொதுவானதொரு பிரகடனமாகுமென்பதனை மக்கள் புரிந்து கொள்ள வேண்டும்.

இலங்கையின் அனைத்துப் பாகங்களிலும் முன்னெடுக்கப்பட்ட அபிவிருத்தியினை நாம் கண்டு உணர்ந்துள்ளோம். இந்நிலையில் எமது நாட்டின் ஜனநாயகம் மட்டுமன்றி பொதுநலவாயத்தில் அங்கம் வகிக்கும் அனைத்து நாடுகளதும் சுதந்திரம மற்றும் அபிவிருத்தியை நோக்காகக் கொண்டு எமது ஜனாதிபதி செயற்பட வேண்டும். இதற்குத தடையாகவுள்ள சர்வதேச சூழ்ச்சிகளை முறியடிக்க நாம் ஜனாதிபதியவர்களின் கரங்களைப பலப்படுத்தும் வகையில் செயற்படுவோமெனவும் அமைச்சர் தெரிவித்தார்

# சம்பள உயர்வு அறிவிப்பு அரசின் ஏமாற்றும் வித்தை

## ஜோசப் ஸ்ராலின் தெரிவிப்பு

(கொழும்பு)

ஆசிரியர்களுக்கான 1,200 ரூபா கொடுப்பனவு ஏமாற்றமளிக்கின்றது என இலங்கை ஆசிரியர் சங்கத்தின் பொதுச செயலாளர் ஜோசப் ஸ்ராலின் தெரிவித்தார்.

அதிபர் மற்றும் ஆசிரியர்கள் எதிர்பார்த்த சம்பள அதிகரிப்பினை வழங்காமல் 1,200 ரூபா கொடுப்பனவு மாத்திரம் வழங்கி அவர்களின் எதிர்பார்ப்புக்களை அரசாங்கம் வீணடித்துள்ளதாகவும் அவர் குறிப்பிட்டார்.

ஜனாதிபதி மஹிந்த ராஜபக்ஷவினால் நேற்று வியாழக்கிழமை நாடாளுமன்றத்தில் சமர்ப்பிக்கப்பட்ட 2014ஆம் ஆண்டுக்கான வரவு செலவு திட்டத்தில் அதிபர் மற்றும் ஆசிரியர்க ளுக்கு எதிர்வரும் ஜனவரி மாதத்திலிருந்து ரூபா 1,200 கொடுப்பனவு வழங்குவதாக குறிப்பிடப்பட்டிருந்தது.

இது தொடர்பாக கருத்துத் தெரிவிக்கும் போதே ஆசிரியர் சங்க பொதுச் செயலாளர் மேற்கண்டவாறு தெரிவித்தார்.


JCB, BACKHOE

இயந்திரம் வாடகைக்கு உண்டு

கட்டடங்கள் இடித்து அகற்ற, காணிகள் துப்பரவு வெய்வதற்கு மணித்தியாலய அடிப்படையில் வாடகைக்கு விடப்படும்.

தொடர்பு: 077 4150 799, 077 2605 718

(C/3199)


## யாழ்.நகரில் களைகட்டும் நத்தார் வியாபாரம்

யாழ்.நகரப்பகுதியில் நத்தார் கால வியாபாரம் களைகட்ட ஆரம்பித்துள்ளது.

கிறிஸ்தவர்களின் முக்கிய பண்டிகையான நத்தார் பிறப்பைக்கொண்டாடும் வகையிலான பொருட்களின் விற்பனை ஆரம்பமாகியுள்ளன. (இ)

இப்பத்திரிகை இல.373 பிரதான வீதி, யாழ்ப்பாணம் என்னும் முகவரியில் அமைந்துள்ள அற்புதன் அச்சகத்தில் 2013 நவம்பர் 22 ஆம் திகதி அச்சிட்டு வெளியிடப்பட்டது.